Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஏப்.14-20,1996

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 149



இரத்தம் சிந்தும்
இரத்தின துபீபம்,
மனிதம்மடியும்
மாங்காய்த் தீவு

வெண்புறா இங்கே
வருவதெப்போ
வசந்தம் நமக்கு
தருவதெப்போ?

இனிய புத்தாண்டே
உதயம் தருவாயோ!

## சந்திரிக்கா + பிரபா

## புத்தாண்டும் புதிய சவால்களும்



## ஒரு நடிகையின் புலம்பல்

குறிப்புக்கள்

கிரிக்கெட்டில் சூது

## பணமழை பொழியும் தமிழகத் தேர்தல்!

# முரசம்

## யுத்தக் கருவறையிலிருந்து

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வழக்கம் போல்- முன்கூட்டியே
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

சமாதானம் மலரட்டும்
என்று-புளித்துப் போன
சம்பிரதாய வார்த்தைகள்
சொல்ல ஆசையில்லை!

நாட்டு நிலவரமறிந்தும்
நம்மை நாமே
ஏன் ஏமாற்றிக்கொள்ளவேண்டும்?
புத்தாண்டு வாழ்த்தோடு
பொய்யை ஏன் சொல்லவேண்டும்?

சென்ற ஆண்டின்
யுத்தக் கருவறையிலிருந்துதான்
புதிய ஆண்டு பிரசவமாகிறது!
தாயைப் போலத்தான்
இந்தப் பிள்ளையும் இருக்குமா?

"எந்தக் குழந்தையும்
நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே!"
என்பது நூறு வீத உண்மை!

வந்து வாழும் சூழ்நிலைதானே
வளரும் குழந்தையின்
எதிர்காலத்தை தீர்மானிக்கிறது!

இங்கே-சூழ்நிலை
எரியும் நெருப்புக்கு
எண்ணெய் ஊற்றுவதாக இருக்கிறது!

யுத்தத்தை தவிர வேறெதுவும்
வளர முடியாத பூமியாக
மாங்காய்த்தீவு மாறிக்கொண்டிருக்கிறது!

சூழ்நிலையை எப்படி மாற்றுவது
என்று திட்டமிடுவதைவிட
இதே சூழ்நிலையை வைத்துக் கொண்டு
குளிர்காய்ந்து கொள்வது எப்படி
என்றுதான்- தென்னிலங்கை
அரசியல்வாதிகள் ஆலோசிக்கிறார்கள்!

இனப்பிரச்சனையின் தீர்வு என்பது
பெரும்பான்மை இனம்
தருவதை மறுப்பில்லாமல்
பெறுவதுதான் என்று
தமிழ் பேசும் மக்களுக்கு
போதிக்கப் பார்க்கிறார்கள்!

தானம் தரப்படும் மாட்டின்
பல்லைப் பிடித்துப் பார்க்குமளவுக்கு
தமிழ் பேசும் மக்கள்
நாகரிகம் தெரியாதவர்களல்ல!

உரிமைகளை
தானமாக கேட்குமளவுக்கு
தமிழ் பேசும் மக்கள்
உணர்வெழுச்சி இல்லாதவர்களுமல்ல!

பிரச்சனைகள் என்பவை
பேசித் தீர்க்கப்படவேண்டியவை.
பேச்சில் ஈடுபடும் தரப்புக்கள்
தமக்குள் சமமானவையாக
இருந்தால் மட்டுமே
தீர்வுகள் திணிப்பாக இருக்காது!

எஜமானனும்-அடிமையும்
என்ற நிலையில்
பேச்சு நடத்தினால்
எஜமான் சொல்வதைத்தான்
அடிமை அங்கீகரிக்க வேண்டும்!

அடிமை முரண்டு பிடித்தால்
எஜமானுக்கு கோபம் வரும்!
"யாரிடம் கேட்கிறாய் உரிமை?
தருவதை வாங்குவது புத்திசாலித்தனம்.
மறுத்தால் உதைபடுவாய்!"
என்று எஜமான் மிரட்டுவார்.

கடந்த காலத்தில்
எஜமானர்களாக தம்மைக் கருதிய
தென்னிலங்கை அரசியல் தலைவர்களின்
பேச்சுக்களும், செயல்களுமே
போரே தீர்வென்ற முடிவுக்கு
தமிழர்களை ஆதரவளிக்க வைத்தன!

தற்போதும் கூட
எஜமான மனப்போக்கு
மாறவில்லையென்றால்;
இந்த நாட்டின் தலைவிதி
போர்தான் என்பதை
யார்தான் மாற்றமுடியும்?!

அதனால்தான்-
புதிய புத்தாண்டுக் குழந்தையும்
கெட்ட போரிடும் சூழலால்
பாதிக்கப்பட்டு-
ஆரோக்கியமின்றித்தான் வளருமோ
என்று ஆதங்கப்படவேண்டியிருக்கிறது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆசை—பேராசை

உலகாயதம்-ஆன்மீகம் என்னும் இரண்டு வேறுபட்ட தன்மைகள் மனிதனை அலைக்கழித்து வருகின்றன. பொதுவாக மக்கள், உடலைப் பற்றியும் உலகைப் பற்றியுமே அதிக அக்கறை காட்டி வருகின்றனர். மனத்திருப்தி அற்ற நிலையில் உலக சம்பத்துகளைப் பெருக்கிக் கொள்ளவே முனைகின்றனர். பேராசை, பலம், சக்தி, அடக்குதல், மேலாக வாழ்தல் போன்றவற்றையே எதிர்பார்க்கின்றனர். இவை யாவற்றிற்கும் மூல காரணம் 'போதும் என்ற மனம் இல்லாமையே'-ஆம்- பண ஆசையும், பதவியாசையும், அதிகார ஆசையும் எந்த அளவு உலகில் தாண்டவமாடுகிறது என்பது நாமறிந்ததே எனவேதான்-

"போதும் என்கிற மனதுடனே கூடியதேவபக்தியே மிருந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை; இதிலிருந்து ஒன்றும் கொண்டு போவதுமில்லை. உண்ணவும் உடுக்கவும் உண்டாயிருந்தால் அதுபோதுமென்றிருக்கக் கடவோம்" (தீமோ:6:6-8)

ஆம். ஆன்மீக வாழ்க்கைக்கு போதுமென்றமனமும் பிரதானமானது. உலகிலுள்ள இயற்கைப் பொருள்கள் ஒருவருக்கல்ல; எல்லாருக்கும் உரிமையானவை என்ற உணர்ச்சி பிறக்கவேண்டும். பொதுவுடமைத் தத்துவம் பொலிவு பெற வேண்டும்.

"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பல வித இச்சைகளிலும் விழுகிறார்கள்." (தீமோத்:6:9) எனவே நாம் செய்ய வேண்டியதென்ன? "ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும் தாராளமாய் கொடுக்கிறவர்களாகவும், உதார குணமுள்ளவர்களாக இருக்க அவர்களுக்குக் கட்டளையிட வேண்டும்." (தீமோ:6:18) நம்மாலானவைகளை செய்வது நம் கடமையாகும்.

ஏ. பி.வி. கோமஸ்.

## ஆன்மீகம்



### அண்ணல்நபி(ஸல்) அருளிய அமுதவாக்குகள்

★ அறிவாளியின் கரங்களிலுள்ள எழுதுகோலானது போர் வீரனின் வீர வாளைவிட மிகவும் புனிதமானது.

★ அறிஞர்களுடன் அமருங்கள். ஞானவான்களின் உபதேசங்களைக் கேளுங்கள். இவை வரண்ட பூமியை மழை நீரால் உயிர் பெறச் செய்வது போன்று இருண்ட உள்ளத்தை பிரகாசிக்கச் செய்யும்.

★ இல்லற வாசியாக இருக்க வேண்டும். ஆனால் இல்லறத்துக்கு அடிமையாகி விடக்கூடாது.

★ உம்மை நீக்கி வாழ்பவருடன் சேர்ந்து வாழும்; உமக்கு தீங்கு செய்வோருக்கு நன்மையே செய்யும்; இச்செயலானது உம்மை ஓர் அழகுள்ள மனிதனாக்கிவிடும்.

★ உங்கள் பணங்காசுகளைக் கொடாவிட்டாலும் மனிதர்களுக்கு உங்கள் நற்குணங்களையாவது கொடுத்துதவுங்கள்.

★ எல்லாச் சொத்தையும் விட, தன் 'நா'விடம்தான் அதன்சொந்தக்காரன் மிகவும் அஞ்ச வேண்டும்.

★ என்றும் குறையாத ஆசையுடையவர் இருவர்; அறிவாசைபிடித்தவரும் உலக ஆசைபிடித்தவரும் ஒருபோதும் திருப்தியுறுவதில்லை.

★ ஒருவர் சமாதானத்துக்கு வந்தால் அதற்கு இணங்க வேண்டும். ஆனால் ஏமாந்து விடக்கூடாது.

தொகுப்பு:- செல்வி. ஏ.எல். நஸீரா-புல்மோட்டை.

## கவிதைப்போட்டி இல—146

### பரிசுக்குரிய கவிதை

### இழப்பதற்கு?

ரவுண்டப் 'பில்' மூத்தமகன்
ஷெல் வீச்'சில்' கணவன்
படையெடுப்'பில்' உடமைகள்
இனி இழப்பதற்கு எதுவுமில்லை!

எஸ். கலா மகன், கல்முனை-01.

## கவிதைப் போட்டி இல-149



### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

**மீண்டும் மலர்வாயோ?**

முழுநிலவு தேய்ந்து பின்
மறுபடியும் வளருதல் போல்
அழுதுழலும் மலரே! நீ
அலருவாயோ மீண்டும்?

ச. மகாலிங்கம்,வெலிமடை குரூப்-வெலிமடை..

**எண்ணிக்கை ஏற்றம்.**



கருவைச் சுமந்தவள்
கதறியழுதாலும்
வாரிசைத்தந்தவன்
வரவாபோகின்றான்?
போர் தேசத்தில்
ஒரு விதவையும்
அகதி முகாமில்
இரு அகதிகளும்
எண்ணிக்கையில்
ஏறிவிட்டார்கள்!

ஆர். பாலகிருஷ்ணன், மாத்தளை.

**என்ன லாபம்?**

நாம் துடிப்பதைக்
கண்டு ரசிப்பதில்
யாருக் கின்பமோ?
எமக்குக் கொள்ளி சொருகி
உச்சி குளிர்தலில்
என்ன லாபமோ?

பீ. எம். எம். அன்ஸார்,
பு-தெ-வெலிகம.

**கடை வீதியில்....**

சுட்டவர் யாரோ;
சுடப்பட்டவர் யாரோ;
வானூர்தி வடிவில்வந்த
காலன் கண்ணில்
பட்டது மட்டும்
உன் புருசன் தானேயம்மா!

ஸ்ரீபதி ரவீந்திரநாத்,
அக்கரைப்பற்று-07.

**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 20.04.1996.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 149.
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**அந்தரத்தில் ஓர் ஊஞ்சல்**

வாழவந்த வாழ்க்கையின்று
கசந்து போனதென்ன?
கண்ணீரைத் தான் வாழவிட்டு
காலங்கள் கரைவதென்ன?
அந்தரத்தில் ஊஞ்சல் கட்டி
ஆடுகின்ற வாழ்வுமென்ன?"

தெ. றஞ்ஜனா, இறம்பைக்குளம்-வவுனியா.

**தேசிய கீதம்**

தாயே!
அழு! அழு!
அழுது கொண்டே இரு!
அழுகை மட்டுமே- நம்
தாய் மொழியில்
பாடக்கூடிய
தேசிய கீதம்.

எஸ்.ஜெ. ஸ்ரீ சங்கர்-மன்னம்பிட்டிய.

**மொட்டை!**

அப்பாவைச் சிதறுகாயடித்து
துப்பாக்கிச் சங்கூதி...
போரெனும் நேர்த்திக்கடன் தீர்க்க
எதிர்காலத்தையும் சேர்த்து....
மொட்டையடித்தார்கள்.

கொக்காகல- எஸ்.பிரபா.

**எதிர்காலம்(?)**

இவள் சிந்தும் கண்ணீர்
என்றோ ஒருநாள்
குழந்தை வடிவாய்
"எழுந்து நிற்கும்;"
கேள்விகள் கேட்கும்.....!

சுபா வரன்-கண்டி.

**குடிபெயர்ந்து.....!**

இடிவிழுந்த யுத்தமதால்
குடிபெயர்ந்து...
குடி பெயர்ந்து- எங்கள்
குடியே மூழ்குதடா மகனே!

பாண்டியூர்-பொன்.நவநீதன்.

**விளைவு**

இனிதான தேசமண்ணில்
இனவாத விதை விழுந்து
போர்ப்பயிர் விளைய
அறுவடை செய்கிறார்கள்-
அழிவுகளையும் அழுகையையும்.

பூ. இதயரெத்தினம்- ஆரையம்பதி-03.

## வாசக(ர்) சாலை

கார்லோஸ் தொடர் விறுவிறுப்பாக செல்கிறது. ராஜேந்திரகுமாரின் 'நீ நீயா' வாரா வாரம் சஸ்பென்ஸ் வெடி. சபாஷ் முரசே!

ஆர். மாலதி-வவுனியா.

'நீ.. நீயா' சுவையோடு திரில் கலந்து படைக்கிறார் மர்மக்கதை மன்னன். கதையை படிக்கும்போது ராஜேந்திர குமார் இன்றில்லையே என்னும் கவலையும் மனதை வாட்டுகிறது.

எஸ். சஹாப்தீன்-காத்தான்குடி.

கொலையாளி யார் என்பதை அறிய முடியாதளவுக்கு புதிர் முடிச்சுக்களை பின்னித்தள்ளுகிறார் ராஜேந்திர குமார். அறிய மனம் துடிக்கிறது.

பாஸ்கரன் மகேஸ்வரி-புத்தளம்.

காதிலை பூ கந்தசாமியின் கற்பனைச் சந்திப்பு, நீ! நீயா! திகில் தொடர்கதை. புதிய அறிமுகங்கள் அனைத்தும் சூப்பர். உண்மைகளை உடனுக்குடன் எழுதும் நாரதருக்கும் எனது பலகோடி வாழ்த்துக்கள்.

சாய்ந்தமருது-பைறோஸ்.

**வீரப் பெண்கள்**

வாரா வாரம் ரசிகன் தரும் இலக்கிய நயம் பிரமாதம். 'கல் இட்ட சாபம்' என்ற இலக்கிய நயத்தில் அகலிகையின் வசனங்கள் சூப்பர். மறுபுறம் உணர்ச்சி வசப்பட்ட இயக்குநருக்கு ஊர்வசி இட்ட 'அறை' 'வொண்டபுல்.'

சரவணேஸ் டெயிசி, பத்மா டெயிசி-கலவான.

அன்பின் தினமுரசே! கிரிக்கெட்டை பற்றிய செய்திகள் பிரமாதம். அதிலும் கிரிக்கெட் வீரர்களின் புகைப்படங்கள் சூப்பர். நம் நாடு உலகக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்ட சந்தோஷம் ஒரு புறம். அதைப் பற்றிய உன் விபரங்கள் ஒரு புறம் சந்தோஷம். இப்படி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய உனக்கு எனது இதயம் கனிந்த நன்றிகள். மொத்தத்தில் உன் அம்சங்கள் சூப்பர்.

செல்வி. நுஸ்ரத் ஜஹான் ஹனிபா-மாத்தளை.

எனதுயிர் முரசே!
"வானத்தில் ஒரு இரகசியம்" எக்ஸ்ரே ரிப்போர்ட் தந்த எனதபிமான நாரதருக்கு எனது ஸ்பெஷல் நல்வாழ்த்துக்கள்.

ரி. சசிகலா-சாம்பல்தீவு.

உண்மைக்கு சேதமில்லாத விமர்சனம்தான் முரசின் தனித்துவம். மேலும் அரசியல் தொடர், இராஜதந்திரியின் அரசியல் அலசல் இரண்டிலும் கடந்த கால வரலாறுகள் கண்முன்னே நடப்பது போல கொண்டுவந்து நிறுத்தப்படுகின்றன.

எஸ்.என். அமீன்-மருதானை.

அரசியல் செய்தியாகட்டும், விளையாட்டுச் செய்தியாகட்டும் பொறுப்போடு ஆராய்ந்து, சொந்த விருப்பு வெறுப்பு இல்லாமல் தருவதற்கு முரசுதான்! முகஸ்துதியல்ல! கீரைக்கடைக்கு விளம்பரம் தேவையில்லையல்லவோ?

கா.தமிழ்செல்வன்- ஆரையம்பதி.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு புலிகளோடு மட்டுமே பேசவேண்டும் என்பதுபோல இராஜதந்திரியாரின் கருத்துக்கள் இருக்கின்றன. ஏனைய தமிழ் அமைப்புக்களும் ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் பங்காற்றியுள்ளன. சமீபத்திலேயும் ஐந்து தமிழ் கட்சிகள் அரசியல் தீர்வுப் பொதி விடயத்தில் மேற்கொண்டுள்ள நிலைப்பாடு வரவேற்கத்தக்கதாகவே இருப்பதும் கவனிக்கப்படவேண்டும். பிரச்சனையில் சம்பந்தப்பட்ட சகல தரப்புக்களும் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டும் என்பதுதான் ஆக்கபூர்வமாக அமையும். அதேசமயத்தில் விடுதலைப்புலிகளுக்கு தீர்க்கமான பங்கு இருப்பதையும் மறுத்தல் இயலாது.

வி. அன்ரன்-திருக்கோணமலை.

வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் ஐ.தே.கட்சியும், பொதுஜன முன்னணியும் ஒரே விதமான எண்ணப்போக்கில்தான் உள்ளன. தீர்வு விடயத்தில் இரு கட்சிகளுமே ஒன்றுசேர்ந்து முன்வரப்போவதில்லை என்று முரசு சொல்வது முற்றிலும் உண்மை. ஆனால் வடக்கு-கிழக்கு பிரிப்பில் இரண்டு கட்சிகளுமே ஒன்றுபட்டு நிற்க தயங்கமாட்டா.

ஆ. ராஜசேகரன்-கொழும்பு-10.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:**

* ஆர். மீரா, மடுல்சீமை.
* ஸலீம்.எம். கடாபி, ஹொறவப்பொத்தானை.
* யேசுதாசன், அப்புத்தளை.
* பி.ஜமுனா-பி.சவேரி, அன்னமலை.
* எஸ். ராஜ் கனகேஸ்வரி, மல்வன்-பூனாகலை.
* என்.எம்.எஃப். ரிஸானா, பொல்கஹவெல.
* ஜே.எம். கியாஸ், கிண்ணியா-04.
* செல்வி. ஜெசீமா ஹசன், சிலாபம்.
* பஸ்மினா கலீல், ஹோறாப்பொள.
* ஆர். சங்கரப்பிள்ளை, பசறை.
* செல்வி. நிஸ்வா ஸலாம், தர்காநகர்.
* ஷர்மிளா-ஏ. றஹீம், நிலாவெளி-01.
* கை. கமலினி, சிந்துளை.
* வாஹிட்-ஏ. குத்தூஸ், கோட்டைமுனை.
* அ.மு. அஸ்கர், புல்மோட்டை-02.
* கா. சசிகலாதேவி, அக்கரைப்பற்று-08.
* வேலு மயில்வாகனம், பாமஸ்டன்.
* பூபாலபிள்ளை லிங்கன், அன்னமலையூர்.
* பொ. தங்கையா, நானுஓயா.
* ஆர். சுலோச்சனா, கலேவெல.
* என்.எம். பைஸல், அனுராதபுரம்.
* மு.இ. சித்தி பௌஸியா, சாய்ந்தமருது-07.




தினமுரசு வார மலரே!
உன்னை சுவைக்காத நாளில்லை. லேடீஸ் ஸ்பெஷல் பகுதியில் தொடர்ந்து வந்த சமையல் குறிப்பு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. தயவு செய்து மீண்டும் சமையல் குறிப்பை பிரசுரிக்க ஆவன செய்யவும்.

செல்வி.த.சுமதி,
பேக்கர்ஸ் வ்பாம், நுவரெலியா.

அன்பின் முரசே!
வாரா வாரம் வழங்கி வரும் 'நீ நீயா' மர்மக்கதை வெரி வெரி சூப்பர். அதை வழங்கும் தினமுரசுக்கும், மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

ஆர். ஜெஸ்லின்-பாலங்கோட்டை-
இறக்குவானை.

# முதலாவது பாரிய கடற்சமர்

## புலிகள் வெளியிட்டுள்ள விபரங்கள்

சுண்டிக்குளம் கடற்பரப்பில் 30.03.1996 அன்று இலங்கை கடற்படையினருக் கும், புலிகளின் கடற்புலிகள் அணி யினருக்கும் இடையே பாரிய கடற்சண்டை இடம் பெற்றது தெரிந்ததே.

இரு அதிகாரிகள் உட்பட 14 பேர் தமது தரப்பில் பலியானதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

சுண்டிக்குளம் கடற்சண்டை குறித்து புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப் பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள் ளது:

30.03.1996 அன்று சுண்டிக்குளம் கடற் பரப்பில், கரையில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் கடற்புலிகளுக்கும், சிறீலங்கா கடற்படையினருக்கும் இடையே கடும் சமர் ஏற்பட்டது.

கடற்படையினரின் எட்டுக்கடற்படைக் கலங்களைக் கொண்ட அணி காங்கேசன் துறையில் இருந்து திருக்கோணமலை நோக்கி சென்றுகொண்டிருந்தது. அப்போது கடற் புலிகள் வழி மறித்து தாக்குதல் நடத்தினார் கள்.

இக் கடற்சமரில் இஸ்ரேலிய தயாரிப் பான டோரா அதிவேக தாக்குதல் படகு கடற்கரும்புலித்தாக்குதலால் பெரும்பகுதி சிதைவடைந்து கடலில் மூழ்கியது.

அதனைத் தொடர்ந்து இரு தரையிறக்கும் கப்பல்கள், இரு பீரங்கிப் படகுகள், 4 டோராக்கள் ஆகியவற்றைக் கொண்ட சிறீலங்கா கடற்படை அணி மீது கடற்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர்.

கடற்புலிகளின் தாக்குதல்படையணி களான நளாயினி படையணி, நரேஸ் படையணி, சாள்ஸ் படையணி ஆகியவற் றோடு கடற்கரும்புலிகளும் இணைந்து தாக் குதல் நடத்தினார்கள்.

தாக்குதல் நடந்துகொண்டிருந்த வேளை யில் உதவிக்குவந்த விமானப்படை விமானங் கள், ஹெலிகொப்டர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

புலிகளின் தரப்பில் கடற்புலித்தளபதிகள் இருவர், பெண் கடற்புலிகள் எண்மர் உட் பட 20 பேர் பலியாகியுள்ளனர்.

கடற்கரும்புலி மேஜர் ஜெகநாதன், கடற் கரும்புலி கப்டன் இளையவன், கடற்புலித் தளபதிகளான லெப்டினன்ட் கேணல் விமல், லெப்டினன்ட் கேணல் எழில்வண்ணன், நளாயினி படையணி தளபதி மேஜர் மலர்மொழி, 'இம்ரான்-பாண்டியன் விமான எதிர்ப்பு படைப்பிரி'வைச் சேர்ந்த கப்டன்-ராவணன், மேஜர்-செம்மலை, மேஜர்-மன்னவன், மேஜர்-மோகன், மேஜர்-தனியான், கப்டன்-கனகா, கப்டன்-நல்லவன், கப்டன்- விதுனன், கப்டன்-கரன், கப்டன்- திருமாறன், லெப்டினன்ட்-மகேஸ்வரி, லெப்டினன்ட்-கிருஷா, லெப்டினன்ட்-இளமதி, லெப்டினன்ட்-குமுதினி, லெப்டினன்ட்-சீதா ஆகியோரே பலியானவர்களாவர்.

இதுவரை கடற்படையினருக்கும், கடற் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற கடற்சமரில் இதுவே பாரியது என்று கூறப்படுகிறது.

# இந்திய தேர்தலால் இராணுவ நடவடிக்கை ஒத்திவைப்பு!

# இடம்பெயர்ந்து செல்ல மக்கள் மறுப்பு!

**இந்திய தேர்தல் முடியும்வரை வடபகுதியில் புதிய இராணுவ நடவடிக்கை எதிலும் அரசாங்கம் ஈடுபடமாட்டாது என்று தெரியவந்துள்ளது. இந்திய தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதையடுத்தே வடக்கில் மேற்கொள்ளப்படவிருந்த பாரிய நடவடிக்கை பின்போடப்பட்டுள்ளது.**

வடபகுதியில் பாரியளவில் மேற் கொள்ளப்படவிருந்த இராணுவ நடவடிக் கையை அரசாங்கம் பின்போட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள புலிகள் இயக்கத்தினரை தேடித் தாக்கும் நடவடிக்கைகளே மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மோதல்களில் தமது தரப்பில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டதாக அரசாங்கம் தெரிவிப் பதில் உண்மையில்லை என்று புலிகளின் சர்வதேச செயலகம் மறுத்துள்ளது.

எனினும் சமீபத்திய யாழ் மோதல்களில் பலியான புலிகளது முழு எண்ணிக்கையை யும் அவர்கள் இதுவரை தெரிவிக்கவில்லை.

### ஊகங்கள்

இதேவேளை வடபகுதியில் பாரிய நடவடிக்கை மேற்கொள்வதை அரசாங்கம் பின்போட்டுள்ளமை தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக் கையை மேற்கொள்ளும்போது புலிகள் கொழும்பில் பதிலடி நடவடிக்கையில் ஈடுபடக்கூடும்.

ஏற்கெனவே எல்லாளன் படையின் எச்சரிக்கையும் வெளியாகியுள்ளது.

புதுவருடத்தை முன்னிட்டு தலைநகர் களைகட்டிவருகிறது. இந்த நேரத்தில் கொழும்பில் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சம்பவங்களை தூண்டிவிடக் கூடாது என்று அரசாங்கம் நினைத்திருக் கலாம்.

வடக்கில் தாக்குதல் ஆரம்பிக்கப்படாத நிலையில் புலிகள் கொழும்பில் குண்டுத் தாக்குதலில் ஈடுபடமாட்டார்கள். எனவே புதுவருட கொண்டாட்டங்கள் முடியும்வரை வடபகுதியில் பாரிய தாக்குதல்களில் ஈடுபடு வதை தவிர்க்க அரசாங்கம் விரும்புகிறது. புதுவருட கொண்டாட்டங்கள் முடிந்தபின்னர் இராணுவ நடவடிக்கைகள் வடக்கில் மேற் கொள்ளப்படலாம் என்று ஊகம் தெரிவிக்கப் படுகிறது.

### உறுதியான தகவல்

அரசியல் அவதானிகளின் கருத்துப்படி, இந்திய தேர்தல் முடியும்வரை புதிய பாரிய தாக்குதல் எதிலும் அரசாங்கம் ஈடுபடப் போவதில்லை.

முரசு சென்றவாரம் குறிப்பிட்டிருந்தது போல, வடபகுதியில் பாரிய இராணுவ நட வடிக்கை உடனே ஆரம்பிக்கப்படுவதை இந்திய அரசு விரும்பவில்லை என்று உறுதியாகத் தெரிகிறது.

பொதுமக்களுக்கும், உடமைகளுக்கும் பெரும் சேதம் விளைவிக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபடுமானால், தமிழ் நாட்டில் ஜெயலலிதா-காங்கிரஸ் கூட்டணியும் அடிவாங்கும் என்பது நிச்சயம். அதனை பிரதமர் நரசிம்மராவும் நன்கறிவார் என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

### யாழில் நடவடிக்கை

இவ்வாறான நிலையில்தான் மக்கள் நடமாட்ட மில்லாத யாழ்ப்பாணப் பகுதியில் புலிகளைத் தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பகுதியில் கடந்த இருவாரங்களாக படையினரும், புலிகளும் பல்வேறு இடங்களில் மோதிக்கொண்டுள்ள னர். எனினும் புலிகள் தரப்பு இழப்புக்கள் தொடர்பாக அரசாங்கம் வெளியிடும் விபரங் கள் தவறானவை என்று புலிகள் மறுத் துள்ளனர். இருப்பினும் புலிகளும் முழு விபரங்களையும் இதுவரை வெளியிடவில்லை.

ஏப்ரல் மாத பாடசாலை விடுமுறைக் காலத்தில் வடபகுதியில் இராணுவ நடவடிக் கையை மேற்கொள்ள அரசாங்கம் முன்னர் திட்டமிட்டிருந்தது. அப்போது இந்தியாவில் தேர்தல்கள் நடைபெறுவதற்கான திகதி தீர் மானிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில், சுண்டிக்குளம் கடற்பகுதியில் நடைபெற்ற கடற்சண்டையின் பின்னரே இராணுவ நடவடிக்கை பின் தள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மறுப்பு

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள மக்களை வன்னிப்பகுதிக்கு இடம் பெயருமாறு புலிகள் விடுத்த கோரிக்கை பயனளிக்கவில்லை.

படையினர் உள்ளே வந்தால் ஷெல் தாக்குதல் நடத்த வேண்டியிருக்கும். தேவை யற்ற இழப்புக்களை தவிர்க்க வேண்டு மானால் மக்கள் இடம்பெயர்ந்து செல்வதே நல்லது என்று புலிகள் கூறிவருகின்றனர். அவ்வாறு கூறிய பின்னரும் பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்து செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

## நிபந்தனையற்ற போர்நிறுத்தம்
## ஐந்து இலட்சம் கையொப்பம்

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கும், வெளிநாடுகளுக்கும் ஐந்து இலட்சம் மக்களின் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை அனுப்பிவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. யாழ் குடா நாட்டில் சாவகச்சேரியில் கூடிய வெகுஜன ஒன்றிய கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

நிபந்தனையற்ற போர் நிறுத்தம், இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல், யாழ்ப் பாணத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறுதல், இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தல் போன்ற கோரிக்கைகளை உள்ளடக்கியதாக மகஜர் தயாரிக்கப் பட்டுள்ளது.

10.4.96 அன்று யாழ் குடாநாட்டில் வெகுஜன ஒன்றியத்தால் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது. பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு கோரியும், யாழ்ப்பாணத்திலிருந்து படையினரை வெளியேறுமாறு கோரியும் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

## முக்கிய அறிவித்தல்
### வாசகர் கவனிக்க.....!

**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உங்கள் முரசுக்கு ஒரே ஒரு வார விடுமுறை! அடுத்தவார முரசு மட்டும் வெளிவராது. ஓய்வும் தேவைதானே! புத்துணர்ச்சி பொழி யும் அல்லவா! ஒருவாரப்பிரிவைப் பொறுத் துக் கொள்க. புத்துணர்ச்சியோடு-புதிய தகவல்களோடு சந்திப்போம். -ஆ.ர்.-**

## அம்பாறையில் நால்வர்

அம்பாறை மாவட்டத்தில் 05.04.96 அன்று விசேஷ அதிரடிப்படையினர் மீது புலிகளின் விசேஷ அதிரடிப்படையணி மேற்கொண்ட தாக்குதல் சுமார் 20 நிமிடங்கள் நீடித்தது. 16 அதிரடிப் படையினர் கொல்லப்பட்டதாகவும், தமது தரப்பில் நால்வர் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். மேஜர் தரத்தில் உள்ள இருவர், ஒரு கப்டன் உட்பட நால்வர் பலியானதாக விபரம் வெளியிட்டுள்ளனர்.

31.03.96 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலங்கரச்சி என்னுமிடத்தில் படையினர்மீது நடத்திய தாக்குதலில் பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

ஏ.கே. இலகு இயந்திரத் துப்பாக்கி 1, ஏ.கே. இலகு இயந்திரத்துப்பாக்கியின் ரம் மகசீன் 3, கைக்குண்டுகள் 04, ஏ.கே.ரக துப்பாக்கிகள் 2.

## வன்னியில் பதுங்கு குழிகள்

வன்னிப் பகுதியில் இராணுவ நடவ டிக்கைகள், விமானத் தாக்குதல்கள் இடம் பெறலாம் என்று அங்குள்ள மக்கள் அஞ்சு கின்றனர்.

வன்னிப்பகுதியில் பரவலாக பதுங்கு குழிகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. பாடசாலைகள், வீதியோரங்கள், பொதுமக்கள் கூடும் இடங்கள் போன்ற வற்றில் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை யாழ்-குடாநாட்டில் வடம ராட்சி, தென்மராட்சி பகுதிகளில் தொடர்ச்சி யான ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக் கின்றன.

வெற்றிலைக்கேணி முகாமில் இருந்தும் ஷெல் தாக்குதல் நடைபெறுவதாக அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## குப்பி விளக்குகளால் 134 ஆயிரம் பேர் பலி

(ஏறாவூர் நிருபர்)

இலங்கை சுகாதார பாதுகாப்பு மையம் செய்த மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த 3 ஆண்டுகளில் மண்ணெண்ணெய் குப்பி விளக்குகளைப் பாவித்த 134 ஆயிரம் பேர் தமது உயிரைப் பலி கொடுத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இந்த இறப்பு வீதம் ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வந்துள்ளதாகவும் அதுதெரிவிக்கிறது. கடந்த 1993ம் 1994ம் 1995ம் ஆண்டுகளில் முறையே 40 ஆயிரம், 45 ஆயிரம், 49 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் குப்பி விளக்கு மரணங்கள் நிகழ்ந்திருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. பாதுகாப்பில்லாத குப்பி விளக்குகளைப் பாவிக்கும் வறிய கிராம மக்களே இந்த அவல மரணங்களை தழுவியிருக்கிறார்கள். இந்தப் பரிதாப மரணங்களைத் தடுக்கும் பாதுகாப்பான குப்பி விளக்குகளை கொழும்பு பெரியாஸ்பத்திரியின் நிபுணத்துவப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் விஜய கொடகும்புர அறிமுகம் செய்துள்ளார்.

## நூலகத்துக்கு குறுக்கே மாகாண சபை!
## மாணவர்களுக்கும் கதவடைப்பு

(திருமலை நிருபர்)

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பெறுமதி மிக்க பல்துறைகளைச் சார்ந்த ஆங்கில-தமிழ் நூல்களில் தூசி படிய வைக்கும் கைங்கரியத்தில் வடக்கு-கிழக்கு மாகாணசபை இறங்கியுள்ளது.

மாகாணசபையால் திருக்கோணமலை யில் ஆரம்பிக்கப்பட்ட மனித மேம்பாட்டு நூலகம் ஆரம்ப நாட்களில் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் தேவை கருதிய ஏனையோருக்கும் இலவச உறுப் புரிமை வழங்கி நூல்கள் இரவல் கொடுக்கப்பட்டு வந்ததோடு, சகல தரத் தினருக்குமான வாசிப்பு வசதிகளையும் செய்து கொடுத்திருந்தது.

இதனால் பலநூற்றுக் கணக்கான நூற்பிரியர்களும் பொதுப்பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களும் பாடசாலை மாணவர் களும் பெருநன்மையடைந்து வந்தனர்.

எனினும் அண்மையில் நூலக நிர்வாகப் பொறுப்பை திரு. மார்க்கண்டு ஏற்றுக் கொண்டதையடுத்து உடனடியாக சகல வசதிகளும் தடை செய்யப்பட்டன. நூலகத்தை மூடி விட்டுப் புத்தகங்களை பங்கு வைத்துக் கொள்ளலாமா என்று கூட ஆலோசிக்கப் பட்டது. நூலக விரும்பிகள் பலர் தூது சென்றதன்பின் நூலகம் மூடிவிடும் எண்ணம் கைவிடப்பட்டது.

ஆனால் 15.03.96 தொடக்கம் நூலகம் வாசகர்கள் உட்பிரவேசிக்காதவாறு தடை செய்யப்பட்டுள்ளது. 300/- செலுத்தி உறுப் புரிமை பெறும் அரசாங்க, கூட்டுத்தாபன சபை ஊழியர்கள் மட்டுமே நூலகத்தைப் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள் ளது. நூலகத்தைப் பயன்படுத்த வருகின்ற க.பொ.த. உயர்தர மாணவர்கள் சகலரும் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

## 'மௌனப் போர்'

இலண்டனில் உள்ள 'ஆட்டிக்கல் 19' என்னும் அமைப்பு இலங்கை அரசை சாடியிருக்கிறது. பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்பவற்றுக்காக மேற்படி அமைப்பு சர்வதேசரீதியாக குரல் கொடுத்து வருகிறது. விடுதலைப் புலிகள் அமைப் பினரையும் 'ஆட்டிக்கல் 19' அமைப்பு முன்பு கண்டித்திருந்தது.

'இலங்கை அரசு மேற்கொள்ளும் மௌனப்போர்' என்ற தலைப்பிட்டு சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இடம் பெயர்ந்த மக்களை அணுகி கருத்துக்களை அறிய இலங்கை அரசு அனுமதி மறுத்து வருவதையும் அவ்வமைப்பு கண்டித் துள்ளது.

## சிவசேனாவுக்கு மகஜர்

இந்தியாவில் உள்ள சிவசேனா இயக்கத்தின் தலைவர் பால் தாக்கரேக்கு கிழக்கு மாகாண இந்து மதகுருமார் ஒன்றியம் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. புலிகள் அமைப்பினரின் அனுமதியுடன்தான் அம் மகஜர் அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

"தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கு தமிழர் தாயகம் ஒன்று தேவை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் இந்திய அரசு அங்கீகரிக்க செய்யவேண்டும். இந்திய அரசின் ஊடாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வைக்க வேண்டும்" என்று அம்மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## பழிவாங்கப்பட்டோருக்கு நிவாரணம்

(கண்டி நிருபர்)

1977 ஆம் ஆண்டு அரசியல் பழி வாங்கலுக்குட்படுத்தப்பட்ட 7000 ஆசிரியர்கள் நிவாரணம் பெற இருக்கின்றனர்.

ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் காலப் பகுதியில் இடமாற்றங்களுக்கும் மற்றும் தொல்லைகளுக்கும் உட்படுத்தப்பட்ட வர்களாக இந்த 7000 ஆசிரியர்கள் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ள னர்.

சுமார் 23,000 ஆசிரியர்கள் பழிவாங்கல் விசாரணைகுழுவுக்கு முன் சென்றனர். இவர்களின் நலன் கருதி நிவாரணம் எத்தகைய முறையில் வழங்கப்படவேண்டு மென கல்வி உயர் கல்வி அமைச்சு ஆராய்கின்றது.

## படைகள்-புலிகள்-பலப்பரீட்சை
## இரு தரப்பின் மத்தியில் மக்கள் அவதி

மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனைப் பகுதி சமீப மாதங்களுக்கு முன்னர் அடிக்கடி புலி-படையின் மோதல் நடத்தும் போர்க்கள மாக இருந்து வந்தது. தற்சமயம் அப் பகுதியை அடுத்துள்ள வந்தாறுமூலையை பலப்பரீட்சை நடத்தும் இடமாகப் புலிகள் தெரிவு செய்துள்ளனர்.

சென்ற 04.04.96 அன்று வந்தாறு மூலையில் திரண்டிருந்த பெருந்தொகையான புலி உறுப்பினர்கள், மட்டு-கொழும்பு வீதியில் வாகனங்களை மறித்துச் சோதனையிடுவதில் ஈடுபட்டிருந்த அதே சமயம், பிரதான வீதி நெடுகிலும் அன்னை பூபதியின் நினைவாக வாழை மரங்களை நாட்டி துண்டுப் பிரசுரங் களையும் ஒட்டினர்.

இதற்கு முன்னரும் வந்தாறுமூலையில் பல முறை பிரதான வீதித் தடைகளை ஏற் படுத்தி புலிகள் வாகனங்களைச் சோதனை யிட்டுள்ளனர் என்பதும், அப்பகுதியில் இரு பக்கமும் உள்ள இராணுவத்தினரைச் சம ருக்கு வருமாறு மக்களிடம் கூறி அறைகூவல் விடுத்திருந்தனர் என்பதும் நினைவிருக்கலாம். இப்பகுதியை அடிக்கடி படையினர் சுற்றி வளைப்பு நடத்துவதும் பகலெல்லாம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் சில பகல் வேளைகளை படையினர் போல் புலிகளும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மதுபானம் ஏற்றியிருந்த லொறி ஒன்றை பதுளை வீதிக்கு கடத்திச் சென்று ஒரு போத்தல் சாராயம் ரூபா100/- இற்கு புலிகள் விற்பனை செய்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள். சித்திரைப் புதுவருட விற்பனைக்காக ஏற்றிச் செல்லப்பட்ட மதுபான லொறியே புலிகளால் கடத்திச் செல்லப்பட்டது.

முறக்கொட்டஞ்சேனையையே தமது தாக்குதல் தளமாகக் கொண்டிருந்த புலிகள் இங்கு கிரிமுட்டிப் பண்ணையில் படையினர் முகாமிட்டதைத் தொடர்ந்து வந்தாறு மூலையை தமது தாக்குதல் களமாகவும் பலப்பரீட்சை நிலையமாகவும் மாற்றி யுள்ளனர். இரு தரப்பு பலப்பரீட்சையின் இடைநடுவில் விழி பிதுங்குகிறார்கள் மக்கள்.

இதனியடையே 04.04.96 அன்று வந்தாறு மூலையிலிருந்து பயத்தின் காரணமாக வெளி யேற முற்பட்ட அவ்வூர் மக்களின் பெருந் தொகையான அடையாள அட்டைகளைப் படையிடனருடன் இணைந்து செயற்படும் ஒரு இயக்கத்தினர் பறித்தெடுத்ததாக மக்கள் தெரிவிக்கிறார்கள்.

## கனடாவில் தமிழ் பத்திரிகை நிறுத்தம்
## பத்திரிகை ஆசிரியர் புலிகளுக்கு சவால்

கனடாவில் இருந்து வெளியான 'மஞ்சரி' என்னும் பத்திரிகை தொடர்ந்து வெளியாக மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் ஆசிரியரும், ஐலண்ட், இந்து பத்திரிகை களின் முன்னாள் செய்தியாளருமான டி.பி. ஜெயராஜ் அந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கனடாவில் உள்ள புலிகள் இயக்கத்தின ரின் நிர்ப்பந்தம் காரணமாகவே பத்திரிகை வெளிவரமுடியாத சூழல் ஏற்பட்டிருப்ப தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புலிகள் இயக்க முன்னாள் பிரதித் தலைவர் மாத்தையாவின் தீவிர விசுவாசியா கக் கருதப்பட்டவர் டி.பி.ஜெயராஜ். மாத்தையா விவகாரத்தின் பின்னரும் டி.பி.ஜெயராஜ் புலிகள் இயக்கத்தினரை ஆதரித்தே கருத்து வெளியிட்டு வந்தார்.

கனடாவில் உள்ள உலகத்தமிழர் இயக்கம்தான் மஞ்சரி வெளிவராமல் தடுப்பதில் முன்னின்று செயற்பட்டது என்று டி.பி. ஜெயராஜ் குற்றம் சாட்டியிருக்கிறார்.

"உலகத் தமிழர் இயக்கத்தினருடன் பொது விவாதத்தில் ஈடுபட நான் தயாராக இருக்கிறேன். உங்களுக்காக விவாதிக்க கனடாவில் ஆட்கள் இல்லையென்றால் வெளியிலிருந்து திலகரையோ? வசந்தராஜா வையோ, சத்தியேந்திராவையோ தருவி யுங்கள். உலகத் தமிழர் இயக்கத்தைப் பற்றி அம்பலப்படுத்துகிறேன்" என்று சவால் விட்டுள்ளார் டி.பி.ஜெயராஜ்.

உலகத் தமிழர் இயக்க மிரட்டலுக்குப் பயந்து, பத்திரிகை உயிர்வாழ வேண்டும் என்ற ஆசையில் செய்திகளை புலிகளுக்கு சாதகமாக வெளியிட விரும்பவில்லை." என்று கூறியுள்ளதுடன், பத்திரிகையை இடைநிறுத்தி யுள்ளதாக அறிவிப்புச் செய்துள்ளார் டி.பி.ஜெயராஜ்.

தமிழக தேர்தல் நிலவரம்

# பண பலம்–அதிகார பலம்– இரட்டை இலை
# ஜெயலலிதாவின் பலமான அஸ்திரங்கள்



தமிழகத்திலிருந்து ஏழுமலை

**த**மிழக தேர்தல்க் களம் சூடுபிடித் திருக்கிறது. இரண்டு அணிகளுக்கிடையே தான் முக்கியமான போட்டி.

செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி.

கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க கூட்டணி. இரண்டும்தான் பிரதான அணிகள்.

தி.மு.க. கூட்டணியோடு தமிழக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான மூப்பனார் அணியினர் கூட்டுச் சேர்ந்திருக் கின்றனர்.

காங்கிரஸ் தலைவரும் இந்தியப் பிரதமருமான நரசிம்மராவ் தமிழக முதல்வர் ஜெயலலிதாவோடு தேர்தல் கூட்டணி அமைத்ததை தமிழக காங்கிரஸ் கட்சியில் ஒரு சாரார் விரும்பவில்லை.

தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் குமரி அனந்தனும் ஜெயலலிதாவோடு கூட்டு வேண்டாம் என்றுதான் கூறிக்கொண்டிருந்தார்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தமிழக காங்கிரசின் கருத்துக்களை ஒரேயடியாக ஒதுக்கிவிட்டு, ஜெயலலிதாவோடு கூட்டு என்று அறிவித்துவிட்டார்.

தமிழக காங்கிரசுக்கு பேரிடி. தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர்களான மூப்பனார், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம் உட்பட முக்கிய பிரமுகர்கள் நரசிம்மராவின் முடிவை நிராகரித்து விட்டனர்.

கலைஞர் கருணாநிதியோடு கைகுலுக்கிக் கொண்டனர். கலைஞரும் அவர்களை வரவேற்றுள்ளார்.

தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் குமரி அனந்தன் அடித்தார் ஒரு பல்டி. பிரதமர் நரசிம்மராவின் முடிவை ஏற்பதாக அறிவித்துவிட்டார்,

அதனையடுத்து தமிழக காங்கிரஸ் கமிட்டி இரண்டாகிவிட்டது.

இதற்கிடையே ஆர்.எம்.வீரப்பன் தலைமையில் எம்.ஜி.ஆர். முன்னணியினரும் கலைஞர் கருணாநிதியோடு கைகோர்க்க முன் வந்தனர்.

ஆர்.எம். வீரப்பன் முன்னர் ஜெயலலிதா அமைச்சரவையில் இருந்தபோதே, தனிக்கட்சி ஆரம்பித்தவர் திருநாவுக்கரசு.

எம்.ஜி.ஆர். அண்ணா முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் கட்சி நடத்திக் கொண்டிருந்தார்.

ஆர்.எம்.வீரப்பனை ஜெயலலிதா விலக்கிவிட்டபோது அவருக்கு கைகொடுத்தார் திருநாவுக்கரசு.

ரஜினி தலைமையில் செயற்பட்டு காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்து ஜெயலலிதாவை முறியடிக்க வியூகம் வகுத்த இரட்டையர்கள் திருநாவுக்கரசுவும், ஆர்.எம். வீரப்பனும்தான்.

அரசியலுக்கு வரப்போவதில்லை என்று ரஜினி அறிவித்தவுடன் அந்த வியூகம் தகர்ந்தது.

பிரதமர் நரசிம்மராவ் முதல்வர் ஜெயலலிதாவுடன் கூட்டணி என்று அறிவித்தவுடன் கதிகலங்கிப்போனார் திருநாவுக்கரசு.

அதுவரை ஜெயலலிதாவை புரட்டல் தலைவி என்று கேலி செய்துகொண்டிருந்தவர் ஒரே பாய்ச்சலில் ஜெயலலிதா பக்கம் சென்று விட்டார். புரட்சித் தலைவியின் கரத்தைப் பலப்படுத்த தனது கட்சியைக் கலைத்து விட்டதாக அறிவிப்பும் செய்தார்.

ஆர்.எம்.வீரப்பன் அணி தனித்துப் போனது. ஓடோடிப்போய் கலைஞர் கருணாநிதியின் வீட்டுக் கதவைத் தட்டியது. கைகுலுக் கியது.

கலைஞர் கருணாநிதியைப் பொறுத்தவரையில் இணைக்கக் கூடியவர்களையெல்லாம் இணைத்துக் கொண்டு, எப்படியாவது ஆட்சியைப் பிடித்தே தீருவது என்ற முடிவோடு இருக்கிறார்.

தமிழக காங்கிரஸில் இருந்து கலைஞரோடு கைகோர்த்துள்ள மூப்பனார் அணியினருக்கும், ஆர்.எம். வீரப்பன் அணியினருக்கும் தமிழகத்தில் வாக்காளர்களிடம் பரவலான ஆதரவு கிடையாது.

காங்கிரஸ் கட்சிக்கு தமிழ்நாட்டில் குறிப்பிட்டளவான வாக்காளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூப்பனார் சொல்வதையோ, அல்லது வேறெந்த தமிழக காங்கிரஸ் தலைவர்கள் சொல்வதையோ கேட்க மாட்டார்கள்.

காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைமை சொல்வதைத்தான் கேட்பார்கள்.

கடந்த தமிழக சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களிலும் ஜெயலலிதாவோடு கூட்டுச்சேருவதை மூப்பனார் அணி விரும்பவில்லை. ஆனாலும், காங்கிரஸ்- அ.தி.மு.க. கூட்டணிதான் தமிழக தேர்தல்களில் அமோக வெற்றி பெற்றது.

ஆனால், கருணாநிதியின் கணக்கு வேறு விதமானது. மூப்பனார் அணி, விரப்பன் அணி போன்றவை தனித்து நின்றால் அவர்களுக்குக் கிடைக்கும் வாக்குகள் விரயமாகிவிடும். குறைந்த அளவாக இருந்தாலும் வாக்குகள் சிதறாமல் இருப்பது நல்லது. சிதறினால் ஜெயலலிதாவுக்குத்தான் இலாபம் என்பதுதான் கருணாநிதி போட்டுள்ள கணக்கு.

ஜெயலலிதா இந்தக் கணக்குப்பற்றி கவலைப்படவில்லை.

அதிகாரபலம், பணபலம், ஆட்பலம், அத்தோடு இரட்டை இலைக்கு மட்டுமே வாக்குப் போட்டுப் பழக்கப்பட்டுவிட்ட கிராமப்புற வாக்காளர்கள் பலம் என்ற அஸ்திரங்களை பிரயோகித்து வெற்றி பெற்றுவிடலாம் என்று நம்புகிறார்.

சறுக்கக்கூடிய தொகுதிகளில் காங்கிரஸ் வாக்காளர்களின் உதவியோடு சமாளித்துவிடலாம் என்று நினைக்கிறார்.

ரஜினிகாந்த் தனது ஆதரவை தி.மு.க. கூட்டணிக்கு வழங்கினால் என்னாகும்?

அதற்கும் பதில் வைத்திருக்கிறார் ஜெயலலிதா.

ரஜினி தானாக ஒரு தனிக்கட்சி ஆரம்பித்து போட்டியிட்டால்தான் அவரது இரசிகர்கள் எழுச்சி கொள்வார்கள். புதிய சக்தியொன்று வந்துவிட்டதாக வாக்காளர்களும் நினைப்பார்கள்.

மாறாக வேறு யாரோ வெற்றிபெற ரஜினி பிரசாரம் செய்வது எடுபடப்போவதில்லை என்பதுதான் ஜெயலலிதாவின் கணிப்பு.

அதில் ஓரளவு உண்மையும் உண்டு.

அதுதவிர ஜெயலலிதா தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுக்கள் நகர்ப்புற வாக்காளர்களிடம் அவரது செல்வாக்கை குறைத்திருக்கும் அளவுக்கு, கிராமப்புற வாக்காளர்களிடம் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இந்நிலையில் ஜெயலலிதா பணத்தை தண்ணீராக இறைத்து செலவு செய்யப் போகிறார். தேர்தல் கமிஷனின் விதிமுறைகள் அதனைத் தடுக்க முடியாது.

இலவச சேலைகள், இலவச வேட்டிகள், என்று வாக்காளர்கள்பாடு ஒரே கொண்டாட்டம்தான்.

பண பலம் என்று பார்த்தால் தமிழகத்தில் ஜெயலலிதாவோடு போட்டி போட வேறு கட்சிகளால் முடியவே முடியாது.

தற்போதைய நிலவரப்படி தமிழக தேர்தல் களத்தில் போட்டி பலமாக இருக்கிறது. ஜெயலலிதா மறுபடி முதல்வராக மாட்டார் என்று சொல்ல முடியவில்லை. தேர்தல் நெருங்க நிலவரம் மாறலாம் கவனிப்போம்.

## ரஜினி அமெரிக்கா போனதேன்?

**த**மிழக சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் நாட்களில் இந்தியாவில் தங்கியிருக்க ரஜினி விரும்பவில்லை.

தேர்தலில் போட்டியிடுமாறு நெருக்குதல்கள் ஏற்படக்கூடும் என்று கருதியே ரஜினி வெளிநாடு சென்றார்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்தது ரஜினிக்கு பிடிக்கவில்லை. அமெரிக்காவில் தங்கியிருந்த ரஜினிக்கு அச் செய்தி அறிவிக்கப்பட்டது. தனது அதிருப்தியை ரஜினி வெளியிட்டுள்ளார்.

ரஜினிகாந்த்தை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்த தி.மு.க. கூட்டணி ஆவலாக இருக்கிறது. ரஜினி நேரடியாகக் கலந்து கொண்டு பிரசாரம் செய்வது சந்தேகம்தான்.

# அய்யாத்துரை அண்ணேக்கு கொச்சிக்காப் போடியார் எழுதுவது



**எ**னக்கும் கனக்க வேல எண்டதால, கடதாசி போடுறத உட்டுத்தன். எழுதின கடதாசிகளும் கிடைக்கல்ல போல கிடக்கு. இங்கயும் அடிக்கொருக்கா குண்டும், வெடியும், ஷெல்லுமாக கிடக்கும். காலமயில நடந்தா சாயங்காலத்தால சரியாப் போகும். சனமும் கினமுமாக கிடக்கும். புறகு என்னடா எண்டா, றவுண்டப்பாம் எண்டு சொல்லுறானுகள். றோட்டில கீட்டில ஒருவரையும் காணஏலா.

சனத்துக்குமெண்டா, இப்ப எல்லாம் தண்ணிபட்ட பாடம். நனைஞ்ச கோழிக்கு கூதலென்ன குளிரென்ன அண்ண! பெரு மூச்சி விடுறத விட, அண்ண! என்ன இரிக்கி?

விடிஞ்சா பொழுது பட்டா இதுதான் அண்ண வேல. இதென்ன அண்ண நேத்து, இண்டைக்கு எடுத்த வேலயா? நாப்பது வரிசமா அண்ண இந்தக் கத ஓடுது.

கொழும்புப் பக்கமும் எட்டிப் பாக்கவும் விருப்பம்இல்ல. கிழவன் எண்டாலும் சரி, குமரன் எண்டாலும் சரி, தமிழன் எண்டா தப்ப வழி இல்ல அண்ண. இங்கால மட்டக்கிளப்புக்குள்ளயும் கால்வைக்க இடமில்ல. எங்கும் முள்ளும், கல்லும் கட்டையுந்தான்.

எழுத்து. வாசன இல்லாத எங்கட ஆக்களும் பாடித்து போன மாதரி ‘சுற்றிவர வேலி, சுழல வரமுள்வேலி எங்கும் ஒரு வேலி எங்காலகா நான் வரட்டும்’ எண்ட மாதிரித்தான் கிடக்கு. நம்மட பொடியனுகளும், பொட்டையள்களும் பாடுற பாட்டு என்ன பொருத்தம் பொருந்துது அண்ண.....?

## மட்டக்களப்புப் புதினம்

‘கிடந்தா கிடக்கட்டும், கிழவியையும் என்னையும் உள்ள உடு’ எண்ட மாதிரி வேறு புதினங்களும் நடக்குது.

இந்த முற நல்ல விளைச்சல் அண்ண. போடிமாரு நல்லா நெல்லுக் கட்டுறானுகள். டவுனுக்குள்ள நெல்லக்கில்ல கொண்டுவாற எண்டா வாங்கிக் கீங்கி வாற ஆக்கள் சென்றியில படுற கயிட்டமெண்டா, கயிட்டமில்ல. முழுநெல்லையும்- நடுறோட்டில உதறிக் கொட்டி- கிண்டிக்கிளறி போட்டபுறகு அள்ளிக் கட்ட வேணுமெண்டு ஓடர்.

‘நீங்க தந்த ஒத்துழைப்புக்கு நன்றி. சிரமத்துக்கு மன்னிக்கவும்’- எண்டும் வோட்டுப் பலக தொங்குதண்ண- ரோட்டுக் கன்னயில.

மிதி, மிதி எண்டு மிதிச்சிப்போட்டு, நசிநசி எண்டு நசிச்சுப் போட்டு- வோட்டுப் பலகய பாத்தித்துப்போறான் அண்ண மிச்சம்.

வெள்ளாம வெட்டுக்குள்ள கொத்தியா கொலப்பக்கம் போயித்து வந்த நான். நம்மட மண்டாப் போடியிர மகன் வாகிசப் போடிய காணல்லையாம் எண்டு ஒரு கத. அவன் எங்க டவுணுக்கு கிவுணுக்கு போறதுமில்ல. ஏனெண்டா, நம்மட கன்னங்குடா, காஞ்சிலங்குடா, முனக்காடு, அம்பிளாந்துறப் பாரில இருந்து டவுணுக்குள்ள இப்ப வேல சோலிளுக்கு வாற ஆக்கள் உயிர கையில புடிச்சித்துத்தான் அண்ண வாற.

அண்ண! வருஷக்காரனும் வாறான். போட்டுவாற சட்டையும் கறுப்பாம் எண்டு கேள்வி. நல்லந்தான். நம்மட தமிழ் ஆக்களெல்லாம் கறுப்புச்சட்ட போடுற காலந்தனே!.


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

முதற்தர பாதணி விநியோக ஸ்தாபனமொன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. பிணை (SECURITY) அவசியம். மிகவும் வசீகரமான தரகுகளும் சலுகைகளும் வழங்கப்படும்.

உடன் விண்ணப்பிக்கவும்:–

சிட்டி ஷூ கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்,
129, காலி வீதி, பள்ளி-முல்லை,
பாணந்துறை.

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்தியிரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்த உண்டு.

ஏப்ரல் **20** முதல் **28** வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 மே **4, 5, 6** Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், மே **11, 12, 13** கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50. TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOA விலும் சந்திக்கலாம்.

## ஜோதிட நிவர்த்தி



எல்லாம் நேரகாலத்தை ஒட்டியே காரியங்கள் நடக்கின்றன. உங்கள் காதல் தோல்வி, வாழ்வில் விரோதி, கணவர்-மனைவி பிணக்கு, கல்வி தடை, குடும்ப பிணக்கு, திருமண தடை, நண்பர்கள் விரோதம் இவை அனைத்திற்கும் உங்கள் பிறப்பு திகதி மாதத்துடன் வெளிநாட்டவரும், உள்நாட்டவரும் உலக ஜோதிட திலகம் மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி திரு..பி.கே. சாமி அவர்களிடம் ஆலோசனை கலந்து வெற்றி பெறலாம். வெளிநாட்டவர்களுக்கு உடனுக்குடன் பார்சல் அவர்கள் கையிலேயே நாம் 3 நாளில் கொண்டுவந்து தருவதற்கு அவர்கள் தொலைபேசி இலக்கம் அவசியமே.

தொடர்புகளுக்கு:–
**உலக மாந்திரீக சக்கரவர்த்தி**
**பி.கே.சாமி J.D.G.A.N.(JP)**
இல.162. கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு–11.
தொலைபேசி:342463.342464.344831.344832 பெக்ஸ்:00941–342464
நுவரெலியா:052–2508.3093.3570.3336.

## BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்: ..........
விலாசம்: ..........

**BRIGHT TRAINING CENTRE**
S-27, FIRST FLOOR. P.O. BOX. 162.
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO 11. TEL: 434770


## வெளிவந்துவிட்டது...

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7, இதழ் 8
கல்வி மஞ்சரி O/L
**EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2**

**BRIGHT BOOK CENTRE**
S-27, First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770

## விளம்பரப் பகுதி

## "மந்திரயோகி" மாந்திரீக மருத்துவம்



காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப்பிரயாணம் வேறு காரியங்களிலும் தடைகளும், காதலர்கள் ஒன்றுசேரமுடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசக்திகளின் தொல்லைகள் தீவினைகளினால் தீராத உடல்-மனநோய்களும் ஏற்படலாம் இவைகளுக்கு இறைவன் அருளி, முனிவர்கள் கையாண்ட, மர்மமான மருந்து, மந்திர ஜந்திர வசிய தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ ஆண்-பெண் ஜனராஜ வசியங்கள், பாதுகாப்பு ரட்சைகள், வேறு நன்மையான காரியங்களுக்கு, வேண்டிய மந்திரம் வசியங்கள் செய்துகொள்ள அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட மலையாளம் புகழ் மஹாசக்தி உபாசகர் மந்திரயோகியிடம் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் சம்பந்தப்பட்டவர்களினதும், தாய் அல்லது தந்தையர்களினதும் பெயர்களுடன் தங்கள் கோரிக்கைகளை எழுதி 10 ரூபா 50 சத முத்திரைகள், 2 பதிவுத்தபாலில் வைத்து அனுப்பி தெய்வீகமருத்துவ ஆலோசனைகளை பதிவுத்தபாலிலும் இறை பரிகாரப்பொருட்களை (வி.பி.பி) பார்சல்களிலும் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றலாம், YOGI.DR.SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு விரும்பிய குருதட்சணை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும். விலாசம்:–



**YOGI.DR.SACKTHYANANTHEBABA**
**INDIAN CLINIC, GURUSACKTHY CENTRE**
**KALLADY-BATTICALOA (P.O)**
குருசக்தி நிலையம், கல்லடி-மட்டக்களப்பு.

## வை.எம்.எச்.ஏ. வாழ்த்துகின்றது



எமது மன்றத்தின் தலைவர் திரு.தே.செந்தில்வேலவர்-சாரதா தம்பதியினர் இல்வாழ்வில் இணைந்ததை,
கொழும்பு இந்து இளைஞர் மன்றம் (Y.M.H.A) பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுத சுவாமி அருள் கொண்டு
பதினாறும் பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றது.


காப்பாளர்கள்:–
சிவநெறிச்செல்வர் ஆர்.எம்.பழனியப்பாச் செட்டியார்
கலாசூரி. ஆர். சிவகுருநாதன் (முன்னாள் தினகரன் பிரதம ஆசிரியர்)
வி.என்.மதியழகன் (பணிப்பாளர், இ.ஓ.கூ)
தர்மசீலன் செந்தூரன் (செயலாளர், கொழும்பு இந்து இளைஞர் மன்றம்)

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

— நாரதர் —

# எதிர்நோக்கும் நெருக்கடிகள்





"மழை பொழியும். மக்கள் சீருடன் வாழ்ந்திருப்பர்" என்று புதிய சித்திரை வருசம் தொடர்பாக ஜோசியர்கள் கணிப்புச் .சொல்லியிருக்கிறார்கள்.

நம்நாட்டைப் பொறுத்தவரை அரசியல் வானிலை வேறுவிதமான கணிப்புக்களுக்கு இடம்தருகிறது.

"போர் மழை பொழியும், மக்கள் போருடன் அழுது வடிந்துகொண்டிருப்பர்" என்பதுதான் தொடர்கதையாகுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

புதிய வருசம் எப்படியிருக்கப்போகிறது என்பதை இங்கே பிரதானமாக தீர்மானிக்க வேண்டியவர்கள் இரண்டு பேர்தான்.

ஒருவர், ஜனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்கா.

இன்னொருவர், வேலுப்பிள்ளை பிரபாகரன்.

இருவருக்குமே நெருக்கடிகள் இருக்கின்றன. அரசியல், இராணுவ, பொருளாதார நெருக்கடிகளை இரு தலைவர்களுமே இந்த ஆண்டு புதிய வடிவங்களில் சந்திக்க வேண்டியிருக்கும்.

ஜனாதிபதி சந்திரிக்கா எதிர்நோக்கியுள்ள அரசியல் நெருக்கடிகளை குறைத்து மதிப்பிட முடியாது.

பொதுஜன முன்னணிக்குள் தமது தலைமைத்துவம் தொடர்பாக பரவலான முணு முணுப்புக்கள் எழுந்திருக்கின்றன.

கடந்த தேர்தல்களில் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் வெகுதூரம் பின்னடைந்திருக்கிறது.

தமது தொகுதி மக்களை எந்த முகத்தோடு மீண்டும் சந்திப்பது என்று ஆளும் கட்சி எம்.பிக்கள் பலர் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை சந்திக்கவே பொதுஜன முன்னணி தயங்குகிறது. உள்ளூராட்சி தேர்தல்களை தொடர்ந்து தள்ளிப்போடுவதற்கு வெளியே என்ன காரணங்கள் கூறப்பட்டாலும், தமது வெற்றிவாய்ப்புக் குறித்த சந்தேகமே அரசின் பின்தள்ளிப் போடலுக்கான உண்மைக்காரணம் என்பது இரகசியமானதல்ல.

மாகாணசபைகளை கலைத்து தேர்தல் நடத்த தயாராக இருந்த அரசாங்கம், உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தி முடிக்க சூழல் சரியில்லை என்பது நொண்டிச் சாட்டுத்தான்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் சூடு தேர்தலில் வெல்ல உதவும் என்ற ஒரே நம்பிக்கைதான் மாகாண

> *"வடக்கு கிழக்கில் போடப்படும் ஒவ்வொரு விமானக் குண்டும் விரோதங்களையே விதைக்கிறது"*

சபை கலைப்புக்கு அவசரப்படவைத்தது.

சூரியக்கதிர் மூலம் புலிகள் முறியடிக்கப்பட்டுவிட்டார்கள் என்ற எண்ணம் தெற்கில் ஏற்பட்டிருந்தது. அந்த எண்ணம் பொய்யாவதற்கு இடையில் தேர்தலை நடத்தி முடித்துவிடலாம் என்று போட்ட கணக்குத்தான் தப்பாகிவிட்டது.

அது பொய்யானதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று; அரசியலமைப்பு தொடர்பாக தீர ஆராயாமல் அவசரமாக செய்யப்பட்ட முடிவு அதனால் நீதிமன்றத்திடம் குட்டு வாங்க வேண்டியதாகியது.

இரண்டாவது காரணம், சாதாரண மக்களைப் போலவே, அரசாங்கமும் புலிகள் சூரியக்கதிரோடு சுருங்கிப் போனார்கள் என்று தப்பாக கணிப்பிட்டது. ஆனால், தலைநகர்வரை தம் கரம் நீளுமளவுக்கு புலிகள் தமது பலத்தை தக்கவைத்திருக்கிறார்கள் என்பதை கொழும்பு மத்திய வங்கி குண்டுவெடிப்பு வெளிக்காட்டியிருந்தது.

எனவே- மாகாணசபைக் கலைப்பு செல்லுபடியாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தாலும்கூட தேர்தலை நடத்தக் கூடிய சாதகமான சூழல் அரசின் கையை விட்டு போய்விட்டது.

அதனால், நீதிமன்ற தீர்ப்பு அரசதரப்புக்கு ஒரு புறம் அதிர்ச்சியாக இருந்தாலும், மறுபுறம் ஓரளவு ஆறுதலாகவும் இருந்திருக்கும்.

வாக்காளர்கள் மத்தியில் முன்பிருந்த உற்சாகம் வற்றிக்கொண்டிருப்பதை பொது ஜன முன்னணியும் ஓரளவு புரிந்துகொண்டே இருக்கிறது.

வாக்காளர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டுமானால், வாக்குறுதிகளில் கணிசமானவற்றையானாலும் நிறைவேற்றியாக வேண்டும்.

வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடாது என்று அரசுக்கு பிடிவாதம் ஒன்றும் கிடையாதுதான். ஆனால், அதற்கான நிதி ஆதாரம் எங்கிருந்து வரும்?

ஒருகையால் போருக்கும் அள்ளிக் கொடுத்துக்கொண்டு, மறுகையால் அபிவிருத்திப் பணிகளுக்கு கொடுக்குமளவுக்கு அரசாங்கம் அப்படி ஒன்றும் பணக்கார அரசாங்கமல்ல.

ஒன்றில் போரை நிறுத்த வேண்டும், அல்லது போரை நடத்திமுடித்துவிட்டு அபிவிருத்தி பணிகள் நடத்தலாம் என்று முடிவு செய்யவேண்டும்.

அப்படிச் செய்தாலும்கூட போருக்கு கொட்டியழும் நிதிச் சுமையை சமாளிக்க அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்தியே தீரவேண்டியிருக்கும்.

விலைகள் உயர மக்களின் விரக்தியும் உயரும். விரக்தி உயர வாக்கு வங்கிகள் விலகும்.

ஆக, ஜனாதிபதி சந்திரிக்கா எதிர்நோக்கும் நெருக்கடிகளைப் பொறுத்தவரை அரசியல்-இராணுவ ரீதியான காரணங்கள் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டுள்ளன.

அரசியல் அரங்கில் ஜனாதிபதி சந்திரிக்கா தனது எதிராளிகளை வெற்றி கொள்ள வேண்டுமானால், கடந்த கால அரசாங்கங்களில் இருந்து, தனது அரசாங்கம் வித்தியாசமானது என்று காட்டியாக வேண்டும்.

அவ்வாறு நிரூபிக்க, வாக்குறுதிகளை நிறைவேற்றுதல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், புதிய வேலை வாய்ப்புக்களை வழங்குதல் போன்ற பணிகள் முக்கியமாகச் செய்யப்பட வேண்டியிருக்கும்.

போர் நடைபெறும்போது அவற்றைச் செய்வதற்குரிய பொருளாதார பலம் இருக்கப் போவதில்லை.

எனவே-போர்க்களத்தில் பெறும் வெற்றிகள் மூலமாக தனது முஷ்டிகளை உயர்த்திக்காட்டி வாக்காளர்களை உற்சாகம் கொள்ளச் செய்யலாம் என்று அரசாங்கம் நினைக்க வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றுகிறது.

ஆனால், போர்க்களம் அப்படி ஒன்றும் சுலபமான வெற்றிகளைக் குவிக்கக்கூடிய வகையில் இல்லை என்பதுதான் உண்மையான நிலவரம்.

அரசாங்கம் வெளுத்துக்கட்டிக்கொண்டிருக்கும் வகையில் பந்து வீசிக்கொண்டிருப்பவரல்ல பிரபாகரன்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் ஆட்டம் இழந்தால், உடனே வேறு ஒரு பகுதியில் அரசாங்கத்தை ஆட்டமிழக்கச் செய்யும் வகையில் பந்து வீசுகிறார் பிரபாகரன். எந்த முனையில் இருந்து, எவ்வாறான பந்து வருகிறது, சுழற்பந்தா, வேகப் பந்தா என்று அரசாங்கம் கணிப்பிட முன்னரே விக்கெட் காணாமல் போய்விடுகிறது.

ஜனாதிபதிக்கு எரிச்சல் தரும் விடயமும் அதுதான். அதனால்தான் ஜனாதிபதி பொறுமை இழந்த நிலையில் தமிழ் மக்கள் மௌனத்தை கலைக்க வேண்டும் என்று பேசவேண்டிய நிலைக்குச் சென்றார்.

கதை முடிந்துவிட்டதாக நினைத்துக் கொண்டிருக்க, புலிகள் எழுந்து விசுவரூபத்தை காட்டுகிறார்கள். அது எப்படி என்று ஜனாதிபதிக்கு வியப்பாக இருக்கிறது. தமிழ் மக்களின் பூரண ஆதரவுதான் காரணம் என்று முடிவுக்கு வந்துவிடுகிறார்.

வடக்கு-கிழக்கு போரில் புலிகள் தரப்பு இழப்பு தொடர்பாக படைத்தரப்பு ஜனாதிபதிக்கு சொல்லும் கணக்குப்படி பார்த்தால், புலிகளில் 90 வீதமானவர்கள் முடிந்திருக்க வேண்டும்.

ஆனால், புலிகளோ புதிது புதிதாக தாக்குதல் நடத்துகிறார்கள். அப்படிப் பார்த்தால் இறந்தவர்கள் உயிர்த்தெழுந்திருக்க வேண்டும். அல்லது தமிழ் மக்கள் புதிய உறுப்பினர்களை புலிகளுக்கு கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்குத்தான் ஒருவர் வரவேண்டியிருக்கும்.

ஜனாதிபதியும் அப்படியான மனநிலைக்குத்தான் தள்ளப்படுகிறார். இறந்தவர்கள் உயிர்த்தெழுவது சாத்தியமல்ல. எனவே, புதிய உறுப்பினர்கள் பெருவாரியாக புலிகளோடு சேர்கிறார்கள் என்று ஜனாதிபதி நினைத்திருக்கலாம். அதனால்தான் தமிழ் மக்கள் சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்று பேசுமளவுக்கு அவர் சென்றிருந்தார்.

உண்மையில் வடக்கு-கிழக்கு போர்க்களத்தில் புலிகள் தரப்பு இழப்பு படைத்தரப்பு சொல்லும் கணக்குகள் போல இல்லை. படைத்தரப்புக்கு சாதகமான சண்டைகளில் புலிகள் பின்வாங்கி, தமது சக்திகளை சேமித்துக் கொள்கிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்ப்பதில் புலிகள் பலத்த முயற்சிகளை செய்யவேண்டியிருக்கிறது.

படையினரின் விமானத்தாக்குதல், ஷெல் தாக்குதல்கள் போன்றவைதான் புலிகளின் உறுப்பினர் திரட்டலுக்கு கைகொடுத்து வருகின்றன.

வடக்கு-கிழக்கில் விமானம் மூலம் போடப்படும் ஒவ்வொரு குண்டும் விரோதத்துக்கான விதை என்பதை அரசு உணரவில்லை. ஆனால் உண்மை அதுதான்.

அதுதவிர, தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளத்தக்க எந்தவிதமான முன்னேற்றமும் தென்னிலங்கை அரசியல்வானில் காணப்படவில்லை.

ஜனாதிபதிகூட, தமது அரசியல் தீர்வு யோசனைகளை மறு பேச்சில்லாமல் தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்.

ஆனால், அரசாங்கம்கூட இதுதான் உறுதியான, இறுதியான தீர்வு என்று சொல்லத் தயங்கும் நிலையில், சிங்கள மக்களிடம் அபிப்பிராயம் கேட்டிருக்கிறது. பாராளுமன்ற தெரிவுக்குழுவில் விவாதத்திற்கு முன்வைத்துள்ளது.

சிங்கள மக்களிடம் பேசும்போது, இது இறுதியான தீர்வல்ல, சகல கட்சிகளின் கருத்துக்கேட்டே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அரசாங்கத் தலைவர்களே அடிக்கடி சொல்லுகின்றனர்.

அப்படியிருக்கும்போது, தமிழ் பேசும் மக்கள் மட்டும் கிடைப்பதுவரை லாபம் என்று மனநிலையில் இருக்க வேண்டும் என்று அரசாங்கமோ, அல்லது ஜனாதிபதியோ எதிர்பார்ப்பது எப்படி நியாயமாக முடியும்?

எல்லோரும் கருத்துச் சொல்லலாம் என்றவர் ஜனாதிபதிதான். இப்போது கருத்துச் சொல்லி, நேர்மையற்றவர்கள் என்று ஜனாதிபதியிடம் திட்டு வாங்கியிருப்பது தமிழ்கட்சிகள்தான். அதே சமயத்தில் தீர்வு யோசனைகளை எதிர்த்து கருத்துச் சொன்ன பௌத்த குருமார்கள், சிங்கள புத்திஜீவிகள் தொடர்பாக ஜனாதிபதி எதுவும் சொல்லவில்லை.

அதன் கருத்து, அவர்களோடு ஜனாதிபதிக்கு உடன்பாடு என்று அர்த்தமல்ல. எதிர்த்து பேசினால் அது சிங்கள மக்களுக்கு எதிரான கருத்தாக பிரசாரம் செய்யப்பட்டுவிடுமோ என்று தயங்குகிறார்.

தமிழ் கட்சிகள் அரசியல் தீர்வு யோசனையை தமிழ் மக்களிடம் கொண்டு செல்லவில்லை என்றும் ஜனாதிபதி வருத்தப்படுகிறார்.

அரசியல் தீர்வின் அவசியத்தை தமிழ் மக்கள் எப்போதும் உணர்ந்தே உள்ளனர். ஆனால் "தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது?" என்று கேட்பவர்கள் தென்னிலங்கையில்தான் உள்ளனர்.

எனவே-ஜனாதிபதியும், பொது ஜன முன்னணியும்தான் தமது தீர்வு யோசனைக்கு ஆதரவைத்திரட்டும் வகையில் தென்னிலங்கையில் பிரசாரம் செய்ய வேண்டியிருக்கிறது. அதன்மூலம் பேரினவாதிகளை சாதாரண- சிங்கள மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தும் வேலையையும் செய்ய வேண்டியிருக்கிறது.

ஆனால், பொது ஜன முன்னணிக்குள்கூட தீர்வு யோசனை தொடர்பாக தெளிவான கருத்து இல்லை. அதனைத் தாமும் அபிப்பிராயம் சொல்லி விவாதிப்பதற்குரிய ஒரு ஆவணமாகவே நோக்குகின்றனர்.

ஆக, பந்தை தமது கோட்டுக்குள் வைத்துக் கொண்டு, தமிழ் கட்சிகளை சுட்டிக்காட்டி 'பந்து அவர்கள் பக்கம்' இருப்பதாக சொல்வது தீர்வுக்கு உதவாது.

இவ்வாறான நிலையில், தீர்வு எட்டாத தூரத்தில் இருப்பது தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கைகளை வெல்வதற்கு பதிலாக சந்தேகங்களையே தோற்றுவித்துள்ளது.

தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகள் உணரப்படாத நிலையில், புலிகளை முறியடித்தால் பிரச்சனை தீர்ந்துவிடும் என்ற கருத்து எவ்வகையில் ஏற்றுக் கொள்ளப்படும்?

தமிழ் மக்களுக்கு பிரச்சனை இல்லை என்று சொல்ல புலிகளால் ஏற்படும் பிரச்சனைதான் தடையாக இருக்கிறது.

எனவே-புலிகளை ஒழித்துவிட்டால் பிரச்சனையே இல்லை என்று ஆகிவிடும். அதுதான் இனவாதிகளது நோக்கம்.

அதனால்தான், புலிகளை முதலில் முறியடித்துவிட்டு, பின்னர் அரசியல் தீர்வை வைக்கலாம் என்று பௌத்த மத குருமார்கள் சிலர் புத்திசாலித்தனமாக யோசனை சொல்லியிருந்தனர்.

அதனையும்மீறி அரசாங்கம் தனது யோசனைகளை முன்வைத்தபோது, அவர்கள் சுயரூபம் கலைந்து, தமிழர்களுக்கு பிரச்சனையா? யார் சொன்னது? என்று மாநாடு கூட்டி முழங்கியுமிருந்தனர்.

இப்போதுள்ள நிலையில் புலிகளுக்கு எதிரான சக்திகள்கூட, "புலிகள் இல்லாவிட்டால் இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு கிட்டுமா?" என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஆக, புலிகளின் அரசியல் பலமும் வலுவடைந்தே வருகிறது. புலிகளின் அவசியத்தை அரசியல் ரீதியில் நியாயப்படுத்தக்கூடிய காரணங்கள் தென்னிலங்கையில் இருந்துதான் தோன்றுகின்றன.

தற்போதுள்ள நிலையில் புலிகள் அரசியல், இராணுவரீதியில் அரசுக்கு சவால்விட்டுக் கொண்டேயிருக்கப்போகிறார்கள். அதற்குரிய வாய்ப்பும், வளமும் அவர்களிடம் இருக்கின்றன.

எனவே-போர் மூலமாக மக்களை உற்சாகம் கொள்ளச் செய்யும் காரியத்திலும் அரசாங்கம் வெற்றி பெறமுடியாது.

யுத்த களத்தில் தோல்விகள் ஏற்படும்போது எதிர்க்கட்சியின் பிரசாரங்களுக்கு அரசால் ஈடுகொடுக்க முடியாமல் போகலாம்.

அதனால், புலிகளையும், எதிர்க்கட்சிகளையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் அரசாங்கம் பொறுமை இழக்கலாம்.

வழக்கமான முறைகளில் அரசாங்கம் தனது பிடியை தக்கவைத்துக் கொள்ள முடியாதபோது, புதிய சட்டங்கள், முறைகள் கொண்டுவரப்படுகின்றன.

நாடெங்கும் அவசரகால நிலையை அமுலுக்கு கொண்டுவராமல் ஆட்சி நடத்த முடியாதளவுக்கு அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதேவேளையில் புலிகளுக்கும் நெருக்கடிகள் இல்லாமல் இல்லை.

இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் சொந்த இடங்களுக்கு திரும்பும் ஆர்வம் பெருமளவில் தோன்றத் தொடங்கியிருக்கிறது.

அதற்கிடையே வடமராட்சி, தென்மராட்சிமக்களையும் இடம்பெயருமாறு கேட்டு அது சாத்தியமாகவில்லை.

புதிய உறுப்பினர்களும் எதிர்பார்க்குமளவுக்கு சேர்கிறார்களில்லை.

இந்நிலையில் அரசாங்கம் புதிய இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டால், மேலும்நெருக்கடிகள் தோன்றலாம்.

கெரில்லா தாக்குதல்களில் தமது பலத்தை புலிகளால் தக்கவைக்க முடிந்தாலும்கூட, கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பெரும்பாலானவை கைவிட்டுப் போவது மக்கள் மீதுள்ள ஆளுமையை தளரச் செய்துவிடும்.

அதுதவிர, வெளிநாட்டு ஆதரவை பெறும் முயற்சிகளில் குறிப்பிட்டளவு முன்னேற்றம் ஏற்படாமல் இருப்பதும், அதனை அரசாங்கம் தனக்கு சாதகமாகக் கொள்வதும் புலிகளுக்கு பாதகமான விஷயம்தான்.

அரசாங்கத்தின் யுத்த முயற்சிகளை முறியடிக்கும் புலிகளது முக்கிய தந்திரம் தலைநகரில் குண்டுத்தாக்குதல்கள் நடத்துவதுதான்.

ஆனால், அத்தாக்குதல்கள் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் தற்காலிக பலனைக் கொடுத்தாலும்கூட, புலிகளுக்கும் வெளியுலகில் கெட்ட பெயரை ஏற்படுத்தக் கூடியவை. அதனைப் புலிகளும் உணர்ந்தே இருக்கின்றனர். அதனால்தான் தவிர்க்க முடியாத நிலையில் மட்டுமே தலைநகரில் குண்டுத்தாக்குதல் நடத்தப்படுகிறது.

அதேவேளை, புலிகள் தலைநகரில் தாக்கக்கூடும்என்ற அச்சுறுத்தல்தான் வடபகுதியில் வேகமான தாக்குதல் ஒன்றை நடத்த முன்னர் அரசு ஒன்றுக்கு பத்துத்தடவை யோசிக்க வேண்டிய நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

எப்படியோ இரு தரப்புக்கும் நெருக்கடிகள் இருப்பது உண்மை.

ஆனால், ஜனாதிபதி சந்திரிக்காவை விட பிரபாகரன் நெருக்கடிகளில் இருந்து மீளக் கூடியவராக இருக்கிறார்.

ஏனெனில், அவருக்கு அரசும் படைகளும் மட்டும்தான் எதிரி. ஆனால் ஜனாதிபதிக்கோ அவரது ஒவ்வொரு காலடியையும் கவனித்துக் கொண்டிருக்கும் அரசியல் எதிரிகளும் இருக்கிறார்கள்.

அரசும், படைகளும் செய்யும் தவறுகளில் இருந்து பிரபாகரன் தனது பலத்தை மீளப்பெறும் சாதகங்கள் உள்ளன. ஜனாதிபதிக்கு அந்தச் சாதகங்கள் இல்லை.

பிரபாகரனுக்கு அடி சறுக்கினாலும் சுதாகரித்து எழமுடியும். ஏனெனில் ஆளும் கட்சியும் அவர்தான், எதிர்க்கட்சியும் அவர்தான்.

ஜனாதிபதிக்கு அடி சறுக்கினால், அந்த இடத்தைப் பிடிக்க எதிர்க்கட்சி ஆவலோடு காத்திருக்கிறது.

இத்தனைக்கும் மத்தியில் ஜனாதிபதி சந்திரிக்காவுக்குள்ள சாதகம், அவரது வசீகரம். பெண் ஜனாதிபதி என்ற அனுதாபத்தோடு வெளிநாடுகள் காட்டும் மென்மையான போக்கு.

ஆனால், பொறுமை இழந்த நிலையில் தனது அரசியல் எதிரிகளை ஓரம்கட்ட தனது அதிகாரங்களை ஜனாதிபதி பயன்படுத்துவாரேயானால் அவரது வசீகரம் குறையத் தொடங்கிவிடும்.

போர் ஒரு புறமும், எதிர்க்கட்சிகளின் புகைச்சல் மறுபுறமும் உள்ள நிலையில் ஜனாதிபதி தனது அடுத்த அடியை எவ்வாறு எடுத்துவைக்கப்போகிறார்? புலிகளும் அதனைத்தான் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி சந்திரிக்கா கயிற்றில் நடக்கவேண்டிய வருசம் இது.

## அதிரடி அய்யாத்துரை



தீர்வுப்பொதியில் குறையிருப்பதை அறிய கூட்டான கட்சிக்கு மூன்றுமாதம் தேவைப்பட்டிருக்குது பார்த்தியளோ. அதுவும் மேலிடம் குறைசொல்லிப் பேட்டி கொடுத்தபிறகுதான் தலைவர் வாய்திறந்திருக்கிறார். நீலமானவர் மட்டும் குறையாக ஒரு சொல்கூட உதிர்க்கவில்லையென்பது சிந்திப்போர் கவனத்தில் கொள்ளத்தக்கது. உள்ளே அவர் இருக்க தலைவர் வெளியே பேட்டி கொடுப்பதால் யாது பலன்?

**வ**டக்கு-கிழக்கில் என்னவெல்லாம் நடக்குது. அரசாங்கம் என்ன செய்யிது. ரெண்டு எழுத்தார் என்ன செய்யினம் எண்ட விபரமெல்லாம் தலைநகரில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கு விலாவாரியாகத் தெரிந்திருக்காம். எப்படி எண்டு கேக்கிறியளோ? விசா கேட்டு செல்லும் நம்மவர்கள் வேறெங்கும் சொல்லத் தயங்கும் விஷயங்களையெல்லாம் திறந்த மனதோடு சொல்லிப்போடுகினமாம். நாட்டைவிட்டு போவதற்கு நியாயமான காரணம் சொல்லத்தானே வேணும். தூதரக நாலு சுவர்களுக்குள்தான் நம்மவர்களுக்கு பேச்சு சுதந்திரத்தை அனுபவிக்க முடியுதாக்கும். அனுபவிக்கட்டுமன்! மனசில் உள்ளதை கொட்ட ஒரு இடம் வேண்டாமோ? தேவாலயங்களில் செய்த பாவங்களை சொல்லலாம். தூதரகங்களில் மட்டும்தானே செய்யப்படும் பாவங்களையும் சொல்லலாம்.

**அ**தென்னவோ தெரியாது, தலைநகரில் அமர்க்களமாக வெடி கொளுத்தினால் அடுத்த கட்டமாக கவலைக்குரிய காரியங்கள்தான் நடக்குது. சூரியக்கதிரும் அப்படித்தான். கிரிக்கெட் விளையாட்டிலும் அப்படித்தான். அதிக மகிழ்ச்சி வரும் முன்னே, கவலைவரும் பின்னே என்றமாதிரியல்லோ போகுது. நிரந்தர மகிழ்ச்சிக்கும் நம் நாட்டுக்கும் எட்டாப் பொருத்தமோ தெரியேல்லை. எண்டாலும் சிங்கர் கிண்ணத்துக்கு பாக்கியமில்லை. நம்நாட்டுக்கு கிடைச்சிருந்தா ஊர் ஊராக சுத்தி ஆசீர்வாதம் வாங்கியிருக்குமல்லோ.

**ஆ**ளும் அணிக்குள் போக்குவரத்துக்குப் பொறுப்பானவரின் தலைமையில் உள்ள அணி தேசிய அரசாங்கம் அமையவேண்டும் என்று சொல்லி வருகிறதாம். சர்வ அதிகாரமுள்ளவருடன் கடும் அதிருப்தியில் இருக்கிறார்களாம். ஆனால் அதிகாரமுள்ளவரின் தாயார் தொடர்பாக நல்லபிப்பிராயம் வைத்திருக்கிறார்களாம். போக்குவரத்துக்கு பொறுப்பானவரும், அவரது அணியினரும் அரசியல் தீர்வு சமாச்சாரத்தில் கடும்போக்கை எடுத்து, நெருக்கடி கொடுக்கவும் நினைச்சிருக்கினமாம். வாழ்க பொதுநலம்.

**வ**ருசத்துக்காக பாவனைப் பொருட்கள் விலை குறைக்கப் பட்டிருப்பதாக சொல்லப்பட்டாலும், வியாபாரிகளின் செவியில் அது விழுந்தமாதிரியும் தெரியேல்லை. விலைகள் குறைஞ்ச மாதிரியும் தெரியேல்லை. வருசத்துக்கு பவர் கட் இல்லாதது மட்டும் புழுக்கம் இல்லாத, வெளிச்சமான செய்தி.

**இ**லங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு புதிய தலைவர் பொறுப்பேற்றுள்ளார். தேர்தல் மூலம் நடந்த தெரிவு அது. அதற்குப் பின்னர்தான் சிங்கர் கிண்ண போட்டி நடந்தது. வெற்றிபெற்றால் ஊர்புகழும். தோல்வி கண்டால் பல காரணங்கள் பேசப்படும். இலங்கை அணித்தோல்விக்கு பேசப்படும் காரணங்களில் ஒன்று என்ன தெரியுமோ? புதிய தலைவரை அணிக்குள் ஒரு பகுதியினருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லையாம். அரசியல் புகுந்துவிட்டதாக நினைக்கிறார்களாம். புதிய தலைவர் தலைநகரில் பிரபலமான மருத்துவமனை உரிமையாளாரின் புத்திரர்.

**ப**ச்சைக் கட்சியினர் இறால் போட்டு சுறாப் பிடிக்கும் வேலையில் இறங்கியிருக்கிறார்கள். அம்மையாருக்கு அரசியல் பரிசாக வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு மகனார் ஆதரவாக வாக்களிக்க அனுமதித்ததும் அதற்குத்தானாம். மகனைவைத்து ஆளும் அணிக்குள் தூண்டில்போட திட்டம் போடுகினம் என்று கேள்வி. சோழியன் குடுமி சும்மா ஆடுமோ?

**கொ**ழும்பில் வேலை செய்த கணவர் மாரடைப்பால் மரணம். மனைவி பாஸ் கேட்டாராம். மூன்று நாளாக இழுத்தடித்து விட்டுத்தான் ரெண்டு எழுத்தார் பாஸ் கொடுத்தார்களாம். அதன் பிறகு வவுனியாவில் காத்திருப்பு. சகல தடைகளையும் தாண்டி வருவதற்கு இடையில் கொழும்பில் இறுதிச் சடங்கு முடிஞ்சுபோட்டுது.

**கி**ழக்கில் ரெண்டு எழுத்தார் வோக்கி டோக்கி மூலம் படையினருக்கு சவால்விடுகிறார்களாம் தாங்கள் நிற்கும் இடத்தைச் சொல்லி இங்குதான் நிற்கிறோம். முடிந்தால் வாருங்கள் என்கிறார்களாம். அவை பேசுறதை காதுகொடுத்துக் கேட்கும் சனம் இடத்தைக் காலிபண்ணி நழுவுகினமாம். எல்லாம் ஒரு பாதுகாப்பு நோக்கத்தோடுதான்.

**ச**மீபத்தில் படித்த அட்டகாசமான- புதுக்கவிதை ஸ்டைலில் உள்ள புது மொழி இது. உங்களுக்கும் பிடிக்குதோ பாருங்கோ.

**"பொல்லாத உலகமிது**
**தயங்கி தயங்கிப் பேசினால்**
**உண்மையை சந்தேகிக்கிறது!**
**இனிக்க இனிக்க பேசினால்**
**பொய்யை சம்மதிக்கிறது!"**

(ராஜசேகர்)

# அரசியல் தொடர்

## அற்புதன் — எழுதுவது

74

# வரையறைக்குள் வழங்கப்பட்ட ஆயுதங்கள்

### ஈழம் கம்யூனிஸ்ட்

ஈழம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர் பாலசுப்பிரமணியம்.

அவர் முன்னர் ஜே.வி.பியில் முக்கிய பிரமுகராக இருந்தவர்.

ஜே.வி.பி. ஈழக்கோரிக்கையை ஆதரிக்க வில்லை. அதனால் தனி இயக்கம் தொடங்கு வதாகக் கூறி ஈழம் கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்தவர் பாலசுப்பிரமணியம்.

இயக்கங்களில் சேர விரும்பிய இளைஞர்கள் பலருக்கு யாருடன் தொடர்பு கொள்வது என்று தெரிந்திருக்கவில்லை.

எந்த இயக்கத்தில் இணைந்தாவது ஆயுதம் ஏந்திப் போராடவேண்டும் என்பது தான் 1983 கலவரத்தின் பின்னர் தமிழ் இளைஞர்களின் எண்ணமாக இருந்தது.

அந்த மனநிலை பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் இயக்கம் நடத்தி ஆள் திரட்டவும் வசதியாகிப்போனது.

இளைஞர்களையும், பெண்களையும் திரட்டிக்கொண்டு ஆயுதப்பயிற்சி கொடுக்க தமிழ்நாட்டுக்குச் சென்றார் பாலசுப்பிரமணியம்.

அங்கு அவரது நடத்தை சரியில்லை; இளைஞர்கள் பலர் விலகினார்கள்.

கேரள மாநிலத்திற்கு சென்ற பால சுப்பிரமணியம் தன்னை நம்பிச்சென்ற பெண்களை தவறானமுறையில் கையாளத் தொடங்கினார்.

ஏனைய இயக்கங்களுக்குப் பயந்து தலைமறைவானார். அத்தோடு ஈழம் கம்யூனிஸ்ட் கட்சியின் கதையும் முடிந்தது.

### இந்தியாவின் ஆயுதங்கள்

1986 இன் மத்திய பகுதியில் விமானத் தாக்குதல்கள் அதிகரித்தன. பொம்பர்கள் அடிக்கடி தாழப்பறந்து குண்டுகளை வீசின.

ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்யப்பட்டன.

அதனால் ரெலோ இயக்கத்திற்கு ஏனைய நான்கு இயக்கங்களைவிடவும் கூடுத லான ஆயுதங்கள் கிடைத்தன. ஐந்து இயக் கங்களுக்குள் குறைந்தளவான ஆயுதங்கள் கிடைத்தது ஈரோஸ் இயக்கத்திற்கே.

முதற்கட்டமாக வழங்கப்பட்ட ஆயுதங் களில் உப-இயந்திரத் துப்பாக்கிகள், ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் போன்றவையே இருந்தன. எல்.எம்.ஜி., ஆர்.பி.ஜி. போன்ற ஆயுதங்கள் தலா ஒன்றுதான் வழங்கப்பட்டன.

இந்திய உளவுப்பிரிவான 'றோ' மூலமாகவே ஆயுதங்கள் தமிழ்நாட்டில் வைத்து வழங்கப்பட்டன.

கடற்கரையோர பகுதி ஒன்றுக்கு வேனுடன் வரச்சொல்லுவார்கள். அந்தப் பகுதி ஆள் நடமாட்டமில்லாத பகுதியாக இருக்கும். அங்கு வைத்து ஆயுதங்களை கையளிப்பார்கள் 'றோ' அதிகாரிகள்.

### முன்ஜாக்கிரதை

இந்தியாவும் ஏ.கே.47 ரக துப்பாக்கி களை சொந்தமாக உற்பத்தி செய்தது. அவை தரத்தில் உயர்ந்தவையாகவும் இருந்தன.

எனினும், தனது சொந்த உற்பத்திகளான ஆயுதம் எதனையும் இயக்கங்களுக்கு வழங் காமல் ஜாக்கிரதையாக இருந்தது இந்தியா.

இந்திய எல்லைப் பகுதிகளில் கைப்பற்றப் பட்ட ஆயுதங்கள், மற்றும் வெளிநாடுகளில் வாங்கப்பட்ட ஆயுதங்கள் என்பவற்றையே இயக்கங்களுக்கு வழங்கியது இந்தியா.

இயக்கங்களின் ஆயுதங்கள் இலங்கை அரசின் கையில் மாட்டினால் அவை இந்தியாவின் தயாரிப்புக்களாக இருக்கும் பட்சத்தில் இராஜதந்திர பிரச்சனைகள் தோன்றும்.

இந்தியா ஆயுதம் வழங்கியது ஆதாரபூர்வ மாக வெளிப்படையாகிவிடும் என்பதால்தான் முன்ஜாக்கிரதையாக நடந்தது இந்தியா.

இந்தியா மட்டுமல்ல, பிறிதொரு நாட்டுக் குள் இயங்கும் போராட்ட அமைப்புகளுக்கு இரகசியமாக ஆயுத உதவி செய்யும் எந்த வொரு நாடும் தனது சொந்த ஆயுதங்களை வழங்குவதில்லை.

இரண்டாம், மூன்றாம் கட்டமாக ஆயுதங் கள் வழங்கியபோது இயக்கங்களின் ஆட்பலம் தொடர்பாக தமக்கிருந்த தகவல்களின் அடிப் படையில் ஆயுதங்களை வழங்கியது 'றோ'.

ஒவ்வொரு இயக்கமும் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகமாகக் காட்டுவதற்கு போட்டி போட்டன.

தலைகளை எண்ணி ஆயுதம் வழங்கப் படும் என்பதால், தலைக் கணக்குக் காட்டுவதில் இயக்கத் தலைமைகளுக்குள் கடும் போட்டி.

குறிப்பாக, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட் இயக்கங்கள் மத்தியில்தான் உறுப் பினர் எண்ணிக்கை காட்டுவதில் போட்டி இருந்தது.

புலிகள் அமைப்பும், ஈரோசும் அதி லிருந்து சற்று விலகியே நின்றன.

புலிகள் அமைப்பும், ஈரோஸ் இயக்கமும் உறுப்பினர் திரட்டலில் கதவுகளை அகலத் திறக்காமல் கவனமாகவே இருந்தன.

1986 இன் பிற்பகுதியில்தான் இந்தியா கலிபர் 30 ரக ஆயுதங்களை இயக்கங்களுக்கு வழங்கியது. கலிபர் 50 ரக ஆயுதம்தான் இயக்கங்கள் கேட்டிருந்தன. எனினும் கலிபர் 30 ரக துப்பாக்கிதான் வழங்கப்பட்டது.

கலிபர் 30 ரக துப்பாக்கியால் விமானங் களை தாக்கமுடியும். விமானங்கள் தாழப் பறந்து வந்தால்தான் தாக்குதல் பயன ளிக்கும்.

எப்படியாவது விமான எதிர்ப்பு ஆயுத மான 'சாம்-7' ஒன்றே ஒன்று கிடைத்தாலும் போதும் என்று இயக்கங்கள் ஒற்றைக்காலில் நின்று பார்த்தன.

இந்தியா மசியவேயில்லை.

### சொந்த முயற்சி

இந்தியா சாம்-7 தரப்போவதில்லை என்று தெரிந்ததும், சொந்த முயற்சியில் வெளிநாடுகளில் விலைகொடுத் தாவது சாம்-7 வாங்க புலிகளும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கமும் முற்பட்டன.

சாம்-7 வாங்குவதற்கு பணம் தேவை என்று யாழ்ப்பாணத்தில் புலிகள் நிதி திரட்டலில் ஈடு பட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்.வும் நிதி திரட்டலில் ஈடுபடத் தொடங் கியது.

அதனால், யாழ்ப்பாணத்தி லிருந்து கொழும்பு சென்று தொழில் செய்த பிரபல வர்த்தகர் கள் பலர் யாழ்ப்பாணம் செல்லு வதற்கு பயந்தனர்.

அங்கு சென்றால் தம்மிடம் நிதி கேட்டுவிடுவார்களோ என்ற பயத்தில் அவர்கள் ஊர் செல் வதையே நிறுத்திக்கொண்டனர்.

கொழும்பில் பிரபலமான தமிழ் வர்த்தகர் ஒருவர் இரகசிய மாக யாழ்ப்பாணம் சென்றார். யாழ்ப் பாணத்தில் ஒரு தனியார் மருத்துவமனையில் அவரும் ஒரு பங்குதாரராக இருந்தார்.

இரகசியமாக செல்வதாக அவர்தான் நினைத்துக்கொண்டிருந்தாரே தவிர, அவர் யாழ்ப்பாணம் வரப்போகும் செய்தி ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்புக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தது.

தனியார் மருத்தவமனைக்கு சென்று விட்டு, அவர் திரும்பியபோது, இடைநடுவே வைத்து அவரை தமது வேனில் அழைத்துச் சென்றுவிட்டது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.




தமிழக சஞ்சிகை வெளியிட்ட காட்டூன்

அவரை விடுதலை செய்வதற்கு கேட்கப் பட்ட தொகை 25 இலட்சம். அப்போது அது மிகப்பெரிய தொகைதான்.

பின்னர் 10 இலட்சம் ரூபாய் கொடுத்து விட்டு அவர் கொழும்பு திரும்பினார்.

அந்த நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு பிரிவாக இருந்தது.

நிதி திரட்டலில் ஈடுபட்டவர்கள் டக்ளஸ் தேவானந்தா அணியினர்தான்.

அப்போது தமிழ்நாட்டிற்கு சென்றிருந் தார் டக்ளஸ் தேவானந்தா. வெளிநாடொன் றில் ஆயுதங்களை விலைக்கு வாங்குவதற் குரிய தொடர்பு அவருக்குக் கிடைத்திருந்தது.

குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய்க் காவது ஆயுதங்கள் கொள்வனவு செய்ய. திட்டமிடப்பட்டது.

அதற்குரிய பணத்தில் ஒரு பகுதியை திரட்டுவதில்தான் டக்ளஸ் தேவானந்தா அணியினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் அப் போது பொறுப்பாக இருந்தவர் ஜெகன். (தற்போது ஈ.பி.டி.பியில் இருக்கிறார்) காரைநகரில் மட்டும் பலர் தாமாகவே முன்வந்து கிட்டத்தட்ட பத்து இலட்சம் ரூபா வரையான நகைகளை வழங் கினார்கள்.

யாழ்ப்பாணத்தில் பணம் கேட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பால் கொண்டு செல்லப் பட்ட வர்த்தகர்களில் சிலர் தமது ஆதரவாளர்கள் என்றும், அவர் களை விடுதலை செய்யுமாறும் புலிகள் அமைப்பினர் கோரினார் கள்.

புலிகள் இயக்க நிதிப் பொறுப்பாளர் மதன், ஈ.பி.ஆர். எல்.எஃப். அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று ரமேசுடன் பேசினார். "உங்கள் ஆதரவாளர் களை நாமும் பிடிக்கமாட்டோம். எமது ஆதரவாளர்களை நீங்களும் பிடிக்க வேண்டாம்" என்றார் மதன்.

முதலில் மறுத்தாலும், பின்னர் புலி களுக்கு ஆதரவான வர்த்தகர்கள் மட்டும் விடுவிக்கப்பட்டனர்.

### வருமானமுள்ள ஆலயங்கள்

யாழ்ப்பாணத்தில் வருமானமுள்ள ஆலயங்களில் முதன்மையானவை நல்லூர் கந்தசுவாமி கோவில், துர்க்கையம்மன் கோவில் போன்றவையாகும்.

துர்க்கையம்மன் கோவிலை திறம்பட நிர்வகித்துவந்தவர் தங்கம்மா அப்பாக்குட்டி.

அவரிடம் சென்று, ஆலய வருமானத்தில் ஒரு பகுதியை தந்துதவுமாறு கேட்டது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

மறுப்பேதும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை கொடுத்தார் தங்கம்மா அப்பாக்குட்டி.

நல்லூர் கோவில் முதலாளியிடமும் நிதி கேட்டார்கள். "முன்புபோல வருமானம் இல்லை. பெரியளவில் எதிர்பார்க்காதீர்கள்" என்றார் அவர்.

"உங்களால் தரக்கூடியது எவ்வளவு?" என்று கேட்டார்கள். "என் மனைவியின் கையிலுள்ள தங்க வளையல்களைத் தரு கிறேன்." என்றார்.

"வேண்டாம், சரியாகக் கஷ்டப்படுகிறீர்கள் போல இருக்கிறது. நாங்கள் இனி உங்களிடம் பணம் கேட்கமாட்டோம்," என்று சொல்லி விட்டு திரும்பிவிட்டது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அவர்கள் சொன்ன தொனியில் மறை பொருள் இருக்கலாம் என்று பயந்து போனார் கோவில் முதலாளி.

அதனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப் புக்கு நெருக்கமானவர்கள் மூலமாக தொடர்பு கொண்டு, ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை வழங்குவதற்கு சம்மதம் தெரி வித்தார்.

இதற்கிடையே டக்ளஸ் தேவானந்தா அணியினர் பரவலான நிதி திரட்டல்களில் ஈடுபட்டமை பத்மநாபா அணியினருக்கு சந்தேகத்தைக் கொடுத்தது.

### தற்காப்புக் குழுக்கள்

யாழ்ப்பாணத்தில் பொதுக் கூட்டங்கள், கருத்தரங்குகள் என்பவற்றை நடத்தியதோடு, கிராமரீதியாக தற்காப்புக் குழுக்களை உருவாக்கும் வேலைகளிலும் டக்ளஸ் தேவானந்தா அணியினர் ஈடுபடத் தொடங் கினர்.

பொதுக்கூட்டங்களில் டேவிற்சன் உரை யாற்றினார். தமிழர் விடுதலைக் கூட்டணி யினரால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டங்களின் பின்னர், இயக்கங்கள் எதுவும் தொகுதி ரீதியாக பொதுக்கூட்டங்கள் நடத்தியதில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினர்தான் தொகுதி ரீதியான பொதுக்கூட்டங்களை நடத்த ஆரம்பித்தனர். பொதுக் கூட்டங்களில் டேவிற்சன் உரையாற்றுவார். கருத்தரங்கு களில் ரமேஷ் உரையாற்றினார். இருவருமே டக்ளஸ் தேவானந்தா அணியில் இருந்தவர் கள்.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்து பத்மநாபா அணியினர் செய்த முடிவு இதுதான்.

'தனியான இயக்கமாக செயற்பட திட்ட மிட்டுவிட்டனர் டக்ளஸ் தேவானந்தா அணி யினர்' என்ற முடிவுக்குத்தான் அவர்கள் வந்தனர்.

அதனால்- ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயற் பாடுகளில் ஒருமித்ததன்மை இல்லாமல் போகத் தொடங்கியது.

யாழ்ப்பாணத்தில் கோப்பாயில்வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றை கடத்தினார்கள் இரண்டு இளைஞர்கள்.

அந்த வழியால் வந்த புலிகள் இயக்கத்தினர் அவர்கள் இரு வரையும் பிடித்து விட்டார்கள். முதலில் தாம் யார் என்பதை இருவரும் சொல்லவில்லை. அதனால் அடி விழுந்தது. பின்னர்தான் தாங்கள் ஈ.பி. ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் என்று அவர்கள் சொன்னார் கள்.

புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலீபன்தான் அவர்கள் இரு வரையும் விசாரித்தார்.

இருவரும் திலீபனிடம் சொன்னார்கள்- "எங்களை டக்ளஸ் தேவானந்தா ஆட்களி டம் கொடுக்க வேண்டாம். நாங்கள் பத்மநாபாவின் ஆட்கள்."

தீலிபன் உடனே தமது உறுப்பினர்கள் இருவரை ரமேசிடம் அனுப்பினார். "உங்கள் ஆட்கள் இரண்டுபேர் இருக்கிறார்கள். உங்களிடம் அனுப்ப வேண்டாம் என்கிறார்கள். நேரடியாக வந்து அழைத்துச் செல்லுங்கள்" என்று சொல்லியனுப்பி இருந்தார்.

இயக்கத்தின் தலைமைப்பீடத்தில் பிரச்சனைகள் இருப்பதைவைத்து, கட்டுப் பாட்டை மீறி நடப்பவர்களும் பயன் அடைந்து கொள்ள முற்படுவது வழக்கம்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்குள் ஏற்பட்ட பிரச்சனையின்போது உறுப் பினர்கள் சிலர் அவ்வாறுதான் நடந்து கொண்டார்கள்.

### முஸ்லிம்கள் மீது தாக்குதல்

பேசாலைக் கடலில் ஐந்து படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப்பிர யோகம் செய்தனர்.

தள்ளாடி முகாமில் இருந்து மூன்று படகுகளில் வந்த இராணுவத்தினரே தாக்குதலில் ஈடுபட்டனர்.

1.7.86 அன்று நடைபெற்ற அந்த சம்பவத்தில் 5 முஸ்லிம் மீனவர்களும், ஒரு தமிழ் மீனவரும் கொல்லப்பட்டனர்.

### உரிமை கோரல்கள்

வடக்கு-கிழக்கில் போராளி இயக்கங் களோடு ஏற்படும் மோதல்கள் தொடர்பாக அரசாங்கம் வெளியிடும் எண்ணிக்கைகள் சரியாக இருப்பதில்லை.

அதேபோல போராளி அமைப் புக்களும் தமது பலத்தை உயர்த்திக்காட்ட தமது தாக்குதல்களில் பலியான படை யினரது எண்ணிக்கைகளை உயர்த்தியே கூறிவந்தன.

முகாமை விட்டு வெளியேறி முன் னேற இராணுவத்தினர் முற்படுவார்கள். இயக்கங்கள் சென்று தாக்குதலில் ஈடு பட்டுவிட்டு, தமது விருப்பப்படி பலி யான படையினரது எண்ணிக்கையை சொல்லுவார்கள்.

பதுங்குநிலை எடுத்து தரையில் விழுந்து படுப்பவர்களையும் பலியான வர்கள் கணக்கில் சேர்த்துக் கொள்வார்கள்.

"கண்ணாலே பார்த்தோம்! பத்துப் பேர் விழுந்தார்கள்" என்று தாக்கதலுக்கு சென்று திரும்புபவர்கள் கணக்குச் சொல் வதும் அதனை வைத்துத்தான்.

படையினரை அதிக எண்ணிக்கையில் வீழ்த்துவது யார் என்பதிலும் போட்டி.

புலிகள் இயக்கத்தினரின் தாக்குதலில் முதல் நாள் பத்துப்பேர் பலி என்று செய்தி வந்திருக்கும். மறுநாள் ரெலோ தாக்கியதில் நாவற்குழி முகாமுக்குள் பதின்மூன்று பேர் பலி என்று செய்தி வரும்.

யாழ்ப்பாணத்திலிருந்து அப்போது ஈழநாடு, உதயன், ஈழமுரசு ஆகிய பத்திரிகைகள் வெளிவந்தன. இயக்கங்கள் கூறும் எண்ணிக்கையை அவை அப் படியே வெளியிடும்.

வெளியிடாவிட்டால், இயக்கங்களின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட பத்திரிகைக் காரியாலயங்களுக்கு நேரில் சென்று விடுவார்கள்.

இயக்கங்கள் ஒவ்வொன்றும் தமது தாக்குதலால் பலியானதாகக் கூறிய படையினரின் எண்ணிக்கையைக் கணக் கிட்டுப் பார்த்தால் யாழ்-குடா நாட்டில் இருந்த இராணுவ முகாம்கள் காலியாகத் தான் காட்சியளித்திருக்க வேண்டும் என்று விஷயமறிந்தவர்கள் ஜோக்கடிப் பதுண்டு.

(தொடர்ந்துவரும்)



குண்டுவீச்சால் காயமடைந்த கைக்குழந்தையுடன் தாய்

# இந்தியாவிடம் 'சாம்-7' கேட்ட இயக்கங்கள்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

இயக்கங்கள் தரையிலிருந்து எல்.எம்.ஜி துப்பாக்கி மூலமாக ஹெலியை நோக்கி தாக்குதல் தொடுத்தன. எல்.எம்.ஜியின் சுடுதூரத்துக்கப்பால் உயரே நின்று ஹெலி கொப்டர்கள் தாக்குதல் நடத்தியதால் இயக் கங்களின் தாக்குதல்களால் அவற்றுக்கு பாதிப்பிருக்கவில்லை.

விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருந்தால் தான் வான்மூலமான தாக்குதலை முறிய டிக்கலாம் என்று இந்தியாவிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் கேட்கப்பட்டது.

இந்தியா அவற்றை வழங்குவதற்கு தயக்கம் காட்டியது.

ஈழப்போராளி இயக்கங்களுக்கு கனரக ஆயுதங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் போன்றவற்றை வழங்கு வதற்கு இந்திய அரசு விரும்பவில்லை.

இந்தியா நினைத்திருந்தால் தம்மால் ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்ட ஐந்து பிர தான இயக்கங்களுக்கும் குறைந்த பட்சம் விமான எதிர்ப்பு ஆயுதமான 'சாம்-7'ஐ தலா ஒன்றுவீதம் வழங்கியிருக்கமுடியும்.

ஆனால், இறுதிவரை அதனை இந்தியா வழங்க முன்வரவில்லை.

ஈழப்போராளி இயக்கங்களின் ஆயுத பலம் ஒரு வரையறைக்குள் இருப்பதையே இந்திய அரசு விரும்பியிருந்தது என்று நினைக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்திய அரசிடம் ஐந்து இயக்கங் களும் ஆயுதப் பயிற்சி பெற்று திரும்பியதும் முதற்கட்டமாக குறிப்பிட்டளவு ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

பயிற்சி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே முதற்கட்டமாக வழங்கப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை யும் இருந்தன.

## தந்தையும்-கவர்னரும்



திராவிடர் கழகத் தலைவர் அமரர் தந்தை பெரியாரை இலங்கைத் தமிழர் தலைவர் தந்தை செல்வா சந்தித்த போது எடுக்கப்பட்ட புகைப் படம் சென்றவாரம் வெளி யாகி இருந்தது. **திராவிடர் கழகம்** என்பதற்கு பதிலாக திராவிட முன்னேற்றக் கழகம் என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டு விட்டது.

தமிழ் நாட்டின் அன்றைய ஆளுநரை தந்தை செல்வா சந்தித்த போது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இங்கு காணப்படுகிறது. இந்திய அனுதாபத்தை திரட்டுவதில் தந்தை செல்வா கூடிய கரிசனம் காட்டியிருந்தார்.

# 'சிங்களம் மட்டுமே' என்பதற்கு புதிய அர்த்தம் கொடுக்க முயற்சி!

## அலசுவது - இராஜதந்திரி

இலங்கையின் சிறந்த இராஜதந்திரிகளில் ஒருவரே நெவில் கனகரட்ண.

திரு.நெவில் கனகரட்ண தற்போது தென்மாகாணத்தின் ஆளுநராக இருக்கின்றார்.

'நேட்டோ', 'வார்ஸோ' என்று அன்றைய சோவியத் யூனியனும், மேற்கத்தேய நாடுகளும் ஆயுதப்போட்டி வல்லரசுக்கெடுபிடிகளுக்குள்ளாகியிருந்த காலப்பகுதியில் அமெரிக்காவுக்கும், பின்னர் சோவியத் யூனியனுக்குமான இலங்கையின் தூதுவராக இருந்தவரே திரு.நெவில் கனகரட்ண.

எனவே இருபெரும் வல்லரசுகளான அமெரிக்கா, அன்றைய சோவியத் யூனியன் ஆகியவற்றுக்கான தூதுவராக இருந்த ஒரே இலங்கையர் என்ற பெருமையையும் திரு.நெவில் கனகரட்ண கொண்டுள்ளார்.

திரு.கனகரட்ண சிறந்த பேச்சாளரும்கூட. இவர் கலந்து கொள்ளும் வைபவங்கள் என்றுமே களைகட்டியிருக்கும். எந்தவொரு விடயத்தையும், தனது இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறைகள் மூலம் அலசி ஆராய்ந்து பேசுபவராகவே திரு. கனகரட்ண விளங்குகின்றார்.

இருந்தபோதிலும் 'யானைக்கும் அடி சறுக்கும்' என்று கூறப்படுவதுண்டு.

கடந்த 30ந்திகதி கண்டி தலதாமாளிகைக்கு எதிராக அமைந்துள்ள குயின்ஸ் ஹோட்டலில் **(Queen's Hotel)** இலங்கையின் இனப்பிரச்னை குறித்த கருத்தரங்கொன்று இடம் பெறிருந்தது.

இக்கருத்தரங்கில் திரு. நெவில் கனகரட்ண விசேட பேச்சாளராகக் கலந்து கொண்டார்.

திரு.கனகரட்ண அவரது பேச்சில் இன்றைய பிரச்னைகள் பற்றி பலவற்றைக் குறிப்பிட்டிருந்தார். "யாழ்ப்பாண மக்கள் அனுபவித்துவரும் கஷ்டங்கள்பற்றி அனைத்து இலங்கை மக்களும் சிந்திக்க வேண்டும். அவர்களது இன்றைய நிலைக்கு நாம் அனைவருமே பொறுப்பாளிகள். அவர்கள் அனுபவித்து வரும் கஷ்ட, நஷ்டங்களுக்கு இலங்கையர்கள் அனைவருமே, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொறுப்பாளிகளாவர்" என்று திரு. கனகரட்ண கூறியிருந்தார். கூடவே இலங்கையின் இனப்பிரச்னைத் தீர்வுக்கு கடந்தகாலங்களில் உரிய தலைமைத்துவம் கிடைக்கவில்லை. சிறந்த



அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா

குறிப்பிட்டவையே அவரது கருத்துக் கண்ணோட்டத்தில் ஒரு சறுக்கலைக் கொண்டு வந்திருந்தது.

திரு. கனகரட்ணவின் கருத்துப்படி, ஜனாதிபதி சந்திரிக்காவின் தந்தையாரும், மறைந்த பிரதமருமான எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் 'சிங்களம் மட்டுமே' என்ற நிலைப்பாடு ஆங்கிலேயருக்கு எதிரானதேயன்றி, தமிழர்களுக்கோ அல்லது எந்தவொரு இலங்கைச் சிறுபான்மையினருக்கோ, எதிரானதல்ல என்பதாகவே இருக்கின்றது.

"அமரர் பண்டாரநாயக்கா சிறந்த கல்விமான்; நல்ல பேச்சாளர்; அவரிடம் இனவாதம் இருந்ததில்லை. சிங்களம் மட்டுமே என்பதை அவர் ஆங்கிலேயருக்கெதிராகவே பிரயோகித்தாரே தவிர தமிழருக்கெதிராக அல்ல" என்று திரு.கனகரட்ண கூறியிருந்தார்.

அமரர் பண்டாரநாயக்கா 'சிங்களம் மட்டுமே' என்று சூளுரைத்த காலப் பகுதியில் இலங்கையில் ஆங்கிலேயரது ஆட்சி முடிவுற்றிருந்தது என்பதனை இராஜதந்திரியான திரு. நெவில் கனகரட்ண நன்கறிந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

ஆங்கிலேயர்கள் 1815ம் ஆண்டுமுதல் 1948ம் ஆண்டுவரை ஒரு நூற்றாண்டையும் தாண்டி, 133 வருடங்கள் இலங்கையை ஆண்டிருந்தனர்.

இந்த 133 வருடகாலப் பகுதியில் எங்கும், எதிலும் ஆங்கிலமயமாகவே இருந்தது. கல்வி, நிர்வாகம், பொருளாதாரம், அரசியல் உட்பட அனைத்திலுமே ஆங்கில நடைமுறைகளே காணப்பட்டன.

பாடசாலைகள், மற்றும் கல்விக்கூடங்களில் கூட ஆங்கில

அந்தஸ்த்து- வாழ்க்கைத் தரம் என்பவற்றை உயர்த்தும் வகையிலும், தத்தமது இன, மத, தனித்துவங்களை குழிதோண்டிப் புதைத்து ஆங்கிலேயரது அடிவருடிகளானார்கள்.

இந்த அடிவருடித்தனத்திற்கு சிங்களவர்கள் மட்டுமல்ல, தமிழர்கள் கூட உட்பட்டிருந்தனர்.

டி.எஸ்.சேனநாயக்கா, எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜயவர்தனா, எஸ்.ஜே.வி. செல்வநாயகம் என்ற பெயர்களை எடுத்து நோக்குவோம்.

டொன் ஸ்டான்லி சேனநாயக்கா **(Don stanley Senanayake)** என்பதே டி.எஸ். சேனநாயக்கா என்ற பெயராகும். சொலமன் வெஸ்ட் றிஜ்வே டயஸ் ப்ண்டாரநாயக்கா **(Solomon West Ridgeway Dias Bandaranake)** என்பதே எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க என்ற பெயராகும்.

அண்மைக்காலங்களில் வேறு சில தென்னிலங்கை புத்திஜீவிகளும் கூறியிருந்தனர்.

ஆனால் ஆங்கிலேயரது ஆட்சி நிலவிய போது அமரர் பண்டாரநாயக்கா சிங்களம் மட்டுமே என்ற வாதத்தை முன்வைத்திருப்பாரேயானால் அவர் ஆங்கிலேயர்களால் கண்டிக்கப்பட்டிருப்பார். அல்லது வேறுவிதமாகத் தண்டிக்கப்பட்டிருந்திருப்பார்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வாயில் சுங்கானும், தலையில் தொப்பியும் காலில் தடித்த தோல் சப்பாத்தும், சட்டை, மேலங்கி, கழுத்துப்பட்டி என்று ஆங்கிலேய மயமாகவே பண்டாரநாயக்கா இருந்தார்.

இந்நிலையிலேயே, இந்திய சுதந்திரப் போராளிகள் எத்துணை உயர்ந்தவர்கள், எத்துணை உண்மையானவர்கள், எத்துணை தியாகிகள் என்பது புலனாகின்றது.

மகாத்மா காந்தி அடிகள் கூட லண்டனுக்கு ஒரு இந்திய விவசாயி போலவே- முழங்காலுக்கு மேலாக வேஷ்டியை மடித்துக் கட்டி, கதர் துண்டொன்றை மட்டுமே உடம்பில் போர்த்துச் சென்றிருந்தார்.

இறக்கும் வரை அவரது ஆடையும் அதுவாகவே இருந்தது.

எனவே அப்பளுக்கற்ற, உன்னதமான- அதேவேளை- உண்மையான இந்தியர்களது போராட்டமே பிரிட்டிஷாரிடமிருந்தும் அவர்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது.

இதனையடுத்து, இலங்கையைத் தமக்கொரு தலையிடியாகக் கொண்டிருக்க விரும்பாததாலேயே இலங்கைக்கும் பிரிட்டிஷார் சுதந்திரத்தை வழங்கினர்.

இந்நிலையில் அமரர் பண்டாரநாயக்கா ஆங்கிலேயருக்கு எதிராகவே 'சிங்களம் மட்டுமே' என்று குரல் கொடுத்தார் என்று கூறுவது இன்றைய சந்ததியினரான

## தன்னிகரற்ற சுதந்திரப் போராட்டம் மூலம் உயர்ந்துநிற்கும் இந்தியத் தலைவர்கள்!





சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் **(Samuvel James Veluppillai Selvanayagam)** என்பதே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் என்ற பெயராகும்.

இந்தியாவில் ஆங்கில சாம்ராஜ்யத்துக்கெதிரான போராட்டம் முதலில் இந்தியர்களது நடை, உடை பாவனையிலிருந்தே ஆரம்பமானது.

தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியதும் மாகாத்மா காந்தி சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தார். கற்றோர், கல்லாதவர்கள், செல்வந்தர்கள், வறியோர் என்று அனைத்து மட்டமக்களும் இந்தியாவில் காந்திக்குப் பின்னால் அணி திரண்டனர்.

ஜவஹர்லால் நேருவின் தந்தையாரான மோதிலால் நேரு ஒரு பெரும் செல்வந்தர். இவரது குடும்பத்தவரின் ஆடைகள் கூட சலவைக்காக பாரிஸ் நகரம் சென்று வருவதுண்டு. '

அப்படிப்பட்ட பெருங்குடிமக்கள் கூட ஆங்கிலேயரது பாணியிலான உடைகளை வீதியில் போட்டுக் கொளுத்தி எரித்தனர். தம்மை முழு அளவில் இந்தியர்களாகவே வெளிப்படுத்தினர்.

இந்தியாவில் இந்தியர்களே தமது கைகளால் நூல் நூற்று நெய்த கதர் ஆடைகளை அணிந்தனர்.

இத்தனைக்கும், மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோரும் இங்கிலாந்து சென்று உயர் கல்வி பயின்று பாரிஸ்டரானவர்கள்.

ஆங்கிலத்தில் அபரிமிதமான புலமை பெற்றவர்கள். இருந்தபோதிலும் சுதந்திரப் போராட்டம், ஆங்கிலேயருக்கெதிரான நடவடிக்கைகள் என்று வந்தபோது அவர்கள் தம்மை முதலில் உண்மையான போராளிகளாக மாற்றிக்கொண்டார்கள்.

இந்திய சுதந்திரப்போராட்டத்தை முன்னின்று வழிநடத்திய தலைவர்கள், அல்லது வேறு இந்தியர்கள் எவருமே அவர்களது இந்தியப் பெயர்களுக்கு முன்பாக எவ்விதத்திலும் எந்தவொரு ஆங்கிலச் சொல்லையோ, பெயரையோ சேர்த்திருக்கவில்லை.

உள்ளத்தாலும், நடைஉடை பாவனையாலும் அவர்கள் அனைவருமே முழு அளவில் இந்தியர்களாகவே இருந்தார்கள்.

இலங்கையருக்குக் 'காதிலை பூ வைப்பதாகவே' இருக்கின்றது.

இலங்கையில் ஆங்கிலேயராட்சி நிலவிய காலகட்டத்தில் தமது மத, கலாசார, பண்பாட்டம்சங்களை பெரிதும் அடகு வைத்து விடாதவர்களாக சேர். பொன் இராமநாதனும், அவரது குடும்பத்தவர்களும் வாழ்ந்தார்கள் என்று கூறினால் அது மிகையாகாது.

ஆங்கிலத்தைப் பயின்றனர். அதில் தேர்ச்சியும், நாவன்மையும், புலமையும்கூட அவர்கள் பெற்றனர். ஆனால் தமிழர்களாக- நல்ல இந்துக்களாக கோயில்களையும், பாடசாலைகளையும் தமிழர் பாரம்பரியங்களை பேணிக்காக்க அவர்கள் கட்டி எழுப்பினர்.

கூடவே அரசியலிலும் உயர்ந்தவர்களாக இலங்கை குடிமகன் என்ற ரீதியில் பிரிட்டிஷாருடன் நடந்து கொண்டனர்.

இலங்கையின் சுதந்திரத்துக்கு எந்தவொரு இலங்கையர்களும் செய்திராத அளவு பெரும்பங்களிப்பை சேர்.பொன் இராமநாதனும், அவரது உறவினர்களும் செய்துள்ளனர் என்பதை கற்றுணர்ந்த இலங்கையர்கள் நன்கறிவர்.

இந்நிலையில், பண்டாவின் 'சிங்களம் மட்டுமே' என்ற கோஷம் அவர்வாழ- அவரது இனவாத அரசியல்வாழ- அந்த இனவாதத்தைக் கொண்ட பேரினவாத சந்ததி வாழையடி வாழையாக வாழ கூறப்பட்டதே தவிர, எவ்வகையிலும் ஆங்கிலேயருக்கு எதிராக எழுப்பப் படவில்லை. அத்துடன் ஆங்கிலேயர் இருந்த காலப்பகுதியிலும் போடப்படவில்லை.

எனவே பெருமதிப்புக்குரிய ஆளுநர் நெவில் கனகரட்ண, இன்றைய சந்ததியின் 'சிங்களம் மட்டுமே' என்ற கோஷம் குறித்து தப்பான விளக்கத்தை- அதுவும் துவேஷமான அர்த்தத்தைக் கொள்ளக் கூடாது என்ற ரீதியில் ஆங்கிலேயருக்கு எதிராகவே அக்கோஷம் போடப்பட்டது என்று கூறியிருக்கலாம்.

ஆனால் உண்மை அதுவல்ல.

'சிங்களம் மட்டுமே' என்ற கோஷம் ஆலகால விஷம் போன்றது; சுதந்திர இலங்கையில் பரவிப் பீடித்துள்ளது என்பது மட்டுமே உண்மை.

இந்த விஷமே காலத்துக்குக் காலம் அரசியலில் விஷமிகளை உருவாக்கி, விஷமங்களுக்கும் வழியமைத்துவருகின்றது.

எனவே பழைய கதைகள், காரணங்களில் இருந்தும் விடுபட்டு தமிழர்களையும் இந்த நாட்டின் உன்னத பிரஜைகளாக- அவர்களுக்கேயுரிய தனித்துவங்களுக்கு மதிப்பளித்து, சுயநிர்ணய உரிமையுடன் அவர்களையும் வாழச் செய்வதன் மூலமே இலங்கையில் ஒரு நிரந்தர அமைதியை எதிர்பார்க்க முடியும்.

## பெயர்களையும், நடைஉடை பாவனைகளையும் மாற்றியமைத்த இலங்கை அரசியலாளர்கள்

தலைமைத்துவம் கிடைக்காததாலேயே இலங்கை இனப்பிரச்னை இன்றுவரை சிக்கலடைந்ததாக இருக்கின்றது, என்று திரு.நெவில் கனகரட்ண கூறியிருந்தார்.

திரு.கனகரட்ண கூறிய மேற்படி கருத்துக்களில் மிகுந்த அர்த்தம் இருக்கவே செய்தது.

திரு.கனகரட்ண ஓர் அரசியல் வாதியல்ல அத்துடன் எந்தவொரு அரசியல் கட்சி சார்பானவருமல்ல.

இராஜதந்திர சேவையில் அவர் வெளிப்படுத்திய திறமை அவரை ஓர் உயர்ந்த இராஜதந்திரியாக்கி விட்டிருந்தது. கூடவே அவர் மீதான அரசியலாளர்களின் நன்மதிப்பு அவரை தென்மாகாணத்தின் ஆளுநராக்கிவிட்டுள்ளது.

இனப்பிரச்னையின் யதார்த்தத்தை உணர்ந்தவராக திரு. நெவில் கனகரட்ண அரியபல கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இருந்தபோதிலும் 'சிங்களம் மட்டுமே' என்ற விடயத்தில் அவர்





மயமாகவே இருந்தது. மாணவர் எவராவது தமிழிலோ அல்லது சிங்களத்திலோ ஒரு வார்த்தை கூட பேசினால் அபராதமாகப் பணம் செலுத்தவேண்டும். அல்லது வகுப்பறைக்கு வெளியே வெய்யிலில் நிற்கவேண்டும்.

மிகவும் கடுமையான மொழியிலேயே ஆங்கிலத்தை அன்று வெள்ளையர்கள் திணித்திருந்தனர்.

அப்போதெல்லாம் இலங்கையின் முன்னணிக் குடிமக்கள் என்றிருந்தவர்களெல்லோரும் தமது சமூக

ஜூனியஸ் றிச்சாட் ஜயவர்தன **(Junius Richard Jayawardena)** என்பதே ஜே.ஆர்.ஜயவர்தன என்ற பெயராகும்.

எனவே இந்த ஆங்கிலக் கலப்புள்ள பெயர்கள் அனைத்துமே 'அடிவருடித்தனத்'தில் இலங்கையர்கள் கொண்டிருந்த ஒற்றுமையையே புலப்படுத்துகின்றது.

ஆங்கிலேயருக்கும், ஆங்கிலமொழிக்கும் எதிராகவே அமரர் பண்டாரநாயக்கா சிங்களம் மட்டுமே என்ற வாதத்தைக் கொண்டு வந்தார் என்று நெவில் கனகரட்ண மட்டுமல்ல,

காா்லோஸின் அணைப்பில் மகத லோனா. வெயின்றிச் முதலில் அதிா்ந்து போனான். உடனே திரும்பிச் சென்று விடலாமா என்று அறைக்கதவருகே நின்று யோசித்தான்.

மகதலோனா காா்லோஸின் மாா்பில் சாய்ந்தபடி முணுமுணுத்தாள். அவள் தோளுக்கு மேலாக காா்லோஸின் விழிகள் அறைவாசல் கதவுக்கு சென்றபோது, அங்கு வெயின்றிச் நிற்பதைக் கண்டான். கதவை மூட மறந்ததற்காக காா்லோஸ் கவலைப்பட்டான்.

காா்லோஸ் தன்னைக் கவனித்து விட்டதை வெயின்றிச் கண்டாலும், காணாததுபோல சட்டென்று திரும்பிச் சென்று விட்டான்.

காா்லோஸின் 'மூட்' குழம்பிவிட்டது. மகதலோனாவை தனது அணைப்பில் இருந்து விடுவித்தான். அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மேல் சட்டைப் பொத்தான்களைப் போட்டுக்கொண்டாள்.

மகதலோனா சென்று நீண்டநேரம் கழித்துத்தான் வெயின்றிச் அறைக்கு வந்தான்.

அவனிடம் எந்த மாற்றமும் இல்லாதது

**யூகோஸ்லாவிய அதிபா் டிட்டோவின் விருப்பப்படி,பாரிஸில் இருந்த எழுத்தாளா் புருணோ பூசிக் என்பவரை கொலை செய்தான் காா்லோஸ்.**

**பரிசாகக் கிடைக்கிறது கட்டுக் கட்டாகப் பணம். ஜொ்மன் நாட்டுக்குச் செல்கிறான் காா்லோஸ். அங்கு காா்லோஸின் மொழிபெயா்ப்பாளராக இருப்பவன் வெயின்றிச். வெயின்றிச்சின் காதலி மகதலோனா. அழகான மகதலோனாவை காா்லோஸ் கவா்கிறான்.**

**இனி**



காா்லோஸ்

# நான்தான் காா்லோஸ்

காா்லோஸுக்கு வியப்பாயிருந்தது.

இருவருமே வழக்கம்போல நடந்து கொண்டனா். கயூா்லோஸுக்கு மனதின் ஓரத்தில் சிறு சந்தேகம். 'வெயின்றிச் ஏதாவது நோக்கத்துடன் நடிக்கிறானா?' என்று சந்தேகப்பட்டான்.

படிப்படியாக அந்த சந்தேகம் விலகியது. மகதலோனா காா்லோஸுடன் பழகுவதை 'வெயின்றிச் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை என்று தெரிந்தது.



↑மகதலோனா—காா்லோஸ் மூலம் பெற்ற குழந்தையுடன்

ஈரானிடம் வாங்கிய பணத்துக்கு கணக்குச் சரி என்று காா்லோஸ் தனக்குத் தானே சமாதானம் சொல்லிக்கொள்ளவும் அச் சம்பவம் உதவியது.

ஈரானுக்கு காா்லோஸ் உதவிய செய்தி ஈராக் அதிபா் சதாம் ஹுசைனுக்கு எட்டியது.

"ஈரானிய எண்ணெய் வள அமைச்சரை தீா்த்துக்கட்ட திட்டமிட்டவன் காா்லோஸ். இப்போது ஈரானுக்கு நண்பனாகிவிட்டான்" என்று பகிரங்கமாகவே குற்றம் சாட்டினாா்.

ஈரானிய எண்ணெய் வள அமைச்சரை தீா்த்துக்கட்ட திட்டம் தீட்டியதே சதாம் ஹுசைன் தான். ஒபேக் நாடுகளது அமைச்சா்களை பணயம் பிடிக்குமாறு தன்னை அனுப்பியவரே சதாம் ஹுசைன்தான் என்று காா்லோஸ் சொல்லியிருக்கலாம். ஏனோ அவன் அப்படிச் செய்யவில்லை.

எனினும், சதாம் ஹுசைனுக்கும், காா்லோஸுக்கும் இடையில் இருந்த உறவு அத்தோடு முறிந்துபோனது.

ஈராக் நாட்டின் பரமவிரோதியான சிரியாவில் இருந்து காா்லோஸுக்கு அழைப்பு வந்தது.

சிரியாவில் உள்நாட்டு யுத்தம் வெடிக்கும் அபாயம் இருந்தது.

முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம்தான் சிரிய நாட்டு அதிபா் ஹாஃபிஸ் அல்-அஸாதினுக்கு எதிராக கிளா்ச்சியில் ஈடுபட்டிருந்தது.

அந்த இயகத்தின் தலைவா் பெயா்; இஸாம் அல்-அத்தாா்.

சிரியாவின் மூலை முடுக்கெல்லாம் அலசித்தேடியும் இஸாம் அல்-அத்தாரை பிடிக்க முடியவில்லை.

வேறொரு நாட்டில் இருந்து செயற்படுகிறாா் என்று தகவல் கிடைத்தது.

எந்தநாட்டில் இருக்கிறாா் என்று கண்டுபிடித்து தீா்த்துக்கட்டத்தான் காா்லோஸ் உதவி தேவைப்பட்டது.

சிரிய அதிபா் நேரடியாக காா்லோஸை சந்தித்து, தன் இல்லத்தில்வைத்து பேசினாா். பேச்சுமுடிந்து, காா்லோஸ் புறப்படும்போது, அவன் கையில் கணிசமான அமெரிக்க டொலா்கள் தரப்பட்டன.

காா்லோஸுக்கு விடைகொடுக்கும்போது சிரியா அதிபா் சொன்னாா்;

"காா்லோ்ஸ் எப்படியாவது சிரியாவைக் காப்பாற்று!"

மேற்கு ஜொ்மனியில் அச்சன் என்ற இடத்தில் இஸாம் அல்-அத்தாா் தலைமறைவாக தங்கியிருப்பதாக அறிந்துகொண்டான் காா்லோஸ்

ஹங்கேரிய நாட்டு கடவுச்சீட்டு மூலமாக மேற்கு ஜொ்மனுக்குள் நுழைந்தான். வெயின்றிச் மூலமாக கைத்துப்பாக்கி ஒன்று பெற்றுக் கொண்டான்.

காா்லோஸும், வெயின்றிச்சும் ஒருவார காலமாக இஸாம் அல்-அத்தாா் தங்கிருந்த வீட்டை நோட்டமிட்டனா்.

இறுதியில் நாள் குறிக்கப்பட்டது. வாடகைக் காா் ஒன்றில் இருவரும் சென்றனா். வெயின்றிச்சை காரில் இருக்கச் சொல்லிவிட்டு காா்லோஸ் மட்டும் இறங்கிச் சென்றான்.

கதவைத் தட்டினான். திறந்தவள் அத்தாரின் மனைவி.

கைத்துப்பாக்கியை இடுப்பிலிருந்து உருவி, அவளின் நெற்றியில் அழுத்திக்கொண்டு,

"எங்கே இஸாம் அல்-அத்தாா்? சொல்லிவிடு. உன்னை விட்டுவிடுகிறேன்" என்றான். அவள்தான் மனைவி என்று காா்லோஸுக்கு தெரியாது.

தனது கணவனைத்தான் சுட வந்திருக்கிறான் என்று தெரிந்ததும், அவள் உரத்துக் கத்தினாள்;

"அத்தாா் ஓடிவிடுங்கள். உங்களைச் சுட.. சு.. சுட வந்திருக்..." அவள் கத்திமுடிக்க முன்னா் காா்லோஸ் சுட்டான்.

டுமில்! குண்டு அவள் முகத்தில் பாய்ந்தது. காா்லோஸ் திரும்பி ஓடினான். காாில் ஏறிப் பறந்துவிட்டான்.

ஈரான் நாட்டிலிருந்து காா்லோஸுக்கு அழைப்பு வந்தது. தகவல் அனுப்பியவா் ஈரானிய புரட்சிகர நீதிமன்ற நீதியரசா் அயத்தோலா சாதேக் காலி.

ஈரானிய தலைநகரில் நீதியரசரைச் சந்தித்தான் காா்லோஸ்.

"உன்னால் நமக்கு ஒரு நல்ல காரியம் ஆக வேண்டியிருக்கிறது!"

"ஆகும்! காரியம் என்ன சொல்லுங்கள்!"

"நாட்டைவிட்டு தப்பியோடிய மன்னா் ஷா எங்கிருந்தாலும் சாகவேண்டும்."

"ஷாவின் பின்னால் இருப்பது கழுகு."

"தெரியும், அந்தக் கழுகுதான் ஷாவை காப்பாற்றிவருகிறது என்பதும் தெரியும்."

கழுகுதான் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயின் சின்னம். அமெரிக்காவின் தேசியப் பறவையும் அதுதான். சி.ஐ.ஏ. பாதுகாப்பில்தான் ஷா மறைந்திருந்தாா்.

"பாா்க்கலாம், முயற்சி செய்து பாா்க்கலாம்." என்றான் காா்லோஸ். முதற்கட்டமாக ஒரு தொகைப் பணம் கைமாறியது.

ஷாவை தேடும் முயற்சியில் காா்லோஸ் ஈடுபட்டான். அந்த முயற்சியில் கடைசிவரை



↑வெயின்றிச்—காா்லோசின் மொழிபெயா்ப்பாளா்

அவனால் வெற்றி பெறமுடியவில்லை.

ஷாவை தேடுவதில் காா்லோஸ் முழுக்கவனம் செலுத்த முடியாதளவுக்கு வேறு பல சம்பவங்கள் குறுக்கிட்டன.

1979 இல் ஈரான் தலை நகரான தெஹறானில், அமெரிக்க தூதரகத்தில் புகுந்தனா் ஈரானிய மாணவா்கள்.

அமெரிக்க தூதரகத்தில் பணிபுரிந்த அமெரிக்கா்களை பணயக் கைதிகளாகப் பிடித்தனா். நீண்டகாலமாக நடந்தது பணய நாடகம்.

பணய நடவடிக்கைக்கு மாணவா்களை பயிற்சி கொடுத்து அனுப்பினான் காா்லோஸ்.

## உலகைக் கலக்கிய மனித வெடிகுண்டு 6

அன்றிரவே ஜொ்மனைவிட்டு காா்லோஸும் வெயின்றிச்சும் வெளியேறிவிட்டனா்.

இஸாம் அல்-அத்தாரை காா்லோஸ் தப்பவிட்டுவிட்டானே என்று சிரியா அதிபா் கோபப்பட்டாலும் அதனை நேரடியாகக் கூறவில்லை.

அவருக்கு காா்லோஸ் மூலம் மேலும் ஒரு காரியம் ஆகவேண்டியிருந்தது.

லெபனானின் பிரதான வீதியில் அந்தக் காா் மிதமான வேகத்தில் சென்று கொண்டிருந்தது.

காரைச் செலுத்திக் கொண்டிருந்தவன் நாகி அபூபக்கா் அஹமட். அவனுக்கு அருகில் இருந்தவள் கிட்டத்தட்ட சொா்க்கம். அத்தனை அழகாக இருந்தாள். அதனால் அஹமட் ஒரு கையால் காரை செலுத்தியபடியே, மறுகையை அருகே செலுத்திக்கொண்டிருந்தான்.

அவனது கையை தடுத்து, "விபத்து நேரப்போகிறது. ரூமுக்கு போய் ஆராயலாமே!" என்றாள் குறும்பாக, லிப்ரிஸ்க் உதடுகளால் அவள்.

லெபனானில் உள்ள ஃபிரான்ஸ் தூதரகத்தில் வேலை செய்கிறாள். ஃபிரான்சுக்காரி. வாயில் புகுமுடியாத பெயா். பெயரா முக்கியம்.

ரூமில் அவளை அஹமட் தன்னோடு அணைத்துக்கொண்டான். அவளின் பின் கழுத்தில் இருந்து கையால் வருட ஆரம்பித்து இடுப்புக்கு கீழேயும் சென்றான். ரீப்போவில் ஆப்பிள்களும், அதனை வெட்டக் கத்தியும் இருந்தது. காா்லோஸ் அந்தக் கத்தியை எடுத்தான். அவள் அதனைக் கவனிக்கவில்லை. கண்களை மூடிக்கொண்டு அஹமட்டின் முத்தத்தை அனுபவித்துக்கொண்டிருந்தாள். கத்தியை எடுத்து அஹமட் அவளது பின் கழுத்துப் பக்கமாக கொண்டு சென்றான். லாவகமாக அந்தக் கத்தியை உபயோகித்து மேலிருந்து கீழ் நோக்கி அவள் சட்டையின் முதுகுப்பக்கமாக நோ் கோடாக வெட்டினான்.


அப்போதுதான் அவள் தன் இதழ்களை விடுவித்துக்கொண்டு, "என்ன செய்கிறாய் நீ?" என்று, கழுத்தை திருப்பிப்பாா்த்து, அவன் செய்த காரியம் புரிந்து "யூ ராஸ்கல்" என்றபோது, அஹமட் சிரித்து,

"ஆப்பிளின் தோலை கத்தியால் சீவி விட்டேன்!" என்றான். அவள் இப்போது சிணுங்கினாள். தோலை முழுதாக அகற்றினான். ஆப்பிள் உண்ணப்பட இப்போது தயாரானது.

அவள் நெருக்கம் அஹமட்டுக்கு பலவழிகளில் பயன்பட்டது. பயன்படுத்தினான். அவளோடு ஃபிரான்ஸ் தூதரகத்துக்கு சென்று வந்தான்.

"அஹமட், உன்னைப் பற்றி நமது தூதாிடம் சொல்லியிருக்கிறேன். அவருக்கு என்மீது மரியாதை இருக்கிறது. அதனால் உன்னை தன்னிடம் அழைத்துவரச் சொன்னாா்.

தருவது ரசிகன்




அஹமட் என்ற பெயரில் பயன்படுத்தப்பட்ட கடவுச்சீட்டு↑

நம்மால் தேடப்படும் காா்லோஸ் தொடா்பாக தூதரோடு பேச வேண்டும் என்றாயே! வந்து பேசு. எப்போது போகலாம் சொல்லு!"

அஹமட் எதிா்பாா்த்த நாள் அதுதான். சென்றான். சந்தித்தான். சம்பிரதாய புன்னகைகள், பேச்சுக்கள் முடிந்ததும் தூதா் கேட்டாா், "காா்லோஸ் பற்றிய தகவல்கள் தெரியும் என்றீா்களாமே! ஃபிரான்ஸ் நாட்டுக்கு மிகத் தேவையான தகவல்கள். நீங்கள் சொல்வது உபயோகமானால் நாங்கள் உங்களை கௌரவிப்போம்."

அஹமட் திரும்பி தன் அருகில் இருந்தவளைப் பாா்த்தான். "தயவு செய்து சற்று நேரம்வெளியே இருக்க முடியுமா?" அவள் புன்னகையோடு எழுந்து வெளியே போனாள். தூதா் அவசரப்பட்டாா்.

"இப்போது சொல்லுங்கள்.." என்றாா். அஹமட் சிரித்தான். "சொல்லுங்கள் என்பது கொல்லுங்கள் என்பது போல கேட்கிறது" என்றான். அதனை ஜோக்காக எடுத்து தூதா் பதிலுக்கு சிரிக்க,

"என் பெயா் அஹமட் என்றா நினைக்கிறீா்கள்."

"ஏன் உங்களுக்கே சந்தேகமா?" இப்போது தூதா் தனது ஜோக்குக்காக சிரிக்க நினைத்தவா் அந்த நினைப்பை கைவிட்டாா்.

காரணம், அஹமட் கையில் முளைத்திருந்த பிஸ்டல். தூதா் பயத்தில் உறைந்துபோன நொடியில், அஹமட் சிரித்தான்.

"நான்தான் காா்லோஸ்! காா்லோஸ் நான்தான்! இங்கே ஏன் வந்தேன்? என்று யோசிப்பீா்கள். சிரியா அதிபருக்கு நீங்கள் உயிரோடு இருப்பது பிடிக்கவில்லை! சுடச் சொன்னாா். இதோ சுட்டுவிட்டேன்."

டுமில்! டுமில்!

சுட்டான். சைலன்ஸா் பொருத்திய பிஸ்டல் சத்தமின்றி காரியத்தை முடித்தது.

(தொடா்ந்து வரும்.)

அரசியல் விமா்சகா். நாவல் எழுத்தாளா். நகைச்சுவை வெடிகளை வீசும் எழுத்தாளா். பத்திரிகை ஆசிரியா் என்று



# "என்னைச் சுற்றி எப்போதும் பெண்கள்"

## பிரபல எழுத்தாளா் மனம்திறந்த பேச்சு

பல அவதாரங்களை எடுத்துள்ளவா் குஷ்வந்த் சிங். இந்தியாவில் இன்றுள்ள எழுத்தாளா்களின் நம்பா் வன் அவா்தான். ஆகக் கூடிய வருமானமுள்ள எழுத்தாளரும் அவா்தான்.

குஷ்வந்த்சிங் பற்றி பல்வேறு கிசுகிசுக்கள் இருக்கின்றன. குஷ்வந்த்சிங் தன்னைப்பற்றி ஒளிவு மறைவில்லாமல் பேசக்கூடியவா். சமீபத்தில் ஒரு பேட்டியில் அவா் சொல்லியுள்ள விஷயங்கள் இவை.

"தினசரி காலையில் நாலரை மணிக்கெல்லாம் எழுந்துவிடும் பழக்கம் எனக்குண்டு. உடனே வேலையைக் கவனிக்கத் தொடங்கிவிடுவேன். என்னைப் பற்றி தெரிந்து வைத்துள்ள பெண்களிடம் கேட்டுப் பாருங்கள். எந்தப் பெண்ணாக இருந்தாலும் அவா்களைச் சந்திக்கும்போது அரைமணி நேரத்திற்கு மேல் நான் ஒதுக்குவதில்லை.

என்னைச் சுற்றி எப்போதுமே அழகான பெண்கள் இருப்பதுபோல என் வாழ்க்கை அமைந்துவிட்டது. இருந்தாலும் என்னைப் பற்றிச் சொல்லும் குற்றச்சாட்டுக்களில் பல ஆதாரமற்றவை.

நான் வெறும் அழகை மட்டுமே நேசிப்பவன் அல்ல. அழகான ஒவ்வொரு பெண்ணும் மற்றவா்களைக் கவர வேண்டும் என்று நினைப்பவன் நான். இதில் என்ன தவறு. இது அவா்களுடைய தன்னம்பிக்கையை வளா்க்கிறது.

செக்ஸைப்பற்றி நான் அதிகமாகவே மற்றவா்களுக்காக எழுதி இருக்கிறேன். இருந்தாலும் எல்லாமே அதுதான் என்று நான் நினைப்பதில்லை.

வகுப்புவாதத்தை எதிா்த்து பல ஆண்டுகளாகவே நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். சீக்கிய தீவிரவாதத் தலைவரான பிந்தரன்வாலே ஒரு கொலை வெறி பிடித்த பைத்தியக்காரன். என்று ஒரு முறை எழுதிவிட்டேன். அப்போது ஆரம்பித்த பயமுறுத்தலால், என்னையும், என் குடும்பத்தாரையும் பாதுகாக்க 24 மணிநேர பாதுகாப்பு கொடுக்க வேண்டியதாகிவிட்டது.

ஒரு காலத்தில் இந்தியாவிலேயே அதிக சம்பளம் வாங்கிய பத்திரிகை ஆசிரியா் நான்தான். இன்று இந்தியாவிலேயே அதிகம் சம்பளம் வாங்கும் எழுத்தாளா் நான்தான்.

மரணத்தைப் பற்றிய பயம் எனக்கில்லை. ஆனால் உடல் நலமின்றி மருத்துவ மனையில் படுத்திருக்கும் போதுதான் வலியைப் பற்றி பயப்படுகிறேன்.

என்னைத் தேடிவரும் தீவிரவாதிகளுக்கு ஒரு வேண்டுகோள்.

என்னுடைய நேரம் நெருங்கிவிட்டது. அதற்குள் நான்கு மொழிகளில் நான் எழுதி வரும் காதல் கவிதைகளின் தொகுப்பை முடித்துவிட விரும்புகிறேன்.

அதன்பிறகே, நான் சந்தோசமான மனிதனாக சாகவிரும்புகிறேன்." என்றாா் குறும்புச்சிங்கமான குஷ்வந்த்சிங்.

குஷ்வந்த்சிங்கின் எழுத்துக்கு பிரபல இந்தி நடிகைகள் பலா் பரம ரசிகைகள். அவா்களில் ஒருவா் சோனாலி பந்ரே.

சமீபத்தில் குஷ்வந்த்சிங்கை சந்தித்து அவரை கட்டியணைத்தபடி புகைப் படத்திற்கு போஸ் கொடுத்தாா் சோனாலி.

# கிரேக்க பிரதமரின் சோகம்



உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தீவான கிரேக்க நாட்டின் பிரதமா் பாப்பான் ரீயூ. அவருக்கு வயது 76.

துணையொன்று தேவைப்பட்டது. அதனால் 76 வயது பிரதமா் சமீபத்தில் திருமணம் செய்து கொண்டாா். உலகப் புகழ்பெற்ற மொடல் அழகி டிமிட்ரா என்னும் பெண்தான் பிரதமரின் மனைவி.

கிரேக்க பத்திரிகைகளுக்கு தங்கள் பிரதமா்மீது என்ன கோபமோ தெரியவில்லை. மொடல் அழகியின் முன்னாள் புகைப் படங்களை வெளியிட்டுவிட்டன. அனைத்துமே அசல் நிா்வாணப்படங்கள்.

பாவம், வயதான பிரதமா் ஆட்டம் கண்டுவிட்டாா். அழகி மட்டும் அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறாா்.

# காத்திருக்கும் சோதனை

## பாவம் ரேவதி

கழுத்துக்குமேலே தலை இருப்பவா்கள் எல்லாம் தலைவராக முடியாது என்று அடிமைப் பெண்ணில் ஒரு வசனம் வரும். அதைப் பேசியவா் ஜெயலலிதா என்று ஞாபகம்.

அடிமைப்பெண்ணில் நடித்த எம்.ஜி.ஆா். தமிழக முதல்வரானாா். ஜெயலலிதாவும் தமிழக முதல்வராகிவிட்டாா்.

எம்.ஜி.ஆா். வழியில் சென்று மக்கள் தலைவராக பல நடிகா்கள் முயன்றாா்கள்.

சிவாஜி. எஸ்.எஸ்.ராஜேந்திரன், பாக்யராஜ், ராமராஜன், டி.ராஜேந்தா், எஸ்.வி.சேகா் என்று அந்தப் பட்டியல் நீண்டது. நடிகைகளில் எம்.ஜி.ஆரின் மனைவி என்ற ரீதியில் ஜானகி தற்காலிக முதலமைச்சராக கொஞ்சக்காலம் நீடித்தாா். தமிழ் நாட்டின் முதல் பெண் முதல்வா் என்ற பெருமை அவருக்குத்தான். அடுத்து வந்த தோ்தலில் படுதோல்வி கண்டாா். வெண்ணிற ஆடை நிா்மலாவும் மண் கவ்வினாா். வைஜெயந்திமாலா காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு எம்.பி.யானாா். எனினும் அவா் தலைவியாக முடியவில்லை. தமிழக மக்களிடம் அவருக்கென்று தனியான செல்வாக்கு கிடையாது.

எம்.ஜி.ஆருக்கும், ஜெயலலிதாவுக்கும் செல்வாக்கு இருப்பதைப் பாா்த்துவிட்டு, நடிகா்கள், நடிகைகள் என்றால் தமிழக வாக்காளா்கள் கண்ணை மூடிக் கொண்டு வாக்குப் போடுவாா்கள் என்று நினைப்பது மாபெரும் அறிவீனம்.

தற்போது ரஜினிக்கு செல்வாக்கு இருக்கிறது. அதனைப் பாா்த்துவிட்டு சரத்குமாா் அரசியல் பேசினாா். அது எடுபடவில்லை.

இதையெல்லாம் பாா்த்தும்கூட புத்தி வராமல் எதிா்வரும் தோ்தலில் போட்டியிட முன்வந்துள்ளாா் ஒரு நடிகை.

அவா்தான் ரேவதி.



அரசியலில் ஈடுபடுவாா் என்று யாருமே அவரைப்பற்றி நினைத்தும் பாா்த்ததில்லை.

நல்ல நடிகை. எந்தப் பாத்திரமானாலும் நடிக்கக்கூடிய நடிப்பாற்றல் உள்ளவா். இன்றுள்ள நடிகைகளில் விரல் விட்டு எண்ணத்தக்க மிகச் சில திறமையான நடிகைகளில் ஒருவா். அதெல்லாம் உண்மைதான்.

ஆனால், தோ்தல் என்று இறங்கினால் ரேவதிக்கு கட்டுக்காசு கிடைப்பதும் கஷ்டம்தான்.

தமிழ்நாட்டில் உள்ள தென்சென்னை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் நடிகை ரேவதி கட்டுக்காசை மீளப்பெற போராடும் வேட்பாளா்களில் ஒருவராக மாறப்போகிறாா்.

'தனக்கிடா உத்தியோகம் தன் பிடரிக்குச் சேதம்' என்பது தோ்தல் முடிவுகள் வெளியாகும்போது ரேவதிக்கு தெரியவரும்.

அதேபோல கிரிக்கெட் வீரா் மனோஜ் பிரபாகரும் டில்லியில் தோ்தலில் குதித்திருக்கிறாா். ரன்களை குவிப்பதை விட வாக்குகளை சேகரிப்பது கஷ்டமானது என்பதை அவரும் உணரப்போகிறாா்.


தனது தலையில் தானே மண் அள்ளிப்போடும் வேலையை மனோஜ் பிரபாகா் ஏன் செய்கிறாா்? ஆசை யாரை விட்டது?!



## அழகான ஆபத்து

அழகில் ஆபத்தும் உண்டு. அதற்காக அழகாக இருக்கும் நீங்கள் யாவரும் கோபிக்கவேண்டாம். படத்தில் அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருப்பவை புஷ்டியான வாழைப்பழங்கள் போல அழகாக தெரிகிறதல்லவா. அத்தனையும் ஆபத்தான ஷெல்கள். விழுந்து வெடித்தால் அந்த வட்டாரமே காலி. ஷெல் தாக்குதல்கள் பற்றி வடக்கு-கிழக்கில் உள்ள மக்களுக்கு போதுமானளவு அனுபவம் இருக்கிறது. படத்தில் உள்ளவை ரசிய தயாரிப்புக்கள். அங்கு நடைபெறும் யுத்தங்களில் பாவிக்கப்படுபவை. ஷெல்களை பயன்படுத்த முன் பரிசோதிக்கும்போது எடுக்கப்பட்ட படம் இது. பரிசோதிப்பது நிச்சயம் வெடிக்கும் என்பதை உறுதிப்படுத்த! அடுத்தவரை அழிப்பதில் எத்தனை கவனம் பாருங்கள்!

## வானம் பக்கத்தில்



உலகம் வேகமாக மாறிவருகிறது. தினம் ஒரு வளர்ச்சி. வானுயர்ந்த கட்டிடங்கள். கம்பியூட்டர் தொழில் நுட்பங்கள் என்று அசுர வளர்ச்சி. நாம் மட்டும் மனித உயிர்களோடும், கட்டிடங்களோடும் குண்டுபோட்டு விளையாடிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்காக வெட்கப்படவும் மாட்டோம். சரி, நமது சோகக் கதை எதற்கு.

படத்தில் இருக்கும் இரட்டைக் கட்டிடம் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் இருக்கிறது. 'பெட்ரோனஸ் டுவின் டவர்' என்பது இதன் பெயர். 88 அடுக்குகளைக் கொண்ட இந்த கட்டிடத்தின் உயரம் 450 மீட்டர். இதுதான் உலகின் மிக உயர்ந்த கட்டிடம். இரட்டைக் குழந்தைகள்போல இந்த இரட்டைக் கட்டிடங்கள் எத்தனை அழகாக இருக்கின்றன பார்த்தீர்களா. இதுவும் மனிதனின் உற்பத்திதான். அழகான சிந்தைனயும், தொழீல்நுட்பமும் கலந்ததால் உருவான படைப்பு.

## இடம் பெயர்ந்த கட்டிடம்

### அமெரிக்காவில் சாதனை

அமெரிக்க டெக்ஸாஸ் மாநிலத்தில் சான் அன்ரானியோ நகரில் 1906ம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 'ஃபெயார்மொன்ற் ஹோட்டல்'- 3 மாடிகளைக் கொண்ட பழைய பாணிக்கட்டடம். பல அடுக்கு புதிய மோஸ்தர் கட்டிடங்கள் வேகமாக உருவாகி வரும் நவீன யுகத்தில் இத்தகைய பழைய பாணிக் கட்டடம் ஒன்றினை வைத்திருப்பது அந்நகரவாசிகள் பலருக்குப் பிடிக்கவில்லை. இடித்துவிட நினைத்தார்கள். ஆனால் பழமை முழுவதையும் சிதைத்துவிடப் பிரியமில்லாத சிலர் எப்படியாவது இக்கட்டிடத்தைப் பாதுகாக்கக் கங்கணங்கட்டினர்.

அடி அத்திவாரத்தோடு பெயர்த்து கட்டிடத்துக்கு எதுவித சேதமுமில்லாமல் அப்புறப்படுத்தி, அரை மைல் தூரத்துக்கப்பாலுள்ள வேறோரிடத்தில் அப்படியே கொண்டுபோய் வைத்துவிட்டனர்.

இக்கட்டிடத்தின் மொத்த எடை 1451 தொன் .இதற்காகத் தயாரிக்கப்பட்ட 36 டொலிகளில் இக்கட்டிடத்தை ஏற்றினர். பிரத்தியேகமான பல சக்கரங்கள் கொண்ட இந்த டொலிகளில் ½ மைல் தூரத்தை இக்கட்டடம் கடந்து செல்ல 6 நாட்கள் பிடித்தது. இது பவனி சென்ற வீதியிலுள்ள மின்சார-தொலை பேசிக்கம்பங்கள், வேறுபல அடையாளக் கம்பங்கள் போன்றவை அகற்றப்பட்டன. இடையில் குறுக்கிட்ட ஒரு பாலத்துக்கும் இச்சுமையைத்தாங்குவதற்கேற்ற உறுதி கொடுக்கப்பட்டது.

கட்டிடத்தை தூக்கி டொலிகளில் வைப்பதற்கு முன்னதாக கட்டிடத்தின் உள்-வெளிபகுதிகளில் இரும்புச்சட்டங்களால் முண்டு கொடுக்கப்பட்டது. ஒரே நேரத்தில் அத்திவாரத்தின் 34 இடங்களிலிருந்து "ஹைட்றோலிக் ஜாக்ஸ்" கருவிகள் மூலம் 2.6 மீட்டர் உயரம் வரை மேலே உயர்த்தப்பட்டது.

இந்தப் பணி 1985 மார்ச் 30 முதல் ஏப்ரல் 4ம் திகதிவரை நடைபெற்றது. இதற்கான செலவு 650,000 டொலர், இது ஒரு உலக சாதனை.

அங்கெல்லாம் கட்டிடத்தை காப்பாற்றுவதற்கு படாத பாடுபடுகிறார்கள். நம் நாட்டில் கட்டிடங்களையெல்லாம் யுத்தம் தரைமட்டமாக்கிக் கொண்டிருக்கிறது. இங்கே உடைந்த கட்டிடங்களை வேண்டுமானால் ஞாபகார்த்த சின்னங்களாகப் பாதுகாக்கலாம்.

இங்கும் கட்டிடங்களை இடம்மாற்றும் வசதியிருந்தால் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வீடுகளோடு வெளியேறியிருப்பார்களோ?




டொலியில் ஏற்றப்பட்ட நிலையில் கட்டிடம்

## ஒரே பாய்ச்சல்



தமிழ் நாட்டில் 'கிளிக்' செய்யப்பட்ட படம் இது.

உயரம் தாண்டும் பயிற்சியில் தேர்ந்த நாயார் சாகசம் காட்டுகிறார். காண்பவர்களுக்கு கண்கொள்ளாக் காட்சி. வளர்த்து பயிற்சி கொடுத்தவருக்கு வருமானம். காண்பவர்களிடம் பண வசூல் செய்து தன்னையும், நாயாரையும் கவனித்துக் கொள்கிறார். நாய்ப் பிழைப்பாகிவிட்டதே என்று சிலர் கஷ்டமான நிலையில் சலித்துக் கொள்வார்கள். நாயை வைத்தும் பிழைக்கலாம், நாலு காசு பார்க்கலாம் என்பதை அவர்கள் அறியமாட்டார்களாக்கும்.

## தகவல் பெட்டி

## காதலர் கட்சி



அமர்க்களமான படப்பிடிப்பு புகைப்படத்திற்கு போஸ் கொடுப்பவர்கள் அனைவருமே வெற்றிக்கு அடையாளமாக இரண்டு விரல்களை விரித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். காதலை, அன்பை வெளிப்படுத்தும் சின்னம் இதயம் என்பது தெரிந்த சங்கதிதான். இதயவடிவில் இவர்கள் திரண்டு நின்று வெற்றி என்று காட்டுவதைப் பார்த்தால் காதலர் கட்சிஆரம்பித்துவிட்டது போல் தெரிகிறதல்லவா.

# சினிவிசிட்



கமல்-மனிஷா கொய்ராலா
படம்-இந்தியன்



விசித்ரா

## அடடே நியூஸ்

ஹொலிவூட் நடிகர் ஓமர் ஷெரிப்புக்கு இப்போது 63 வயது. சமீபத்தில் அவர் விடுத்துள்ள ஒரு அறிவிப்பு பலரையும் திடுக்கிட வைத்துள்ளது.

எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அதுவும் இத்தாலியில் இருக்கிறான் என்று கூறியிருக்கிறார் மனிதர். அதனை அவர் கூறிய விதம் இருக்கிறதே அதுதான் ருசிகரம்.

எப்படிக் கூறியிருக்கிறார் தெரியுமா? "இத்தாலியப் பெண் நிருபர் ஒருவர் என்னை பேட்டி காண வந்திருந்தாள். அவள் எனது தீவிர ரசிகை. இருவரும் ஒரு ஐந்தே ஐந்து நிமிடம் எம்மை மறந்து இருந்துவிட்டோம். அது நடந்து ஒரு வருடமாகிவிட்டது. நான் அந்த சம்பவத்தையே மறந்துவிட்டேன். அவளிடம் இருந்து சமீபத்தில் போன் வந்தது. "உங்களுக்கொரு மகன் பிறந்திருக்கிறான் வந்து பாருங்கள்" என்றாள். உடனே போய் பார்த்தேன். என்ன ஆச்சரியம், ஆக, ஐந்தே நிமிடத்தில் என்னைப் போல் ஒருவனா? என்று சிலிர்த்துப் போனேன்" என்கிறார் ஓமர் ஷெரிப்.

## கமலுக்கு பாராட்டு

'மகாநதி' படத்தில் சுகன்யாவை முத்தமிட்ட கமல், இந்தியன் படத்திலும் சுகன்யாவை விட்டுவைக்கவில்லை. இதழோடு இதழ் சேர்க்கிறார். அப்பா கமல் சுகன்யாவை அந்தப்பாடுபடுத்த, மகன் கமல் விடுவாரா, மனிஷா கொய்ராலாவை ஒரு வழி பண்ணிவிடுகிறார். தோளில் ஆரம்பித்து அப்படியே தொடர் முத்தமிட்டு செல்லுகிறார் மகன் கமல். இரட்டை வேடம் என்பதால் இரட்டை வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

கமலின் நயமான முத்தக்கலையைப் பாராட்டியிருக்கிறார் மனிஷா. முத்தமிடுவதில்கூட எத்தனை இயல்பாக நடிக்கிறார் கமல் என்று பேட்டியொன்றிலும் சொல்லியிருக்கிறார் மனிஷா.

## காதோடு சொல்லுகிறோம்

'**மா**வீரன்' பெயர் கொண்ட நடிகருக்கு ரஞ்சித நடிகை காதல் தூதுவிட்டார். நடிகரின் மனைவியின் காதில் செய்தி விழுந்துவிட்டது. வீட்டில் கலவரம். நடிகர் ஒருவாரமாக வீட்டில் அடைந்து கிடந்தாராம். அதனால் படப்பிடிப்புக்கள் ரத்தாகியது. பாவம், தயாரிப்பாளர்கள்.

'**கா**தலன்' நாயகனை 'இனிமேல் சந்தித்தாலோ, போனில் பேசினாலோ நடப்பதே வேறு' என்று எச்சரித்துள்ளார் தந்தை நடிகரின் தந்தையேதான்! ஆடிப்போயிருக்கிறார் 'ந' வில் பெயர் ஆரம்பித்து 'மா'வில் முடியும் மூன்றெழுத்து நடிகை. நடிகரின் தந்தைக்கு ஆட்பலம் இருக்கிறது என்ற செய்தியும் நடிகைக்கு வயிற்றில் புளியைக் கரைத்துள்ளதாம்.

**த**மிழுக்கு வந்துள்ள தன் பெயரில் 'ரம்' வைத்துள்ள நடிகை யார் தெரியுமா? தெரிந்தவர்களுக்கு ஒரு தகவல். படப்பிடிப்பில் கலந்து கொண்ட நடிகையை திடீர் என்று காணவில்லையாம். எங்கும் சல்லடை போட்டு தேடிவிட்டு மேக் அப் ரூமில் பார்க்கலாம் என்று போனால் கதவு மூடியிருந்ததாம். குரல் கொடுத்துப்பார்த்தார்கள். கதவை மெல்லத் திறந்து எட்டிப்பார்த்தாராம் நடிகை. இங்கேதான் இருக்கிறேன் ஹி ஹி என்று அசடு வழிந்தாராம். இதிலென்ன செய்தி இருக்கிறது என்கிறீர்களா? ரூமுக்குள் இன்னொருவரும் இருந்ததுதான் விவகாரம். அவர் 'கோட்டை பட' இயக்குநராம்.

**பெ**யரில் 'கார்' உள்ள தமிழ் நடிகர் யார்தெரியுமோ? அவர் தனது புதிய பட நாயகியோடு சுற்றுகிறாராம். 'திக் திக்' என்று இதயத்துடிப்போடு இருக்கிறார் நடிகரின் மனைவியான முன்னாள் நடிகை.

## அரேபியக் குதிரை

புலித்தேவன் படத்தில் பிரசாந்த்தோடு நடிக்க அரேபியாவில் இருந்து பிரமாதமான புதுமுகம் ஒன்றை இறக்குமதி செய்துள்ளார்கள். சவாரி செய்யும் ஆசையில் துள்ளிக் குதிக்கிறார் பிரசாந்த். அரேபியாவில் இருந்து இறக்குமதியாகியிருப்பது நடிகையல்ல, உண்மையாகவே ஒரு குதிரையே தான்.

## ரம்பாவின் அனுபவம்

தமிழில் செங்கோட்டை, சுந்தர புருஷன், மற்றும் நான்கு புதிய படங்கள் ரம்பாவின் கைவசம் இருக்கின்றன. அதுதவிர தெலுங்கில் மூன்று. இந்தியில் இரண்டு.

ஒரு பேட்டியில் ரம்பா சொல்கிறார்: "இப்போது இது இளைஞர் யுகம். அவர்கள்தான் வெற்றியை நிர்ணயிக்கிறார்கள். அவர்களின் கனவுக் கன்னியாக வலம் வரவே விரும்புகிறேன்." என்று சொல்லியிருக்கிறார். இளைஞர்களது ஆர்வங்களை ரம்பா நன்கு அறிந்து வைத்துள்ளார்.



பாண்டியன்-ஜெயராகினி
படம் நல்ல மனசுக்காரன்



பிரபு-ரம்பா
படம் சிவச

## சேலை கட்ட ஆசை

ஒரு படத்திலாவது முழுக்க முழுக்க சேலை கட்டி நடிக்க வேண்டும் என்று நக்மாவுக்கு கொள்ளை ஆசையாம். ஒரு சில காட்சிகளில் மட்டுமே சேலையோடு இருக்க அனுமதிக்கிறார்கள் என்று நக்மா வருத்தப்படலாம். நக்மா படம் சேலையோடு வந்தால் தயாரிப்பாளர்கள் வருத் வேண்டியிருக்கும். படம் பார்க்க யார் வரப்போகிற

நக்மாவைப் போலவே சங்கவியும் வருத்தப் 'அந்தி மந்தாரை' படத்தில் சேலையோடு நடிக்கிற வசூலுக்கான படமல்ல, விருதுக்கான படம்.

டா

கன்

கல்லூ

## …டிகையின் புலம்பல்

…கை விசித்ராவுக்கு தற்போது முன்புபோல வாய்ப்புக்கள் …இல்லை.

…நொந்துப்போயிருக்கிறார் விசித்ரா. வெறுப்பு புலம்பலாக …கிறது.

… சொல்கிறார் என்று கேட்டுவிட்டு உங்கள் அனுதாப …களை வழங்குங்கள்.

…உலகில் ஒரு நடிகை நிலைத்து நிற்பது லேசுப்பட்ட …

…ப் மேலில் இருந்து, காமரா தன்னுகிறவன்வரை இளிப் … தொட்டுப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா … அலைவார்கள்.

…னாவது பரவாயில்லை. சில இயக்குநர்கள் ரொம்ப …வர்கள் தங்கள் முன்பாக ஆடிவிட்டுத்தான் படத்தில் …முன்பாக ஆடவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். … "உனக்கு இந்த ரோல் சரிப்பட்டுவராது" என்று …ருந்தே தூக்கிவிடுவார்கள்.

…சொன்னால் நம்பமாட்டீர்கள். அவர் ஒரு பிரபல இயக்குநர். …ழின் உச்சத்தில் இருப்பவர். அவரது படம் ஒன்றில் நடிக்க வாய்ப்புத் தருவதாகக் கூப்பிட்டார். நானும் மகிழ்ச்சியோடு சம்மதித்தேன்.

ஒருநாள் இரவு 12 மணிக்கு அந்த இயக்குநரிடம் இருந்து போன். "என்ன சார்?" என்று கேட்டேன். சென்னையில் ஒரு பிரபல ஹோட்டலின் பெயரைச் சொல்லி "அங்கே உடனே வர்றியா?" என்று கேட்டார். "முடியாது" என்று சொன்னேன். முதலில் மிரட்ட ஆரம்பித்தார்.

"உன்னை இந்த பீல்டுல இருந்தே விரட்டி விடுவேன். பின்னர் என்ன தொழில் செய்யப்போகிறாய்?" என்று அசிங்கமாகவெல்லாம் திட்டினார். நான் அசைந்து கொடுக்கவில்லை. 'போனை வைச்சிடட்டுமா சார்?' என்று கேட்டேன்.

அவர் என்ன செய்தார் தெரியுமா..? போனிலேயே அழத் தொடங்கிவிட்டார். "நான் உன்னை காதலிக்கிறேன் விசித்ரா. உன் படங்கள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் வீடியோவில் பார்த்திருக்கிறேன்." என்றெல்லாம் புலம்பத் தொடங்கிவிட்டார்.

இப்படியான போலி மனிதர்கள் பலர் சினி பீல்டிலே கலர் கலராக இருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் அனுசரித்து, வளைந்து கொடுத்து கவனித்தால்தான் நான் பிஸியான நடிகையாக முடியும். நான் அதனை விரும்பவில்லை." என்கிறார் விசித்ரா.

## புதிய படம் சிவன்

'ராஜாளி' படத்தை இயக்கிவரும் வேலுபிரபாகரன் அடுத்து இயக்கும் படம் 'சிவன்'. அருண்பாண்டியன், நெப்போலியன் இருவரும் கதாநாயகர்களாக நடிக்கின்றனர். நெப்போலியனுக்கு ஜோடி சுவாதி. அருண் பாண்டியனின் ஜோடியாக நடிக்க கதாநாயகி தேர்வு நடைபெறுகிறது.

சமூக விரோத சக்திகளை எதிர்த்து போராடும் இரு இளைஞர்களின் சாகசங்களை மையமாகக் கொண்ட படம்: சிவன். இசை: ஆதித்யன். மணிவண்ணன், சில்க் சுமிதா ஆகியோரோடு முக்கிய வேடத்தில் நடிக்கிறார் ராதிகா.

## குரல்தர மறுப்பு

'காலம் மாறிப்போச்சு' படத்தில் பாண்டியராஜன்தான் கதாநாயகன். படப்பிடிப்புக்கள் முடிவடைந்து விட்டன. தற்போது ஒரு சிக்கல். படத்திற்காக டப்பிங் குரல் கொடுப்பதற்கு முன் படத்தை போட்டுப் பார்த்தார் பாண்டியராஜன். பார்த்தவருக்கு ஷாக்! வடிவேலு, சுந்தரராஜன் ஆகியோருக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார் இயக்குநர். பாண்டியராஜன் சம்பந்தப்பட்ட பல காட்சிகள் எடிட்டிங்கில் தின்னப்பட்டு விட்டன. "டப்பிங் பேசமாட்டேன் போ!" என்று விட்டார் பாண்டியராஜன். படப்பிடிப்பு முடிந்தும் பாண்டியராஜன் குரல் கொடுக்காமல் வெளியீடு தாமதமாகிறது.

## தெலுங்கில் கஸ்தூரி

'இந்தியன்' படத்தில் கஸ்தூரியின் அம்மாவாக நடிக்கிறார் சுகன்யா. அப்பாவாக கமல். கமலோடு ஜோடியாக நடிக்க முடியா விட்டாலும் மகளாக நடிக்க வாய்ப்புக்கிடைத்ததால் மகிழ்ந்து போயிருக்கிறார் கஸ்தூரி.

கஸ்தூரி பற்றிய மற்றொரு செய்தி: தெலுங்கில் துணிகுறைப்பு செய்து நடிப்பதால் அங்கு பிஸியான நடிகையாகி விட்டார். தெலுங்கில் முன்னணி ஹீரோ ஒருவருடனும் நட்பை பலப்படுத்தி கொண்டுவிட்டாராம்.

## பாக்கியம்

'என் ராசாவின் மனசிலே' படத்தின் மூலம் மீனாவை கதாநாயகியாக்கியவர் ராஜ்கிரண். சமீபத்தில் மீனாவின் மார்க்கெட் டல்லாகியது. மறுபடி கைகொடுத்தார் ராஜ்கிரண். 'பொன்னு விளையற பூமி' படத்தில் ராஜ்கிரணின் ஜோடி மீனாதான். அந்த வாய்ப்புக் கிடைத்த அதிஷ்டமோ என்னமோ கமலுக்கு ஜோடியாக நடிக்கும் சான்ஸ் கிடைத்துவிட்டது. 'அவ்வை சண்முகி' படத்தில் கமலோடு நடிப்பதை பெரும் பாக்கியமாக கருதுகிறார் மீனா.








## …டா-பிர்லா

…இருவரும் இந்தியாவின் பிரபல கோடீஸ்வரர்கள் …புதிய படம் ஒன்றுக்கு சூட்டியிருக்கிறார்கள். …டிப்பவர் பார்த்திபன். பிர்லாவாக நடிப்பவர் …ரும் இணைந்து நடிக்கும் முதல் படமும் இதுதான். …ரும் ஆசையில் இரண்டு இளைஞர்கள் மேற்கொள்ளும் …சுவையாகச் சொல்லப்போகிறார்கள். … இயக்கம் சிரஞ்சிநாதன். இசை: வித்யாசாகர்.

## …டத்தில் ஹீரோ

…ன் வேடம் போடுவது புதிய சமாச்சாரமில்லை …டம் போட்டு நடித்திருப்பவர் சரண்ராஜ். வில்லன் …டத்திற்காக பெண் வேடம் போட்டு நடித்தபோது, … நடனமும் ஆடியிருக்கிறார்.

…யி மற்றொரு செய்தி, தற்போது 10 கன்னடப் …யகனாக நடித்துக் கொண்டிருக்கிறார். தமிழில் …த்து தோல்வி கண்டு, மறுபடி வில்லனாக வலம் … அவருக்கு கன்னடத்தில் அடித்திருக்கிறது யோகம்.

## தேர்தலில் கவுண்டமணி

தேர்தல் என்றால் ஆயிரம் இருக்கும். ஆயிரம் பொய் சொல்லியும் தேர்தலில் வெற்றிபெறு என்பது தான் புதுமொழி. அதனை உணர்த்தும் வகையில் 'என் ஆசை தங்கச்சி' படத்தில் ஒரு காட்சி அமைத்திருக்கிறார்கள்.

சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுகிறார் கவுண்டமணி. வாக்கு வேட்டைக்கு போன இடத்தில் வயதான பெண்மணியைக் கண்டுவிட்டார். கிழவியை கட்டியணைத்து முத்தமிட்டபடி காமராவுக்கு போஸ் கொடுப்பார் கவுண்டமணி. போஸ் கொடுத்து முடிந்ததும் கிழவியைப் பார்த்த கவுண்டமணிக்கு அதிர்ச்சி. கிழவி செத்துப்போனார். பிணத்தைப் போட்டுவிட்டு ஓட்டம் பிடிப்பார் கவுண்டமணி.

விரைவில் திரைக்கு வரப்போகும் படம் இது. ராம்கி, பாலாம்பிகா ஜோடியாக நடிக்கின்றனர்.

## …மாணவி

…ளாக நடிக்கும் புதிய …நாயகிகள் இரண்டு …ரி மாணவி. மற்ற …முன்னணி நடிகை. …இயக்குநர் ரவீந்திரன் …கிறார். இயக்குவது. …றபி. மணிவண்ணன், …மனோரமா, ராஜன் …ம் நடிக்கின்றனர். …ஜோடியின் கிளு …ர்களுக்கு சலித்து …புதுஜோடியினோடு …க்கத் தொடங்கி …விட்டார் விஜய்.

## மணியின் முன்னேற்றம்

கவுண்டமணியின் மார்க்கெட் கிடுகிடுவென்று உயர்ந்து கொண்டிருக்கிறது. வடிவேலு புயல் கிளம்புவதால், கவுண்டமணியின் மார்க்கெட் சரியும் என்று எதிர்பார்த்தது நடக்கவில்லை. புதுநிலவு படத்தில் கவுண்டமணி டூயட் பாடுகிறார். சண்டை போடுகிறார். கதாநாயகனைவிட மணிக்கு முக்கியத்துவம் கூடிவருகிறது.

## வலம்வரும் இளம் ஹீரோ

இளம் ஹீரோக்களில் படுவேகமாக முன்னேறிவருகிறார் அஜித்குமார். கல்லூரி வாசல், வான்மதி படங்களின் வெற்றியால் அஜித்குமாரின் மார்க்கெட் சூடுபிடித்திருக்கிறது.

சுவாதியை காதலித்து கிசுகிசுக்களில் மாட்டிக்கொண்டபின்னர் தற்போது உஷாராகியிருக்கிறார் அஜித். இனிமேல் எந்த நடிகையுடனும் அதிகமாக நெருங்கிப் பழகுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறாராம். அவரது முடிவை இளம் நடிகைகள் நீடிக்க விடமாட்டார்கள் போலிருக்கிறது.

சமீபத்தில் இளம் நாயகிகளில் ஒருவரான தேவயானியும் அஜித்குமாரும் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் ஒன்றாக தங்கியதாக தகவல் வெளியானது. தேவயானி பம்பாய் இறக்குமதி. வாய்ப்புக்காக காத்திருப்பவர். கவர்ச்சி விடயத்தில் துணிச்சலானவர்.

தமிழ் சினிமாவில் முன்னுக்கு வருவதற்காக வளர்ந்துவரும் இளம் ஹீரோவை கைக்குள் போட்டுக் கொள்ள சுவாதி நினைப்பது ஆச்சரியமில்லை.

அஜித்குமார் சிபாரிசால் 'காதல் கோட்டை' படத்தில் தேவயானிக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. படத்தில் இரண்டு கதாநாயகிகள். ஒருவர் ஹீரா. அடுத்தவர் தேவயானி.

வான்மதி வெற்றிப்படத்தை இயக்கிய அகத்தியன், கதை, வசனம் எழுதி இயக்கும் படம் 'காதல் கோட்டை'.



## உதவுகிறாள் சுஹாசினி

நடிகை சுஹாசினி படு பிஸி. தமிழில் இரட்டை ரோஜாவில் நடிக்கிறார். மலையாளத்தில் சோபன்பாபுவுடன் 'ஹலோ குரு' படத்தில் நடிக்கிறார். அதுதவிர கணவருக்கு உதவியாக அனந்தம் பட வேலைகளையும் கவனித்து வருகிறார். 'அனந்தம்' படத்திற்கு உதவி இயக்குநர் சுஹாசினிதான்.

## சபதம்

"சினிமா உலகை விட்டு நான் விலகுவதென்றால், என் உயிர்போன பின்னர் தான் சாத்தியம்." இப்படிச் சொல்லியிருப்பவர் யார் தெரியுமா? ராதிகா தான்.

| | |
|---|---|
| ரோஜா | படம்-ராஜாளி |
| பிரபுதேவா | படம்-மின்சாரக்கனவு |




## புதிய-அந்தநாள்

'வர்றாரு சண்டியரு' படத்தை அடுத்து பிரேம் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் 'அந்தநாள்' இதேபெயரில் சிவாஜிகணேசன் நடித்த படம் ஒன்று இருக்கிறது. பழையபடங்களின் பெயரை புதிய படங்களுக்கு சூட்டும் சீசன் இது. இந்தியாவின் இமாசலப் பிரதேசத்தில் நடந்த உண்மைக்கதையை வைத்து தயாரிக்கப்படும் படம் அந்தநாள். பிரேமின் ஜோடியாக மோகினி நடிக்கிறார். போலீஸ் அதிகாரி வேடத்தில் பிரேம் நடிக்கிறார்.

கதை, வசனம், இயக்கம் விஷ்ணுப்பிரியன். இசை: சவுந்தர்யன்.

## நக்மாவுக்கு சிபாரிசு சரத்

சரத்குமாரின் ஜோடியாக மூன்றாவது படத்திலும் நடிக்கிறார் நக்மா.

முதல்படம் 'இரகசிய போலீஸ்' சரத்குமார் திருப்திப்படும் வகையில் தாராளமாக நடித்து ஒத்துழைத்தார் நக்மா. தற்போது 'அரவிந்தன்' படத்தில் சரத்குமாரின் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

நக்மா தொடர்ந்து சளைக்காமல் ஒத்துழைப்பதைக் கண்டு நெகிழ்ந்துபோன சரத், நேதாஜி படத்திலும் நக்மாவை போடுமாறு சிபாரிசு செய்தார்.

'சரத்ஜி' என்று சரத்குமாரை அன்பொழுக அல்லது தேனொழுக அழைக்கிறார் நக்மா.

'லவ் பேர்ட்ஸ்' படத்தின் பின்னர் நக்மா-பிரபுதேவா ஜோடி ராசியில்லாத ஜோடியாகிவிட்டது.

சரத்-நக்மா ஜோடியின் எதிர்காலம் அரவிந்தன் படம் வந்த பின்னர்தான் தெரியும். 'அரவிந்தன்' விரைவில் திரைக்கு வரவிருக்கிறது.

# எதிரே இருப்பவர் எப்படிப்பட்டவர்?

## கண்டுபிடிக்க சில யோசனைகள்

யாரை நம்புவது, யாரை ஒதுக்குவது எனத் தெரியாததால்தான் இன்று பலரும் வாழ்வில் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். இதற்குக் காரணம், அடுத்தவரின் மன ஓட்டத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியாதது தான்.

நம் எதிரில் இருப்பவர் உண்மையில் என்ன விரும்புகிறார் அல்லது என்ன யோசிக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ள நாம் பெரிய மனோதத்துவ டாக்டராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எதிரில் இருப்பவர்களின் மன ஓட்டத்தைத் தெரிந்து கொள்ள நாம் நமது கண்களைத் திறந்து வைத்திருந்தாலே போதும்.

ஒருவரின் கண் அசைவு, பேச்சு, உடல் இயக்கம் ஆகியவற்றின் மூலம் அவரது மனதில் உள்ளதை அறிந்து கொள்ள முடியும். இப்படிச் சொல்பவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த மனோதத்துவ ஆராய்ச்சிக் கழக இயக்குநர் ஹசல்ப் லோட்.

உங்கள் எதிரில் இருப்பவரின் எண்ணத்தைப் புரிந்து கொள்ள இதோ அவர் சில குறிப்புகளைத் தருகிறார்.



### கண்கள்:

இரண்டுபேர் நேருக்கு நேர் கண்களால் சந்தித்துக் கொண்டால் அவர்கள் கண்கள் மூலம் அன்பு, வெறுப்பு, ஆர்வம், பகைமை ஆகியவற்றை வெளிப்படுத்த முடியும்.

ஒரு நபர் உங்கள் கண்களை நேருக்கு நேர் பார்த்தால் அவர் உங்களிடம் ஏதோ சொல்ல விரும்புகிறார். நீங்கள் அவருடன் ஏற்கனவே பேசிக் கொண்டிருந்தால் கண்களின் நேர்ப்பார்வை நம்பிக்கையையும், உண்மையையும் உணர்த்தும். எனினும் தொடர்ந்து கண்களோடு கண்கள் நோக்கிக் கொண்டிருந்தால் அது பகைமையை உணர்த்துவதாக இருக்கும்.

கண்களை நேருக்கு நேர் சந்திக்க யாராவது தவிர்த்தால் அவர் எதையோ மறைக்க முயற்சி செய்கிறார்.

கண் இமைகளை அடிக்கடி சிமிட்டுவது ஒரு எச்சரிக்கைதான். இந்த நபர் ஏதோ ஒரு வழியில் உங்களுக்குத் தவறிழைத்திருப்பார். அல்லது தவறு செய்து கொண்டிருப்பார்.

### உடல் அசைவு:

ஒரு நபர் உங்களுக்கு மிக அருகில் நெருங்கி நின்றால் அன்பு, நம்பிக்கையை அது உணர்த்தும்.

உங்களை விட்டு விலகி நின்றாலோ, குனிந்து நின்றாலோ அவர் உங்களை வெறுக்கிறார். அவர் உங்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கவில்லை என்று பொருள்.

நடுக்கம் அல்லது ஒழுங்கற்ற உடல் அசைவுகளுடன் ஒருவர் காணப்பட்டால் அவர் பதட்டத்தில் இருக்கிறார். நின்று கொண்டே கைகளால் மேசையில் கோடு கீறிக் கொண்டோ, கால்களால் தரையில் படம் வரைந்து கொண்டோ இருந்தால் அவர் உங்களைத் தவிர வேறு யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம். அல்லது வேறு எங்கேயோ அவர் போக வேண்டியிருக்கும்.

### குரல்:

தெளிவான குரல் அன்பை வெளிப்படுத்துகிறது. இப்படிப் பேசுபவர் உங்களை விரும்புகிறார். நீங்கள் அவரை நம்பலாம். எனினும் உரத்த குரல் என்பது அந்த நபர் சாதாரண மூடில் இல்லை என்பதைக் குறிக்கும். ஆழமாக வாய் கிழியக் கத்துபவர்கள் பகையை உருவாக்கலாம்.

ஒருவர் வேண்டுமென்றே மெதுவாகப் பேசினால் அவர் உங்களை மதிக்கவில்லை எனப் பொருள். ஒருவர் பேசும்போது அடிக்கடி இருமி தொண்டையைச் சரி செய்வது போல செய்தால் அவர் குற்றம் செய்தவராக இருக்கக்கூடும். அவரைக் கண்காணிப்பது நல்லது.

### முகம்:

32 பற்களும் தெரிய சிரிப்பவர்கள் நம்பத் தகுந்தவர்கள். அவர் உங்கள் மீது ஆர்வம் கொண்டுள்ளவராக இருப்பார்.

உதடுகளை மூடிப் புன்னகை செய்பவர் உங்களை அற்பமாகப் பார்க்கிறார். மேற்பற்கள் மட்டும் தெரியச் சிரித்தால் அவர் உங்கள் மீது முழுவதும் நட்பாக இல்லை. உங்களைப் பார்த்தவுடன் ஒருவர் அவர் உதடுகளைக் கடித்தால் உங்களை விடத் தாழ்ந்தவராக அவர் தன்னைக் கருதுகிறார் எனக் கருதலாம்.

இவையெல்லாம் நாற்றுக்கு நூறுவீதம் சரியாகத்தான் இருக்கும் என்று அர்த்தமல்ல. பொதுவான கணிப்புக்களே இவையாகும்.

# வீட்டுக்குறிப்புகள்




நன்றாகத் தூக்கம் வரவேண்டுமா? உங்களுக்குப் பிடித்தமான துளசி, வெட்டி வேர் இப்படி எதையாவது ஒன்றை ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டுத் தலையணைக்குக் கீழே வைத்துப் படுத்துவிடுங்கள். பிறகு நிம்மதியான, ஆழ்ந்த தூக்கம் வந்து உங்களை அரவணைத்துக் கொள்வதை நீங்கள் உணர்வீர்கள்.

★★



பொருட்கள் நிறைந்த அட்டைப்பெட்டி, சாக்கு மூட்டைகள் போன்றவற்றைப் பார்சல் கட்டும்போது கயிறைத் தண்ணீரில் நனைத்து இறுக்கமாகக் கட்டுங்கள். கயிறு உலர உலர இன்னும் இறுக்கமாகிவிடும். இதனால் எப்படித்தூக்கிப் போட்டாலும், எவ்வளவு தூரம் சென்றாலும் பார்சல் அவிழவே அவிழாது.

★★



சாப்பிடும் மேசை, எழுதும் மேசை போன்றவற்றைச் சுத்தப்படுத்தும்போது, வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு வினிகர், சிறிதளவு பரபின் எண்ணெய் ஆகியவற்றைக் கலந்து பஞ்சு அல்லது பழந்துணியினால் தொட்டுச் சுத்தப்படுத்திப் பாருங்கள். மேசைகள் எல்லாம் பளபளவென்றிருக்கும்.

★★

# பிரஷர் குக்கர்

குக்கர்கள் பெரும்பாலும் அலுமினியம் அல்லது எவர்சில்வரால் செய்யப்படுகின்றன. இப்போது எனாமல் பூசப்பட்ட குக்கர்களும், வண்ணங்கள் பூசப்பட்ட எவர்சில்வர் குக்கர்களும் விற்பனையில் இருக்கின்றன.

எனாமல் மற்றும் வண்ணங்கள் பூசப்பட்ட வகைகள் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் கூடுதலாக எந்த வகையிலும் உபயோகம் தருவதில்லை.

செம்பு அடிப்பாகம் கொண்ட குக்கர்கள் சூடு ஒரே சீராகப் பரவவும், உணவுப் பொருள் விரைவாக வேகவும் உதவுகின்றன. இவற்றின் விலை சற்று அதிகம்.



உணவுப் பொருள் விரைவாக வேகவும் வெந்த உடனேயே திறக்கவும் அலுமினியக் குக்கர்கள் ஏற்றவை. இருப்பினும் எவர்சில்வர் குக்கரைப் போன்று இவற்றில் சமைத்த உணவை நீண்ட நேரம் சூட்டுடன் வைத்திருக்க முடிவதில்லை. எவர்சில்வர் குக்கர்களை விட, அலுமினியம் குக்கர்கள் தரத்தில் குறைந்தவை என்பது தவறான அபிப்பிராயம். அழகான தோற்றத்திற்கும், நீண்டகால உழைப்பிற்கும், உணவுப்பொருட்களின் சூடு நீண்ட நேரம் நீடிக்கவும் எவர்சில்வர்குக்கர்கள் ஏற்றவை.

# நிரூபித்தார்



இதுவரை உலக அழகிப் போட்டிகளில் இருந்த வெள்ளைக்காரப் பெண்களின் ஆதிக்கத்தை உடைத்த உலக அழகியாக முதன்முதலாக 1995ம் ஆண்டுக்கான தேர்வில் வென்று சாதனை படைத்துள்ளார் செல்சி சுமித் என்ற இந்த (நடுவில் கிரீடம் சூட்டப்பட்டுள்ளவர்) கறுப்பு அழகி. நமிபியாவில் நடைபெற்ற இந்த உலக அழகிப் போட்டியில் 81 பேர் கலந்து கொண்டனர். அமெரிக்காவைச் சேர்ந்த செல்சி சுமித்திற்கு இரண்டு இலட்சம் டொலர் பரிசுத்தொகையும், ஒரு யானைக் குட்டியும் பரிசாகக் கொடுக்கப் பட்டது. கறுப்பும் ஒரு அழகு தான் என்று நிரூபித்துவிட்டார் செல்சி சுமித்.

# சமைப்போம் சுவைப்போம்

## இறால் ஒம்லெட்

(தொகுத்துத் தருவது~சுகந்தினி)

**தேவையான பொருட்கள்:**

இறால் - 1/4 கிலோ
முட்டை - 4
தேங்காய் எண்ணெய் - 50 மில்லி லீட்டர்
பெரிய வெங்காயம் - 200 கிராம்
உப்பு - அளவாக.

**செய்முறை:**

முதலில் இறாலைத் தோல் உடைத்து வைத்துக் கொள்ளவும். பின் பெரிய வெங்காயத்தை சிறிது சிறிதாக நறுக்கி வையுங்கள். வாணலியில் 25 மில்லி லிட்டர் தேங்காய் எண்ணெய் விட்டு நறுக்கிய வெங்காயம், தோல் உடைத்த இறால் இரண்டையும் உப்பு சேர்த்து வதக்கவும். நன்றாக வதங்கியவுடன் அவற்றைத் தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும் பின் ஒரு பாத்திரத்தில் முட்டைகளை உடைத்து ஊற்றி நன்கு கலக்கிக் கொண்டு, வதக்கிய பொருட்களையும் சேர்த்துக் கலக்கி, தோசைக் கல்லில் எண்ணெய் விட்டு, ஒவ்வொரு கரண்டியாக ஊற்றித் தோசையைப் போல் போட்டு எடுக்கவும். இறால் ஒம்லெட் தயார்.

# கிரிக்கெட்டில் சூடும்—சூதும்

## இந்திய அணி திருப்பிக் கொடுக்குமா?



பெங்களூரில் வாங்கிய அடியை சிங்கப்பூரில் வட்டியும் முதலுமாக திருப்பிக் கொடுத்த சந்தோசத்தில் இருக்கிறார்கள் பாகிஸ்தான் ரசிகர்கள்.

நாம் ஏற்கனவே கணிப்பிட்டதுபோல பெங்களூரில் அதிசயம் நிகழ்த்திய உற்சாகம் சிங்கப்பூர் ஆட்டத்தில் இந்தியாவிடம் காணாமல் போயிருந்தது.

பாகிஸ்தான் துடுப்பாட்டக்காரர்கள் விளாசத் தொடங்கியபோது உத்வேகமாக எழுந்து கட்டுப்படுத்த தவறியது இந்திய அணி.

தானே பந்து வீசி, தன்னிடமே வந்த காட்ச்சை தவறவிட்டு மூட் அவுட்டானார் அனில் கும்ளே.

பெங்களூரில் அதிசயம் நிகழ்த்திய வெங்கடேஷ் பிரசாத் சிங்கப்பூரில் கோட்டை விட்டார். தாராளமாக ரன் கொடுத்தார்.

ஆட்ட இறுதியில்தான் இந்தியா திடீரென்று ஆவேசமாகி தமது வியூகத்தை இறுக்கியது. ஆனால் அதற்கிடையே வெற்றி வாய்ப்பு இந்தியாவை விட்டு வெகுதூரம் சென்றிருந்தது.

அமீர் சொகைல் தான் ஒரு சிறந்த கப்டன் என்று நிரூபித்து நிலைத்து நின்று ஆடினார். அவுட் ஆகாமல் வெற்றியோடு திரும்பினார். சயிட் அன்வர் வான வேடிக்கை காட்டினார். ரமேஷ் ராஜா ஏமாற்றினாலும், சலீம் மாலிக்கிடம் அனுபவ முத்திரை பளிச்சிட்டது.

இந்திய அணியில் டெண்டுல்கர் சிறப்பாக ஆடினால் சித்து சென்றுவிடுவார் என்பது ஒரு விதிமுறையோ என நினைக்குமளவுக்கு இருக்கிறது. டெண்டுல்கர் போனால் சித்து விளாசுகிறார். டெண்டுல்கர் நிலைத்து நின்றால் சித்து போய்விடுகிறார்.

டெண்டுல்கர் அடித்த சதம் மட்டும்தான் இந்திய அணி தனது ரசிகர்களுக்கு கொடுத்த ஆறுதல் பரிசு.

அசாருதினின் மட்டையில் படாமல் சென்ற பந்தை கீப்பர் பிடித்தார். உடனே அவசரப்பட்டு அவுட் கொடுத்தார் நடுவர். அதே நேரம் ஸ்டொம் செய்துவிட்டு அப்பீல் செய்தார் கீப்பர். அப்போது அசாரின் கால் ஒன்று கிரிஸில்தான் இருந்தது. எனவே ஸ்டொம் மூலம் அசார் அவுட்டாகவில்லை. நடுவரின் தவறான தீர்ப்பே அசாரை வெளியேற்றியது. அசார் கொஞ்ச நேரம் நின்று யோசித்தார். நடுவர் சத்தமாக 'அவுட்' என்று மூன்று முறை கத்தினார்.

தொலைக்காட்சியில் பார்த்தவர்களுக்கு தென்னாபிரிக்க நடுவரின் தீர்ப்பு தவறென்பது தெளிவாகத் தெரிந்தது.



டெண்டுல்கர் அரைச்சதம் போட்டவுடன் ஆர்வமிகுதியால் ஒரு ரசிகர் மைதானத்தில் புகுந்துவிட்டார் டெண்டுல்கருக்கு கை கொடுத்துவிட்டார். அப்போதும் அதே தென்னாபிரிக்க நடுவர் அந்த ரசிகரின் கழுத்தில் பிடித்து மைதானத்திற்கு வெளியே கொண்டுசென்றார். அது நடுவரின் வேலையல்ல. பொலிஸின் வேலை. பொலிஸார் வந்து ரசிகரை பிடித்துக்கொண்டபோது நடுவர் அதில் தலையிட்டு கை நீட்டியது சரியாகப்படவில்லை.

பாகிஸ்தான் அணியும், இந்திய அணியும் தமக்குள் சிறு சிறு உரசல்கள், முறைப்புக்கள் இல்லாமல் விளையாடியது குறிப்பிடத்தக்க விஷயம்.

பாகிஸ்தான் ஆதரவாளர்கள் மட்டும் இந்தியா டவுன், டவுன் என்று கத்தினார்கள்.

பெங்களூரில் இந்தியாவிடம் பாகிஸ்தான் தோற்றது அந்த நாட்டின் தேசிய அவமானமாகக் கருதப்பட்டது.

அந்த அவமானத்தை சிங்கப்பூரில் துடைத்துவிட்டது பாகிஸ்தான் அணி.

இப்போது இந்திய அணிக்கு கௌரவப் பிரச்சனை. அடுத்தது சார்ஜா போட்டி. அங்கு திருப்பிக் கொடுக்குமா இந்திய அணி?

கிரிக்கெட் என்பதும் சூதாட்டம் மாதிரித் தான். வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வரும்.

கிரிக்கெட்டை வைத்து பந்தயம் கட்டி அதனை சூதாட்டமாக நடத்துகிறவர்களுக்கும் அதுதான் மகிழ்ச்சியான செய்தி.

எந்த அணி வெற்றி பெறும் என்று உறுதியாக தெரியாவிட்டால்தான் பந்தயம் சூடுபிடிக்கும்.

சிங்கப்பூர் ஆட்டத்தில் இந்தியா ஜெயிக்கும் என்று பலர் பந்தயம் கட்டியிருந்தார்கள்.

இலங்கையிடம் பாகிஸ்தான் தோற்று, இலங்கையை இந்தியா வெற்றிகொண்டவுடன் இரவோடு இரவாக பலர் பந்தயம் கட்டினார்கள். இந்தியாதான் வெல்லும்.

இந்தியா வெற்றி பெற்றிருந்தால் கட்டிய பணம் பன்மடங்காக கிடைத்திருக்கும். தோல்வி கண்டதால் பந்தய தரகர்களுக்கு பலத்த இலாபம் கிடைத்திருக்கிறது.

## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து நடத்திய தங்கமாலை பரிசுப் போட்டி

முதல் பரிசாக நெக்லஸ் பெற்ற அதிஷ்டசாலியின் பெயர் விபரமும், ஆறுதல் பரிசுகள் பெறும் 50 அதிஷ்ட சாலிகளில் இருபதுபேரின் விபரமும் முன்னரே வெளியாகியுள்ளன. ஏனையோரில் பத்து அதிஷ்டசாலிகள் இவர்கள்-

1. எம். ஸ்ரெலா, 48 ஆசிரியர் சதுக்கம், உவர்மலை, திருகோணமலை.
2. செல்வி. சஜானா றஹீம், 27 மரைக்கார் வீதி, புத்தளம்.
3. பி. சந்திரிகா, 132/181 டி மெல் வத்தை, கிராண்ட்பாஸ், கொழும்பு-14.
4. திருமதி. ஜமால், 94, பி, வத்தே கெதர, பொல்கொல்ல.
5. எம்.சித்திரிகா, தேசிகர் வீதி, காரைத்தீவு-03.
6. கே. தமிழரசி, 107, முதலாம் வட்டாரம், களுதாவளை, மாத்தளை.
7. எம்.எஸ்.சித்தி நிஹாரா, 87 நஸார் மாவத்தை, உடுகொட, ருக்காகவிட்ட.
8. ஏ.டபிள்யூ.எஸ். சலீமா, 377/1, ஏகொட உயன, மோதர, மொரட்டுவ.
9. அ. விமலா, பி. 14/3, காக்கை தீவு, வீடமைப்புத் திட்டம், கொழும்பு-15.
10. செல்வி. சுபத்திரா குமரகுரு, காகித ஆலை குடிமனை, இல.ஜே-06, வாழைச்சேனை.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## தலவாக்கலை வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**ந. விமலராணி**
C/o, C.ஈஸ்வரதாசன், தலவாக்கலை தோட்டம், தலவாக்கலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் ஏப்ரல் 22ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் பகல் 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் வந்து [ஞாயிறு, புதன் தவிர] பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்.

முகவரி: இல 5, காவிந்த பிளேஸ், கிருல்லப்பனை, கொழும்பு-06.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** J

பெயர்:......................
முகவரி:......................
......................
கையொப்பம்:......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 20-04-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# தேன் கிண்ணம்

## கிராமத்துக் கவிதை

கண்ணால பாக்கயிலே
காதுமடல் வேர்க்குதுங்க
பொல்லாத சிரிப்பாலே
என் மனசு வேகுதுங்க!
★
பக்கம் வந்து பேசுதற்கு
ஆசை மனம் ஏங்குதுங்க
நீங்க வந்த போது எந்தன்
தைரியம்தான் தூங்குதுங்க!
★
தூர நின்னு ஜாடை காட்டிப்
பேசாமப் போற மச்சான்!
கன்னி எந்தன் ஆசைகளைப்
புரிஞ்சிக்கவே மாட்டிகளா?
★
பாக்காம இருக்கலாம்னா
பாவி மனம் கேட்குதில்ல
பக்கம் வந்து பேசலாம்னா
பயம் போக விடுகுதில்ல!
★
அப்பனுக்குத் தெரிஞ்சிதுன்னா
ஆட்டைப் போல அறுத்துடுவான்
ஆத்தாவுக்குத் தெரிஞ்சதுன்னா
அகப்பையால பொழிஞ்சுடுவாள்!
★
இத்தனையும் தாங்கிக்கிட்டு
ஒனக்காக ஏங்கையிலே
மழை விழுந்த எருமை போல
பாக்காமப் போறியளே?!
★
ஆம்பிளைக்கு என்ன கொற?
சொல்லிப்புட்டுப் போவீக
பொம்பிளைங்க எங்களத்தான்
அழ வைச்சுப் பாப்பீக!!

எம். சுரேஷ்.

## மின் வெட்டு

சம (மின்) சாரத்தின்
சிறப்பை
உணர்கின்றேன்
இப்போது!
★★★
இலங்கையே
இருண்டு
அஸ்தமித்த
அந்த
ஐந்து மணி
நேரம்!
★★★

அவள்
அருகில்
இல்லையெனில்
அனைத்துமே
இப் பாரில்
பூஜ்ஜியம்!
★★★
என்னிடமிருந்து
அவள்
ஒதுங்கும்
அந்தச்
சில மணி
நேரத்தில்
நானொரு
ஜடம்!
★★★
பெய்யென்றால்
பெய்யுமாம்
மழை.....!
கண்ணே!
கட்டடிக்காதே!

வீரமுனை-
வானவர்கோன்.

## முத்தம்

இரு இதய
சங்கம
ஆரம்பம்!

உயிர் துடிப்பின்
நிசப்தம்!

மன எழுச்சியின்
சாந்தி!

பெற்ற முதலுக்கு
வட்டி கொடுக்க
ஆசைப்படுவது!

ஆளுக்கு ஆள்
அர்த்தப்படுவ!.

காதலரின்
மௌன மொழி!

வயோதிபரின்
ஆசிமொழி!

குழந்தைகளின்
அன்புமொழி!

எண்ணத்தின்
அச்சடிப்பு!

புது உறவின்
ஆரம்பம்!

மனத்திற்கு
கிறக்கம்!

கண்களுக்கு
உறக்கம்!

சிருஷ்டியின்
முதல் வித்து!

சுபா வரன்-கண்டி.

## காதல் செய்ய வேண்டும்

நீ
தாவணியைக் கழற்றி
வீசிவிட்டு
விரல் சூப்பு!
•
நான் எதைக் கேட்டேன்
உன்னிடம்–
இதய இடுக்குகளில்
ஒரு ஓரத்தை தவிர!
•
மடிப்புக் குலையாத
பாவாடை மாதிரி
என்ன செப்பமாய் இருக்குது
உன் இளமை!
•
பெண்ணே..
இந்த வசந்தங்களில்
நீ ஏன்
இலையுதிர்த்துக்
கொள்கிறாய்..?

சுருட்டிப்போட்ட
பாய் மாதிரி
உன் ஆசைகளை
அடக்காதே!
•
அறிந்து கொள்..
பருவப் பள்ளியில்
காதலும்
ஒரு கட்டாயப் பாடம்!
•

சிபி. எம். ஐ. எம். றகீம்,
பொத்துவில்-2.

## யாருக்காக!

காலங்காலமாய்
கவிஞர்கள்
பாடிக்களித்த
மங்கியதோர்
மாலைப் பொழுதும்,
மயக்கந்தரும்
நிலவொளியும்,
முற்றத்து மல்லிகையின்
மொட்டவிழ் வாசமும்...
யாருக்காக.....?
★★★

சாமங்களின்
சங்கதி கூறும்
சேவல்களின் கூவல்களும்,
செக்கச் சிவந்துவரும்
செங்கதிரோனின்
கண் கொளாக் காட்சியும்,
அதிகாலை
மேனி தழுவும்
குளிர் தென்றலும்,
குயிலின் குரலோசையும்,
கோவில் மணியோசையும்,
பூபாளமும்...
யாருக்காக.....?
★★★
சில்லூறுகளும்
சிக்கென்று அடங்கிப்போகும்;
வேட்டொலிகளிடையே;
இன்றிரவு
குப்புற விழுந்துபோன
மனிதப் பிணங்களின்
வெறும் எண்ணிக்கையில்;
தேசாபிமானங்களையும்..
விமோசனங்களையும்...
கணக்கிட்டுத்
திருப்தி கொள்ளும்
இந்த
யுத்த சூதாட்டங்களிடையே!
★★★

கவியூரன்-அக்கரைப்பற்று.

## மௌனங்களால் சபிக்கப்பட்ட வாலிபம்....

காதலின் பெறுமானங்கள்
கடலோரத்து
சாளரங்களை (ப்)போல்
துருப்பிடித்தன–
முற்றும் துறந்த
மௌனங்களால்.
•
பறவை–தன்
காதலிக்காக
எத்தனை–எத்துணை
மின் மினிகளை
சிறைவைத்தது.....
கூட்டில்?
•
அவளோ– (ஏ)தன்
ஆசைகளை
சிறைவைத்து சிதைத்தாள்
வீட்டில்?
•
அந்த வஞ்சியின்
சித்தாந்தங்கள் முழுவதும்
சிந்திக்கிடந்தது–வெறும்
அன்பில்லாத
அழகுதான்.
•
பெட்டைக்கோழி–தன்
முட்டைகளை
மலடாக்கியது போல்;
சுமைகூடிய யாத்திரைகளின்
மௌனங்களால்
சபிக்கப்பட்டது
வாலிபம்!

"வளர்மதி அஸ்லம்"
(பொத்துவில்-02)

## சந்தேகம்...

எந்த வைரசுமில்லாமல்
பரவும்–
பொல்லாத புற்றுநோய்...!
•••
சிறு 'வால்' துண்டோடு
மட்டும்
இட்டுக்கட்டப்படும்
இதயங்களுக்கிடையிலான
நூலில்லாபட்டம்!
•••
'கேள்வி'க் கொக்கிகள்
கொழுவிக்கிழிக்கும்
'ஆப்பு' வைக்க முடியாத
அவஸ்தை..!
•••
யுத்த 'ஓமோன்' களைக்கூட
சுரந்துவிடக்கூடிய
ஒரு கபச்சுரப்பி!
•••
வதந்தி குண்டுகளால்
வர்மம் வளர்க்கும்
ஊழித்தீ..!
•••
கண்களில்
கலப்படமாகிவிட்டால்...
கயிறுகூட–
பாம்பாய் பலிக்கும்,
கொசுக்கடி கூட
தேள்கடியாய் வலிக்கும்.
•••
மனசை மாரடிக்க
இதயமரத்தடிக்கு
இறங்கும்
இதுகூட. ஒரு பேய்!
•••
என்–காதல் உறவுக்கு
'உயில்' விருது கொடுத்து
கௌரவப் படுத்திக்கொள்ள (?)
அவளால் போர்த்தப்பட்ட
பொன்னாடை..!
•••

பாணகமுவ-எஸ். முஸ்தாக், குருநாகல்.

# சிவபார்வதிக்கு முதல்வர் நாற்காலி

இந்தியத் தேர்தல் சுயம்வரம் ஆரம்பமாகிவிட்டது.

வேட்பாளர்கள் வெற்றித் தேவதை யாருக்கு மாலை சூட்டப் போகிறாளோ என்ற துடிப்போடு கழுத்தை நீட்டத் தயாராக இருக்கிறார்கள்.

திருவாளர் பொதுஜனம் யார் யாருக்கெல்லாம் மாலையிடச் சொல்கிறாரோ அவர்களுக்குத்தான் வெற்றித்தேவதை மாலை சூட்டுவாள்.

திருவாளர் பொதுஜனத்தின் முடிவு முன்கூட்டியே திட்டவட்டமாக கணித்தறியக் கஷ்டமானதுதான்.

ஆனாலும், ஆந்திராவில் முன்கூட்டியே முடிவு தெரிகிறது. திருவாளர் பொதுஜனத்தின் நாடித்துடிப்பு புரிகிறது.

அடுத்த முதல்வர் சிவபார்வதிதான்!

மாலை அவர் கழுத்திலேதான்!

சட்டமன்றத் தொகுதிகளில் மட்டுமல்ல, ஆந்திராவின் நாடாளுமன்றத் தொகுதிகளிலும் அமோக ஆதரவு தெலுங்குதேச கட்சிக்குத்தான்.

முரசுக்கு கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் ஆந்திர மக்கள் லேடி ராமராவுக்குத்தான் முதல்வர் நாற்காலியைத் தரப்போகிறார்கள்.

தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆரின் பின்னர் அவரது இரசிகர்களில் அண்ணி என்று அழைக் கப்பட்ட ஜெயலலிதா தேர்தலில் வென்று முதல்வரானார்.

ஆந்திராவிலும் என்.டி.ஆரின் இரசிகர்களால் அண்ணி என்றழைக்கப்படும் சிவபார்வதி முதல்வராகப் போகிறார்.

ஜெயலலிதாவால்கூட உடனே ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. ஒரு முறை தோல்வியில் விழுந்துவிட்டுத்தான மறுமுறை எழுந்து ஆட்சியைப் பிடித்தார்.

ஆனால் சிவபார்வதி......!

முதல் தேர்தலிலேயே முதல்வர் நாற்காலியில் உட்காரப்போகிறார். ●



# கடைசிப் படம்



என்.டி.ராமராவும், லட்சுமி சிவபார்வதியும் பல புகைப்படங்களுக்கு சேர்ந்து போஸ் கொடுத்திருக்கலாம். ஆனால் இந்தப்படம்தான் கடைசியாக இணைந்து போஸ் கொடுத்த படம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்ட கதை சுவாரசியமானது.

பம்பாயைச் சேர்ந்த புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் ராமராவ் மரணம் அடைவதற்கு முன்னர் இப் புகைப்படத்தை எடுத்தார்.

புகைப்படம் எடுத்துக்கொள்ள முதலில் ராமராவ் மறுத்துவிட்டார். உடனே புகைப்படப் பிடிப்பாளர் சிவபார்வதியிடம் முறையிட்டார். சிவபார்வதி ராமராவிடம் சிபாரிசு செய்தார்.

"என்னங்க நீங்க. எவ்வளவு நேரமா அவர் படம் எடுக்க கேட்டுக்கிட்டு இருக்கார். இப்பவே நீங்க இவ்வளவு பிஸியா இருக்கீங்க. நாளைக்கு பிரதமர் ஆயிட்டா.. நமக்கு இதுக்கெல்லாம் கொஞ்சம்கூட நேரம் கிடைக்காது. வாங்க சேர்ந்து போஸ் கொடுக்கலாம்," என்றார் சிவபார்வதி. கூலாகிவிட்டார் ராமராவ். சிரித்தபடியே ஆதரவாளர் ஒருவர் போட்ட மாலையோடு சிவபார்வதியை அணைத்தபடி போஸ் கொடுத்தார். 'கிளிக்!'

போஸ் கொடுத்தபோது 'இதுதான் கடைசிப்படம்' என்று எங்கே தெரிந்திருக்கப் போகிறது?! ●

## அத்தி பூத்தாற் போல

இருந்த வெள்ளத்தையும்
வந்த வெள்ளம்
கொண்டு
சென்றது போல,
இருந்த
அமைதியையும்
கொண்டு சென்றது
இடைக்கால
சமாதானம்!
★★★★
இறால் போட்டு
சுறா
பிடிப்பது போல!
எஞ்சிய உயிரையும்
அடித்துச் சென்றது
யுத்த மேகம்!
★★★★
மிஞ்சிய மொட்டுக்களையும்
சிறுவர்கள்
பறித்தது போல,
இருந்த...
நப்பாசையையும்
வீழ்த்தி விட்டனர்
நம்
அரசியல் வாதிகள்!
★★★★
அத்தி
பூத்தாற் போலாவது
தோன்றுமா
அமைதிப் புறா?

எஸ். ஸ்ரீ-மன்னம்பிட்டி.

## வரட்சிக் "காலம்"

வானம்
அழுது கொண்டிருந்த
வரைக்கும்,
வயலகளோடு
நாங்கள் சிரித்தோம்...
இப்போது
வானம் சிரிக்கிறது;
நாங்கள்
அழுது
கொண்டிருக்கிறோம்!!

## காணவில்லை

பார்த்திட்ட..
முதல் பார்வையில்
இதயத்தை
கொள்ளை கொண்ட
இளஞ்சிட்டை
காணவில்லை....!
★★
விஷேட
லட்சணங்கள்...!
★★
மறு நாள்
பௌர்ணமி;
மகிழ்ந்திருக்கும்
முழு நிலவுபோல..
முகம்...!
★★
அரைத்து வைத்த..
சந்தனத்தில்
இலேசாக..
குங்குமம் கலந்த
நிறம்..;
★★
வெண்ணெய்
கட்டியின் மீது
எள் பதித்த மாதிரி
மூக்கினில் ஒரு
மச்சம்...
★★
பரவி நிற்கும்
வெள்ளத்தில்
ஆடி நிற்கும்
நீர்க் குமிழி போல;
இடது பக்க
புன் சிரிப்பில் குழி...!
★★
தோள் வழியே
தொங்கி நிற்கும்
செங்கரும்பு
வர்ணத்தில்
பின்னலிட்டிருக்கும்
கூந்தல்...!
★★
தெரிந்தவர்கள்
தகவல் தரவும்:
"காதல் செயலகம்.."
காத்திருப்பு வீதி
ஏமாற்றம் –1
★★

என்-சஹாப்தீன்,
ஒட்டமாவடி.

# இந்த வாரம் உங்கள் பலன்

( 14.04.96 முதல் 20.04.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மேன்மை, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| திங்கள்- உயர்ந்த எண்ணம், ஆடம்பர வாழ்க்கை. | மு.ப. | 9 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, அந்நியர் சிநேகம். | பி.ப. | 1 மணி |
| புதன்- வீண் முயற்சி, மனக்கவலை. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், பணவரவு. | காலை | 6 மணி |
| சனி- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2· மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மனக்கிலேசம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- வீண் பிரயாணம், மனக் கவலை. | காலை | 7 மணி |
| புதன்- காரியசித்தி, பொருள் வரவு தடை. | பகல் | 12 மணி |
| வியாழன்-அந்நியர் உதவி, கௌரவக் குறைவு. | காலை | 7 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மன மகிழச்சி. | பி.ப. | 1 மணி |
| சனி- காரியத்தடை, பணச்செலவு. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பணச் செலவு. | பகல் | 12 மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், மனப்பயம். | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, மனக்கவலை. | காலை | 6 மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| வியாழன்- இனசன விரோதம், மனக்கிலேசம். | காலை | 7 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், பணவரவு. | பகல் | 12 மணி |
| சனி- முயற்சி பலிதம், காரியானுகூலம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- காரியத்தடை, மனக்கிலேசம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. | 1 மணி |
| புதன்- புதிய முயற்சி, பணச் செலவு. | காலை | 6 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வெள்ளி- விண் குறை கேட்டல், காரியத்தடை. | காலை | 6 மணி |
| சனி- வெளியிடப்பயணம், மனச்சோர்வு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- வெளியிட பிரயாணம், மன மகிழச்சி. | காலை | 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | மு.ப. | 9 மணி |
| புதன்- பயனுள்ள செயல், இனசன நன்மை. | காலை | 7 மணி |
| வியாழன்-உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் | 12 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், தொழில் விருத்தி. | மு.ப. | 9 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன். |
| இடபம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது, செவ்வாய். |

சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச்செலவு. | காலை | 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், குடும்பக் கவலை. | காலை | 6 மணி |
| புதன்- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வியாழன்- வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணவரவு. | காலை | 7 மணி |
| சனி- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவுமிகுதி. | காலை | 7 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், பணக்கஷ்டம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை | 6 மணி |
| புதன் - துயர் நீங்கும், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, கௌரவமிகுதி. | காலை | 7 மணி |
| சனி- பொருள் வரவு, ஆடம்பரச் செலவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| திங்கள்- காரியானுகூலம், பணவரவு. | காலை | 6 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| புதன்- துயர் நீங்கும், அந்நியர் உதவி. | காலை | 7 மணி |
| வியாழன்-உறவினர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மனமகிழச்சி. | மு.ப. | 9 மணி |
| சனி- அந்நியர் உதவி, புகழ்வந்து சேரல். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனச் சந்தோஷம். | காலை | 6 மணி |
| செவ்வாய்- வீண் கலக்கம், பணவரவு. | பி.ப. | 2 மணி |
| புதன்- தொழில் விருத்தி, இனசன நன்மை. | மு.ப. | 9 மணி |
| வியாழன்-துயர் நீங்கும், காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| சனி- தொழில் மந்தம், முயற்சி பலிதம். | மு.ப. | 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் | 12 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக்கலக்கம். | காலை | 7 மணி |
| செவ்வாய்- வீண் குரோதம், மறைமுக எதிர்ப்பு. | பகல் | 12 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை | 7 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், பொருள் இழப்பு. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, மனக்குறை நீங்கும். | மு.ப. | 9 மணி |
| சனி- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| திங்கள்- மனமகிழ்ச்சி, பணக்கஷ்டம் தீரல். | மு.ப. | 9 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | காலை | 7 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- காரியசித்தி, பொருள் வரவு. | காலை | 6 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, உயர்ந்த நிலை. | காலை | 10 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, பணக்கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- வீண் குறை கேட்டல், பணவிரயம். | காலை | 7 மணி |
| சனி- தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5





# சிறுவனும் கிளியும்

**சிறுவன்**

பாலைக் கொண்டு தருகின்றேன்,
பழமும் தின்னத் தருகின்றேன்,
சோலைக் கோடிப் போகவழி
சுற்றிப் பார்ப்ப தேன்கிளியே!

காட்டி லென்றும் இரை தேடிக்
களைத்திடாயே உனக்கிந்தக்
கூட்டில் வாழும் வாழ்வினிலே
குறைகளேதும் உண்டோசொல்?

**கிளி**

சிறையில் வாழும் வாழ்வுக்குச்
சிறகுப் படைத்து விடுவானோ?
இறைவன் அறியாப் பாலகனோ?
எண்ணி வினைகள் செய்யானோ...?

பாலும் எனக்கு தேவையில்லை;
பழமும் எனக்கு தேவையில்லை;
சோலை எங்கும் கூவிநிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா...!

தொகுப்பு:-எம்.இஸட்.எ.ஃப். ஜெஸீமா, கண்டி.

பொய்மை இகழ்!
போர்த் தொழில் பழகு!
மந்திரம் வலிமை! மானம் போற்று!
மிடிமையில் அழிந்திடேல்!
மீளுமாறு உணர்ந்து கொள்!
முனையிலே முகத்து நில்!
மூப்பினுக்கு இடங்கொடேல்!
-சுப்பிரமணிய பாரதியார்.

**பாப்பா முரசு சிறுகதை**

# கொசுவின் தலைக்கனம்



ஒரு காட்டில், சாப்பிட்டுவிட்டு ஓய்வாகப் படுத்திருந்த சிங்கம் ஒன்றைப் பார்த்து, "உலகிலேயே பலசாலி யார்?" என்று கேட்டது கொசு.

சிங்கம் இரண்டு காதுகளையும் விடைத்தபடி கொசுவை வெறித்துப் பார்த்தது.

"என்ன காட்டு ராஜாவே! பதிலைக் காணோம்" என்று கேலியாகக் கேட்டது கொசு.

"பல கோடி ஆண்டுகளுக்கு முன் டைனோசர் என்றொரு மிருகம் உலகில் வசித்தது. மிகவும் பலம் வாய்ந்த அந்த மிருக இனம் இப்போது அழிந்து விட்டது. அந்த மிருகத்திற்கு அடுத்து, உயிரினங்களிலேயே மிகுந்த பலசாலி நான் தான்," என்றது சிங்கம்.

இதைக் கேட்டுக் 'கொல்'லென்று சிரித்த கொசு, "நீங்கள் பலசாலியா?" என்று கேட்டு விட்டு மறுபடியும் சிரித்தது.

"நான் இல்லாமல் பிறகு யார்? நீயா?" என்று கோபமாகக் கேட்டது சிங்கம்.

"காட்டு ராஜாவே! அந்த டைனோசர்களுக்கு எங்கள் மூதாதையர்கள் எவ்வளவு தொல்லை கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு ஏன்? மனிதர்கள் எங்களைக் கண்டால் எப்படிப் பயப்படுகிறார்கள் தெரியுமா?" என்று இறுமாப்புடன் சொன்னது கொசு.

"ஏய் அற்பப்பூச்சியே! உலகில் நீ பலசாலியா? இப்போது பார் உன்னை ஒரே அடியில் கொன்று விடுகிறேன்," என்று கூறித் தனது முன்காலால் கொசுவுக்கு ஒரு அடி அடித்தது சிங்கம்.

விய்ங்கென்று பறந்தது கொசு.

கொசு தப்பி விட்டதை உணர்ந்த சிங்கம் ஆக்ரோஷத்துடன் உடலைச் சிலிர்த்து எழுந்தது. தன் முன்னே பறந்து கொண்டிருந்த கொசுவை நோக்கி மீண்டும் காலை வீசியது.

கொசு இம்முறையும் தப்பி சிங்கத்தின் முகத்தில் அமர்ந்து கொண்டது. முகத்தில் இருக்கும் கொசுவுக்குத் தனது முன்னங் காலால் ஓங்கி ஒரு அடி அடித்தது சிங்கம்.

கொசு விலகி விடவே, அந்த அடி சிங்கத்திற்குப் பலமாகப் பட்டு மூக்கிலிருந்து இரத்தம் வந்தது.

அப்போது சிங்கத்தின் முன் பறந்து வந்த கொசு.

"பிறரை வதைப்பதற்குத்தான் என் இனம் அவதாரம் எடுத்துள்ளது. இப்போதாவது எனது பலத்தைப் பற்றித் தெரிந்து கொண்டிருப்பீர்களே. நான் தான் உலகிலேயே பலசாலி," என்று மேலும் கீழுமாகப் பறந்தது கொசு.

இப்படி மேலும் கீழுமாகப் பறந்து கொண்டிருந்த கொசுவின் இறக்கைகள் எதிலோ போய் ஒட்டிக் கொள்ள,

'அடடே! ஏதோ சிலந்தி வலையில் ஒட்டிக்கொண்டு விட்டோம் போலிருக்கிறதே!" என்று உணர்ந்ததும் திகிலில் உறைந்தது கொசு.

கால்களை உதைத்தபடி அது தப்ப எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாயின.

தன் வலையில் ஒரு இரை வந்து மாட்டிக் கொண்டது என்பதை, வலையின் அசைவில் இருந்து தெரிந்து கொண்ட சிலந்தி, துடித்துக் கொண்டிருந்த கொசுவைப் பிடித்தது.

இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சிங்கம், துடி துடித்துக் கொண்டிருந்த கொசுவைப் பார்த்து,

"வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் இருப்பான். உன் திமிருக்கும், தலைக் கனத்திற்கும் இதுதான் சரியான தண்டனை!" என்றது.

# வாரம் ஒரு நாடு

## மான்செராட்

தலைநகர் – பிளைமவுத்
பரப்பு– 102 சதுர கிலோ மீட்டர்
மக்கள் தொகை – 12,900
மொழி – ஆங்கிலம், படோய்
சமயம் – கிறிஸ்தவம்
நாணயம் – கிழக்கு கரிபியன் டொலர்
தனி நபர் வருமானம் – 3,127 டொலர்.

**அமைவிடம்:**
மான்செராட், லீவர்ட் தீவுகளில் ஒன்று.

**வரலாறு:**
கொலம்பஸ் 1493 இல் இதைக் கண்டு பிடித்தார். பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்தது. கவர்னர் பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியாக தலைமை அதிகாரம் செய்கிறார். இதன் மக்கள் தொகை ஐரோப்பிய நீக்ரோ இனப்பரம்பரையினரைக் கொண்டது. ஐரோப்பியர் சிறுபான்மையினர்.



**பொருளாதாரம்:**
விவசாயம் முக்கிய தொழில். பருத்தி, காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.


# எக்ஸ்–ரே

**★ எக்ஸ்-ரே கதிர்களைக் கண்டுபிடித்தது யார்?**

கோன்ராட் ரொண்ட் ஜென்ட்

**★ எப்போது இதைக் கண்டு பிடித்தார்?**

ரொண்ட் ஜென்ட் 1895ம் ஆண்டு நவம்பர் மாதம் கேத்தோடு கதிர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டு இருந்தார். அப்போது குழாய் மின் விளக்குத் திரை திடீரென்று தகதகவென மின்ன ஆரம்பித்தது. எந்த



ஒளியையும் திரையில் செலுத்தாத போது இத்திரை மின்னுகிறது என்றால் கண்ணுக்குத் தெரியாத இன்னும் ஒரு கதிர் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தார். அதுதான் 'எக்ஸ்' கதிர்.

**★ இதற்கு ஏன் எக்ஸ் கதிர் என்று பெயர் வைத்தார்?**

இது என்ன கதிர் என்று அவருக்கே தெரியாததால் எக்ஸ் கதிர் என்று பெயர் வைத்தார். பின்னர் அவரோடு பணிபுரிந்த இன்னொரு விஞ்ஞானி அக்கதிர்களுக்கு ரொன்ஜென்ட் கதிர்கள் என்று பெயர் வைத்தார்.


**★ எக்ஸ் கதிர்கள் அதன் அலைவரிசைப்படி எத்தனையாவது இடத்தில் இருக்கிறது?**

அல்பா, பீட்டா, காமா கதிர்களுக்கு அடுத்த இடத்தில் இந்த எக்ஸ் கதிர் இருக்கிறது. எக்ஸ் கதிருக்கு அடுத்து புற ஊதா கதிர்கள் வருகின்றன.

**★ எக்ஸ் கதிரின் சிறப்பு என்ன?**

ஒளி புகாத இடத்திலும் ஊடுருவிச் செல்லும் சக்தி வாய்ந்தது இந்த எக்ஸ் கதிர்கள். அதனால் தான் எமது உடலின் உள் உறுப்புக்களை படம் பிடிக்க பயன் படுத்துகிறார்கள். இது மட்டுமன்றி ஒளி ஊடுருவ முடியாத மரம், உலோகம் போன்றவற்றிலும் ஊடுருவ வல்லது இந்த எக்ஸ் கதிர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20.04.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 137
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 135


**பரிசுக்குரியவர்:**
செல்வன். ஜெ. ஆனந்தகுமார்.
கிருல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு-05.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| தினேஸ் அன்ரன். 155/2 ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13. | த. கீதாரமணி தயாநிதி. இல. 24 நிமால் வீதி, கொழும்பு-04. |
| எம்.எம். முஹம்மது அனீஸ். பாரீஸ் மன்ஸில், புன்னக்குடாவீதி,ஏறாவூர்-03. | செல்வி. எஸ். சிந்துஜா. சென் கிளேயர் மகாவித்தியாலயம், கொழும்பு-06. |
| தர்ஷினி இராமசாமி. அப்புத்தளை எஸ்.பி.சி., அப்புத்தளை. | பாத்திமா ஹிபாஸா. களு/ சாஹிரா மகா வித்தியாலயம், தர்கா டவுன். |
| செல்வி. ஜனனி சிவநாதன். பது/ சார்ணியா த.ம.வி, கந்தேகெதரை. | செல்வன். ஆர். பிரசாத். இரஜவெல்ல த.ம.வித்தியாலயம், இரஜவெல்ல. |
| எம். ரேணுகா. விஜயரத்தினம் இந்துமத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | செல்வி. வினோதா புஸ்பராஜ். நஸ்ரியா மகா வித்தியாலயம், சிலாபம். |

# அணில்

அணில் ஒரு குட்டி மிருகம். மொசு மொசுவென வாலுடன் இருக்கும் இதைக் கிரேக்கர்கள் 'ஸ்குரில்' என்று அழைத்தனர். 'ஸ்குரில்' என்றால் நிழல் வால் என்று அர்த்தம்.





மரப் பொந்துகளிலோ, தரையிலோ அணில் வசிக்கும். தனது கூட்டில் காய்ந்த சருகுகளைப் போட்டுச் சுகமான படுக்கையை தயார் செய்து கொள்ளும்.



பாலைவனத்தில் வசிக்கும் அணில், வறட்சி காலத்தில் பூமிக்கு அடியில் வாரத்தில் ஐந்து நாட்கள் தூங்கிக் கொண்டிருக்கும். இதன் மூலம் தன்னை வெய்யிலில் இருந்து காப்பாற்றிக் கொள்ளும்.

பழங்கள், காளான், விதைகள், சிறுசிறு பூச்சிகள் போன்றவற்றை அணில் உணவாகக் கொள்ளும். அணிலின் நீண்ட முன்பற்கள் கடுமையான உணவுப் பொருட்களைக் கூட கொறித்துத் தின்ன வசதியாக இருக்கின்றன.

அணிலின் எதிரி மனிதர்கள் தான். விளையாட்டிற்காகவும், அதன் தோலுக்காகவும், மாமிசத்திற்காகவும், மனிதன் அணிலை வேட்டையாடுகிறான். நாய், பூனை, நரி, பாம்பு, கழுகு ஆகியவை இதன் மற்ற எதிரிகள்.

அவுஸ்திரேலியா, மடகாஸ்கர், தென் அமெரிக்காவின் தென்பகுதிகளைத் தவிர உலகம் முழுவதும், அணில்கள் காணப்படுகின்றன. அணில்கள் காட்டில் இரண்டு முதல் ஆறு ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

# விடுகதைகளும் விடைகளும்

1. ஊர் உண்டு மக்களில்லை; மலை உண்டு மரங்களில்லை; ஆறுண்டு நீரில்லை; அணையுண்டு கல்லில்லை; வழியுண்டு வாகனமில்லை; அது என்ன?
2. முகத்தை மூடினேன், கிணற்றில் தள்ளினேன், உயிரில்லா விட்டாலும் ஓடினான் தூரம், சென்ற இடத்தில் செய்தியும் சொன்னான், அவன் யார்?
3. வாயில்லை புத்திமதிகள் சொல்வான்; காலில்லை கடல் கடந்தும் செல்வான்; உயிரில்லை ஒரு நாளும் சாகமாட்டான். அவன் யார்?
4. கருமை நிறமுடையது காகம் அல்ல; இனிய குரல் உண்டு குயிலும் அல்ல; நம் எதிரில் சுற்றி வரும், நாயும் அல்ல; பெட்டியில் அடங்கி விடும் பாம்பும் அல்ல. அது என்ன?

**விடைகள்**

1. தேசப்படம் 2. கடிதம் 3. புத்தகம் 4. ரெக்கோடர்

தொகுப்பு: எம். உஷா

# குக்கூ ஷ்ரீக்



குக்கூ ஷ்ரீக் எனப்படும் இப்பறவை ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா மற்றும் பசுபிக் தீவுகளில் வாழ்கிறது. இந்துப் பறவைக்குக் கொத்தாக இறகுகள் இருக்கும். இவை இலகுவாகக் கொட்டி விடும் தன்மை வாய்ந்தது. நீளமான வால் போல் இந்த இறகுகள் இருப்பதால், பின்னால் இருந்து தாக்கும் இப் பறவையின் எதிரிகள் இதன் வாலை வேகமாக வந்து பிடிக்கும். அப்போது இந்தக் குக்கூ என்ன செய்யும் தெரியுமா?

சில இறகுகளை உதிர்த்து விட்டு பறந்து தப்பிக்கொள்ளும்.



ஓட்டல் வருக' என்ற நியான் சைன் விளக்கு கும்பிட்டது.

"யாரும் கவனிச்சிருக்க மாட்டாங்களே சார்?" அச்சமாக கேட்டான் வரதராஜன். "ஒருத்தருக்கும் தெரிந்திருக்காதில்லையா?"

"எப்படித் தெரியும்? அது தான் ஆபீஸிலேயே உன்னை கிழவனாக்கிக் கூட்டிட்டு வந்துட்டோமே." ஜென்னி சொன்னாள். "காரணமில்லாம பயப் படாதே சிறுவனே! தப்பும்மா."

"என் சினேகிதனுங்க எங்கே? வர வில்லையே?"

"ஏன் அவங்க நடமாட்டம்? உன்னை உன் எதிரிக்குக் காட்டிக் கொடுக்கவா? நான் தான் வரக்கூடாதுன்னு சொல்லி விட்டேன். கூடவே விசாரிச்சேன். உனக்கு வந்த மாதிரி அந்த 'ஜோதி' குரல் டெலிபோன் வந்ததான்னு. இல்லையாம்."

"அப்படியானால்?"

"பார்ட்டியில அவங்க இரண்டு பேரும் பார்க்காத ஏதோ ரகசியத்தை நீ பார்த்திருக்கறதாத்தான் அர்த்தம் வருகிறது. என்ன பாஸ் சொல்றீங்க?"

"அதே."

"அப்படி வித்தியாசமானதாக எதைப் பார்த்தாய் சிறுவனே?"

"அப்படி எதுவும் பார்த்ததாக கவன மில்லையே மேடம்!"

"பார்த்திருக்கே. அந்த ரகசியம் உன் மூலமாக எங்கேயாவது கசிந்து போகுமோ என்கிற பயத்தினால்தான் உன்னைத் தீர்த்துக் கட்டப் பார்க்கிறாங்க. கொஞ்சம் நினைவைக் கசக்கிப் பாரேன்."

"ஆனால் போனில் ஜோதின்னு சொன்னாளே."

"அது பிரச்சினையில்லே. நான் கூட இந்திராகாந்தின்னு போனில் பேச முடியும். அதுக்காக செத்தவங்க பேசினதாக நினைப்பாயா என்ன? அது வேறு பெண்ணாக இருக்கலாம். இல்லே அந்தக் குற்றவாளியின் கையாளாகவுமிருக்கலாம்."

"ஆமாம் டியர்." ராஜா சொன்னான்; "எப்படித்தான் கூட்டிக் கழிச்சுப்பார்த்தாலும் அந்த நெக்லஸ் திருட்டை இவன் பார்த்திருக்கணும்னு அவங்க முடிவு செய்திருக்க வேணும். அந்த திருட்டு பார்ட்டி ஹாலிலேயே நடந்திருக்க வேணும். இவன் மட்டும் பார்த்தது குற்றவாளிக்கு புரிந்திருக்கணும். அதனால் தான் குறிப்பாக இவனையே தீர்த்துக் கட்டறதிலே இருக்கிறாங்க."

வரதராஜன் மேலும் முயன்றுபார்த்தான் "அப்படி எதுவுமே ஞாபகத்துக்கு வர மறுக்கிறதே!"

"யோசிச்சுப் பாருப்பா..." ஜென்னி அதட்டினாள். "பார்ட்டி ஆரம்பமானதிலிருந்து நடந்த ஒவ்வொன்றையும் நினைச்சுப்பார். மனசுக்குள்ளே அசைபோடு. தப்பாக இருந்தாலும் பரவாயில்லே. மனசில் பட்டதை உடனே சொல்."

"ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது."

"என்ன? என்ன?"

"நான் முதல் முதலாக அந்த ஜோதியை பார்க்கிறப்ப அவளோட பை எதிரேயிருந்த குட்டை மேஜை மேலே அவள் கைக்கெட்டற தூரத்தில் தானிருந்தது. இப்ப நல்லாவே ஞாபகம் வுருகிறது."

"அதை யாராவது எடுத்தார்களா? அட்லீஸ்ட் எடுக்க முயற்சியாவது செய்தாங்களா?"

"ஸாரி. நான் அந்தப் பெண்ணையே பார்த்துக்கிட்டிருந்ததினாலே வேறயார் செயலையும் கவனிக்கல்ல. ஸாரி மேடம்!"

"பார்ட்டிக்கு வந்தவங்களையாவது அடையாளம் சொல்லமுடியுமா? யோசிச்சு பதில் சொல்லு."

"யோசிக்காமலே சொல்ல முடியும். அதுதான் அவங்க வீட்டுக்கு நான் போகிற முதல் பார்ட்டியானதினால யாரையுமே எனக்குத் தெரியாது."

"உன் சினேகிதர்களுக்கு?"

"அவங்களும் என்னோட வந்தவங்க தான். அவங்களுக்கும் தெரிய வாய்ப்பே யில்லை."

"இருந்தாலும் பரவாயில்லே. மறுபடியும் தொடர்ந்து யோசி. ஏதாவது சின்ன அடையாளமாவது ஞாபகத்துக்கு வரணும்."

"இரு ஜென்னி! அவனை யோசிக்க விட்டுட்டு வா. நாம வேறே ஒரு குறுக்குப் பாதையிலே முயற்சி செய்து பார்க்கலாம்..."

"என்ன பாதை?"

"பார்ட்டி கொடுத்த அம்மாவைக் கேட்டா பார்ட்டிக்கு வந்தவர்களைப் பற்றி பெயர் பட்டியலோட கிடைக்குமே! அது கூட இவனுக்கு உதவலாம். அதிலே ஏதாவது பேரை யாராவது கூப்பிடப் போக அது இவன் காதில விழுந்திருக்கலாமே!"

"வாவ்! இட் இஸ் ஏ குட் ஐடியா. திருக்குமரனை இங்கேயே காவலிருக்க விட்டுட்டு நீங்களும் நானுமே போய் வரலாம் டார்லிங்."

"ஒரு நிமிஷம் பொறு! இவனை ஒரு கேள்வி கேட்டுட்டு வரேன். ஏன் தம்பி! அந்த விருந்துக்கு வரச்சொல்லி அந்தம்மாவேயா உனக்கும் உன் சினைகிதங்களுக்கும் அழைப்பு கொடுத்தாங்க?"

"இல்லே. அந்தம்மாவோட மானேஜர் தான் கொடுத்தார். அது மட்டுமில்லே சார். இன்விட்டேஷன் இருக்கிறவங்க அத்தனை பேரையும் உள்ளே அனுமதிச்சாங்க. வேற யார் இன்விட்டேஷனைக் கூட பயன்படுத்தியிருக்கலாம்."

"சரி வா. அதையும் ஆராய்ந்து பார்க்கலாம் கமான்."

♥ ⊸ ✚ ❑ ✍

"அவர் வண்டியா அது?" இன்ஸ்பெக்டரால் இன்னமும் நம்ப முடியவில்லை. மதுக்கடை ஆள் தந்த நம்பருள்ள மோபைக் அழகு சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனத்துக்குச் சொந்தமானது. அந்தக் கம்பெனியின் உரிமையாளர் ஒருபெண். பெயர் அபிராமி. அபி என்று தான் அழைக்கப்படுவாள்; பணக்காரி.

## திகில்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

தனது சேல்ஸ் ரெப்ரசென்டேடிவ்கள் ஆபீஸ் நேரத்தில் பயன்படுத்த ஒரு டஜன் மோ-பைக்குகளை ஒரே சமயத்தில் வாங்கி ஒரே நாளில் ரிஜீஸ்டரும் ஆகியிருக்கிறது.

அந்த அழகு சாதன தயாரிப்பு ஆலைக்குப் போனார் இன்ஸ்பெக்டர் வேதநாயகம்.

வரவேற்பறையில் அந்தப் பெண் சிரித்தமுகமாக வரவேற்றாள். "உங்களுக்கு என்ன உதவி செய்யட்டும் சார்?"

"உங்கள் மானேஜிங் டைரக்டரைப் பார்க்க வேண்டும்."

"ஸாரி சார்! அவங்க ஊரில் இல்லை. அப்படியேயிருந்தாலும் முன் அனுமதி நேரம் வாங்காமல் பார்ப்பது கஷ்டம். நீங்கள் எங்கள் நிர்வாகியைச் சந்தித்துப் பேசலாமே."

"ம்..ம்..சரி."

"ஒரு நிமிஷம் உட்காருங்க சார்." இண்டர்காம் கருவியை இயக்கியவாறு இவர் பெயரைக் கேட்டாள். "உங்க பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?"

சொன்ன உடனே அந்தப் பெண்,

"மானேஜர் சார்! மிஸ்டர் வேதநாயகம் என்கிற இன்ஸ்பெக்டர் உங்களைப் பார்க்க விரும்புகிறார்."

"அனுப்பு."

"நேரே போய் வலப்பக்கமாகத் திரும்பினால் முதல் அறை. பெயர் சாம்பமூர்த்தி, போர்டு போட்டிருக்கும்."

நன்றி கூறிவிட்டு நடந்து போய் கதவைத் தட்டினார். பதிலுக்கு அழைப்பு மணி ஒலித்ததும் உள்ளே போனார்.

அறிமுகங்களுக்குப் பிறகு கேட்டார் மானேஜர்: "என்ன உதவி செய்யட்டும் உங்களுக்கு?"

"இந்த நம்பர் மோட்டார் பைக் உங்களுடையது தானே?"

"என்னுடையதில்லை. எங்கள் கம்பெனியுடையது. இதோடு சேர்த்து இன்னும் ஒரு டஜன் மோ-பைக்குகள் உண்டு. கம்பெனி ரெப்ரசன்டேடிவ்கள் ஆபிஸ் விஷயமாக போக வர பயன்படுத்துவார்கள். சாயங்காலமானால் கொண்டு வந்து ஷெட்டில் விட்டு விடுவார்கள்."

"ஏன்?"

"வீட்டுக்கு எடுத்துப் போகக் கூடாது என்கிறது கம்பெனி விதி. எடுத்துப் போக அனுமதியில்லை. தவறிப்போய் கொண்டு போனால் அதற்கு தண்டனை கடுமையானதாக இருக்கும்."

"ஸோ, மாலையிலிருந்து காலை வரை கண்டிப்பாக இங்கே தானிருக்கும் என்கிறீர்கள்."

"இருந்தேயாக வேண்டும்."

இன்ஸ்பெக்டர் கொஞ்சமாகக் குழம்பினார்.

(அப்படியானால் அந்த மதுக்கடை ஆள் அதெப்படி ராத்திரி நேரத்தில் வண்டி வந்ததாக சொன்னான்?)

"கராஜுக்குப் போய்ப் பார்க்கலாமா?"

"இப்பவா? வண்டியெல்லாம் வெளியே போயிருக்குமே!"

"பரவாயில்லை, சும்மா இடத்தைப் பார்க்கத்தான் ஆசைப்பட்டேன். வாங்க." என்று எழுந்து கொள்ளவே- அந்த மானேஜரும் எழ வேண்டி வந்தது.

இவர்கள் கராஜுக்குப் போன போது கிழட்டு காவல் ஆள் நின்று கொண்டிருந்தான். காதும் கேளாத கண்களும் தெரியாத கிழட்டு நாய் ஒன்று அவனையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

இரண்டொரு மோ-பைக்குகள் நின்றிருந்தன. அதில் ஒன்று இவரிடமிருந்த அதே நம்பர் பிளேட்டைத் தாங்கியிருந்தது.

நெருங்கிச் சென்று ஆராய்ந்தார். சாவியில்லாமல் அதை யாரும் இயக்கிவிட முடியாது. வொயர்களை வைத்து முயன்றதற்கான அறிகுறிகள் எதுவுமே காணப்படவில்லை.

"அசல்-அல்லது மாற்று சாவி வைத்து தான் இயக்கிப் போயிருக்க வேண்டும்."

"ஒரு வேளை செத்துப் போன ஆள் உங்கள் ஆபீஸில் வேலை செய்கிறவனோ?"

"இருக்காதே சார்! காலையில் கூட அட்டென்டென்ஸை வாங்கிப் பார்த்தேன். எல்லாரும் வந்திருக்கிறார்கள். யாரும் காணாமல் போகவே இல்லையே."

"அசல் சாவிகள் எங்கேயிருக்கும்?"

"என் மேஜை டிராவில்தான். காலையில் கேட்டு வாங்கிப் போய் மாலையில் திருப்பித் தந்து விடுவார்கள்."

"மாற்று சாவி?"

"எங்கள் எம்.டி-மிஸ். அபிராமியிடமிருக்கும்."

"அவர் யாருக்காவது சாவியைக் கொடுக்க வாய்ப்பு உண்டா?"

"கொடுத்திருக்கலாம். என்னால சொல்ல முடியல. அதை அவங்களைக் கேட்டால் தான் தெரியும்."

"கடைசியாக ஒரு சின்ன முயற்சி."



"சொல்லுங்க இன்ஸ்பெக்டர்!"

"அரசு மருத்துவமனை வரை நீங்கள் வரவேண்டும்"

"ஏன்?"

"அடையாளம் தெரியாத இரண்டு பிணங்களைப் பார்த்து உங்களுக்கு ஏதும் அடையாளம் தெரியுமான்னு பார்த்துச் சொல்ல வேண்டும்."

"நான் ஏன் வரணும்? என்னைச் சேர்ந்தவங்க யாரும் காணாமல் போனதாக நான் சொல்லலையே."

"சும்மா என்னோட திருப்திக்காவது நீங்கள் வரத்தான் வேணும்."

உடனே வரமுடியாதே. பம்பாயிலேர்ந்து கால் எதிர்பார்க்கிறேன். ஆபீஸ் நேரம் முடிந்த பிறகானால் வருகிறேன்."

"பிரச்சினையில்லை. சாயங்காலமாக நானே வந்து கூட்டிக் கொண்டு போகிறேன்."

"சரி."

இன்ஸ்பெக்டர் கிளம்பிப் போனார்.

➳ → ❦ ➴

பங்களாவுக்கு ராஜாவும் ஜென்னியும் போனபோது இன்பவல்லி இல்லை. அவரது மானேஜரைத்தான் சந்திக்கமுடிந்தது.

"அழைப்பிதழ்களை அனுப்பியவன் நான்தான். நீங்க சொல்கிற ராம், சாலமன், வரதராஜன் என்கிற பெயர்களுக்கு அழைப்பு அனுப்பினதாக எனக்கு ஞாபக மேயில்லை. ஆனா அதில் ஆச்சரியமில்லே. தொழில் ரீதியாக முக்கியமானவர்களுக்கு மட்டும் அனுப்பப்பட்டது. ஆனால் அழைப்பிதழ் இருக்கிறவங்களை அனுமதிச்சோம். வேறு யாருக்காவது போன கார்டைக்கூட இவங்க பயன்படுத்தி இருக்கலாம். சொல்வதற்கில்லை."

"நீங்கள் அனுப்பின பட்டியல் தர முடியுமா? ப்ளீஸ்"

"தரலாமே" என்று எடுத்துத் தந்தவர் சொன்னார், "ஆனா இதோ நீங்கள் சொன்ன மூன்று பேர் பெயர்களும் இருக்கே. இரண்டொரு பெண்கள் பெயர்களுமிருக்கு. அதில் அந்த ஜோதி பெயர் இல்லை."

"பின்னே நிறைய இளம் பெண்கள் இருந்ததாக அவங்க சொன்னாங்களே."

"அது இன்பவல்லி மேடமே சில பேரை தனிப்பட்ட முறையில அழைத்து இருக்கலாம். சும்மா ஒரு அட்மாஸ்பியருக்கு தான் அந்தப் பெண்கள். எந்த பார்ட்டி என்றாலும் உடனே வந்து நிற்கிற பெண்கள். அப்படி நிறைய பேர் வந்திருந்தாங்க. ஹும் பணம் பாழாகி விடும்னு எத்தனையோ தடவை சொல்லி விட்டேன். எங்கே?"

"உங்க சீமாட்டியை நாங்க பார்க்கணுமே?"

"கஷ்டமான விஷயம். அத்தனை சுலபத்தில் தரிசனம் தரமாட்டாங்க. என்ன வேண்டும் உங்களுக்கு? சொல்லுங்க நானே கேட்டுப் பார்க்கிறேன்."

"அவர்கள் அழைப்பிதழ் அனுப்பிய பட்டியல் வேணும்."

"மேடம் ஊரிலில்லை. இருங்க. நானே போய்த் தேடி எடுத்து தருவேன்"

உள்ளே போய் திரும்பி வந்த போது பட்டியலோடு வந்தார் "முப்பது பெண்களுக்கு மேல் அழைத்திருக்கிறார். ஆனா அத்தனை பேரும் வந்தாங்களான்னு சொல்ல முடியாது."

"அந்த ஜோதி உட்பட எந்தெந்தப் பெண்கள் கண்ணில் பட்டார்களோ அந்தப் பெயர்கள் மட்டும் டிக் செய்து கொடுங்கள் சார்."

சுமார் பத்து பேரைப் டிக் செய்து கொடுத்தார்.

கும்பிட்டு விட்டு கிளம்பினார்கள் ராஜாவும் ஜென்னியும்.



○ ❑

அந்த அழகு சாதன தயாரிப்பு பாக்டரி வேலை நேரம் முடியும் வேளை பார்த்து சரியாக போய்ச் சேர்ந்தார் இன்ஸ்பெக்டர் வேதநாயகம்.

"உங்களைப் பார்த்ததும்தான் உங்களை வரச்சொன்னதே நினைவுக்கு வருகிறது. இதோ கிளம்பிட்டேன்."

"உங்க வேலையை சுலபமாக்க அவங்க பிணங்களை எடுத்த படங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். பார்த்துச் சொன்னாலே போதும்" படங்களை நீட்டினார்.

வாங்கி சாய்ந்த நிலையில் பார்த்த அந்த நிர்வாகி,

அந்தப் பெண்ணின் படத்தைப் பார்த்ததும்,

முகம் வெளிற திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: என். உதயகுமார்.
வயது: 25
முகவரி: 10/15, சவுண்டர்ஸ் பிளேஸ், கொழும்பு-12
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: எஸ். நஜீப்தீன்.
வயது: 23
முகவரி: 132, கேகாலை வீதி, பொல்கஹாவெல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு.



பெயர்: எம். ராஜ்குமார்.
வயது: 30
முகவரி: P.O.BOX- 19744, DOHA, QATAR.
பொழுது போக்கு: வீடியோ படம் எடுத்தல்.



பெயர்: என். மோகனராணி.
வயது: 30
முகவரி: 55/1, அன்புவழிபுரம், கன்னியா வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: பாடல்கள் கேட்டல்.



பெயர்: ஏ. முகமட் பரீத்.
வயது: 30
முகவரி: 147, பஜார் வீதி, வவுனியா.
பொழுது போக்கு: ரீ.வி., வானொலி.



பெயர்: எம். சிராஜ்டீன்.
வயது: 26
முகவரி: P.O.BOX.NO-49810. CODE NO-85159, AL. OMARIYA, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். நிஸானுதீன்.
வயது: 18
முகவரி: கடற்கரை வீதி, சாய்ந்தமருது-10
பொழுது போக்கு: ரீ.வி., வானொலி, பத்திரிகை.

பெயர்: ஜெ. ரிஸ்வி.
வயது: 19
முகவரி: டி..44, ஞானவிமல வீதி, தெமட்டகொட, கொழும்பு-9
பொழுது போக்கு: ரீ.வி., புத்தகம்.

பெயர்: ரி. லட்சுமிகாந்தன்.
வயது: 26
முகவரி: CHAM-DU-PLANE 8, 2532, MAGGLINGEN, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம், சினிமா.

பெயர்: எம். அன்ரனி.
வயது: 22
முகவரி: 322/5, வேல்ஸ் குமார மாவத்தை, கொழும்பு-14.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். ரவீந்திரன்.
வயது: 22
முகவரி: நாவலர் வீதி, குருக்கள்மடம், மட்டக்களப்பு.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம். அனஸ்.
வயது: 19
முகவரி: பஸ்வி மன்சில், தல்கஸ்பிட்டிய, அரனாயக.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி., புத்தகம்.

"விவசாயி மக்களே! அந்தப் பத்திரிகைகளை எப்போதும் எதிர்நோக்கிக் காத்திருங்கள், அவற்றைப் படியுங்கள்! கோயில் குருக்களும், அதிகாரிகளும் உண்மையைச் சொல்லும் எங்களை மாபாவிகள் என்றும், கலகக்காரர்கள் என்றும் உங்களிடம் சொல்வார்கள். அதை நம்பாதீர்கள். உண்மை இந்த உலகத்தில் எங்கெங்கும் இரகசியமாகவே உலவுகிறது. மக்களது இதயத்திலே குடிபுகுவதற்காகத் திரிந்து கொண்டிருக்கிறது. அதிகாரிகளுக்கோ சத்தியம் நெருப்பைப் போன்றது, உயிர் பறிக்கும் உடைவாளைப் போன்றது. அவர்கள் சத்தியத்தை ஏற்க முடியாது. ஏற்றால் சத்தியம் அவர்களை வெட்டித் தள்ளிவிடும்; சுட்டுப் பொசுக்கி விடும்!.

# தாய்

உங்களுக்கோ சத்திய தேவதை உண்மையான நல்ல தோழியாக விளங்குவாள்; அவர்களுக்கோ அவள் பரம விரோதியாக விளங்குவாள்; எனவே தான் அவள் இந்தப் பூமியில் இரகசியமாக உலவித் திரிகிறாள்!"

மீண்டும் அந்த ஜனக்கூட்டத்திலிருந்து கூச்சல்கள் கிளம்பின.

"கேளுங்கள், விசுவாசிகளே!"

"ஆ, சகோதரா! அவர்கள் இதற்காக உன்னைத் தண்டிப்பார்களே!"

"உன்னைக் காட்டிக் கொடுத்தது யார்?"

"தேவாலய மத குரு!" என்று ஒரு பொலிஸ்காரன் பதில் சொன்னான்.

இரண்டு முஜீக்குகள் வெஞ்சினத்தோடு கருவினார்கள்.

"அங்கே பாருங்கடா, பயல்களா!" என்று யாரோ எச்சரிப்பது காதில் விழுந்தது.

❖ ❑ ❄ ◯ ❄

பொலிஸ்சாரின் தலைவன்வந்து கொண்டிருந்தான். உருண்டை முகமும், கனத்த சரீரமும், நெடிய உருவமும் கொண்டவனாக இருந்தான் அவன். அணிந்திருந்த தொப்பி காதுப் பக்கமாக நீண்டு கொண்டிருந்தது. மீசையின் ஒரு புறம் மேல் நோக்கித் திருகிநின்றது. மறு முனை கீழ் நோக்கி வளைந்திருந்தது. எனவே அவனது தோற்றமே என்னவோ கோணங்கித்தனமாகத் தோன்றியது.

## மக்சீம் கார்க்கி

மேலும் அவனது உதட்டில் பிறந்த உயிரற்ற புன்னகையால் அவனது முகமே கோரமாகத் தெரிந்தது. அவனது இடது கையில் ஒரு வாள் இருந்தது. வலது கையால் வீசி விளாசிச் சைகை காட்டிக் கொண்டே அவன் வந்தான். அவனது வருகையின் கனத்த காலடியோசையை எல்லோரும் கேட்டனர். கூட்டம் அவனுக்கு வழி விட்டு ஒதுங்கியது. அவர்களது முகங்களிலெல்லாம் ஒரு சோர்வு நிறைந்த அழுத்த உணர்ச்சி குடியேறியது; அவர்களது குரல்கள் எல்லாம் பூமிக்குள்ளே மூழ்குவதுபோல் உள்வாங்கிச் செத்து மடிந்தன. தாய்க்கு, தன் கண்கள் எரிந்து கனல்வதாகத் தோன்றியது. நெற்றித் தசை நடுங்கிச் சிலிர்த்தது. மீண்டும் அவளுக்கு அந்தக் கூட்டத்தாரோடு கலந்து

## "உண்மை இந்த உலகத்தில் எங்கும் இரகசியமாகவே உலவுகிறது"

கொள்ளும் ஆசை உந்தியெழுந்தது. அவள் முன்னே செல்வதற்காக முண்டிப் பார்த்தாள்; பிறகு அசைவற்று ஸ்திரமாக நின்று போனாள்.

"இதென்ன இது?" என்று ரீபினின் முன்னால் வந்து நின்று கொண்டே கேட்டான் அந்தத் தலைவன். ரீபினை ஏற இறங்க நோக்கி அளந்து பார்த்தான். "இவன் கைகளை ஏன் கட்டவில்லை? பொலிஸ் இவன் கையைக் கட்டுங்கள்!"

அவனது குரல் உச்ச ஸ்தாயியில் கணீரென்று ஒலித்தது; என்றாலும் அதில் உணர்ச்சியில்லை.

"கட்டித்தான் இருந்தோம். ஜனங்கள் அவிழ்த்து விட்டு விட்டார்கள்." என்று ஒரு பொலிஸ்காரன் பதில் சொன்னான்.

"என்ன ஜனங்களா? எந்த ஜனங்கள்?"

அந்தப் பொலிஸ் தலைவன் தன்னைச் சுற்றிப் பிறை வடிமாகச் சூழ்ந்து நிற்கும் ஜனக் கூட்டத்தைச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

"யார் இந்த ஜனங்கள்?" என்று அவனது உணர்ச்சியற்ற வெளிறிய குரலை உயர்த்தாமலும் தாழ்த்தாமலும் கேட்டான். அவன் வாளின் கைப்பிடியால் அந்த நீலக்கண் முஜீக்கைத் தொட்டான்.

"அந்த ஜனங்கள் யார்? நீயா சுமகோவ்? வேறு யார், நீயா, மீஷன்?"

அவன் அவர்களில் ஒருவனது தாடியை வலது கையால் பற்றிப் பிடித்தான்.

"இங்கிருந்து உடனே கலைந்து போய் விடுங்கள்! அயோக்கியப் பயல்களா! இல்லையென்றால் உங்களுக்கு வேண்டுமட்டும் உதை கொடுத்தனுப்புவேன். நான் யாரென்பதைக் காட்டி விடுவேன்!"

அவன் முகத்தில் கோபமோ பயமுறுத்தலோ காணப்படவில்லை. அவன் அமைதியாகப் பேசினான்; தனது நெடிய கரங்களால் ஜனங்களை வழக்கம் போல் ஓங்கியறைந்தான். ஜனங்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டும் தலையைக் குனிந்து கொண்டும் பின் வாங்கத் தொடங்கினர்.

"சரி. நீங்கள் இங்கு எதற்கு நிற்கிறீர்கள்?" என்று பொலிசாரைப் பார்த்துச் சொன்னான். "நான் சொல்கிறேன். கட்டுங்கள் அவனை!"

அவன் ஏதேதோ வாய்க்கு வந்தபடி திட்டி விட்டு ரீபினை நோக்கினான்.

"உன் கையைப் பின்னால் கட்டு" என்று உரத்த குரலில் சொன்னான் அவன்.

"இவர்கள் என் கையை கட்ட வேண்டியதில்லை" என்றான் ரீபின்; "நான் ஒன்றும் ஓடிப்போக நினைக்கவில்லை. சண்டை போடவும் விரும்பவில்லை. பின் ஏன் கைகளைக் கட்டுகிறீர்கள்?"

"என்ன சொன்னாய்?" என்று கேட்டுக் கொண்டே அவனை நோக்கி அடியெடுத்து வைத்தான் அந்தப் பொலிஸ் தலைவன்.

"ஏ, மிருகங்களா! நீங்கள் மக்களைச் சித்திரவதை செய்தது போதும்!" என்று தன் குரலை உயர்த்திக் கொண்டு சொன்னான்

## "பறவைகள் சிறை விட்டுப் பறக்கும், மக்கள் துளைவிட்டு நீங்கும் காலம் வரத்தான் போகிறது!"

ரீபின். "உங்களுக்குச் சாவுமணி அடிக்கும் நாள் நெருங்கிவிட்டது!"

துடிதுடிக்கும் மீசையோடு ரீபினின் முகத்தையே வெறித்துப் பார்த்தான் அந்தத் தலைவன். பிறகு ஒரு அடி பின் வாங்கி வெறிபிடித்த குரலில் கத்தினான்:

"நாய்க்குப் பிறந்த பயலே! என்னடா சொன்னாய்?"திடீரென்று அவன் ரீபினின் முகத்தில் பளார் என்று ஓங்கி அறைந்தான்.

"உன்னுடைய முஷ்டியால், நீ உண்மையைக் கொன்றுவிட முடியாது!" என்று அவனை நோக்கி முன்னேறிக்கொண்டே சத்தமிட்டான் ரீபின். "அட்டுப் பிடித்த நாயே! என்னை அடிப்பதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது?"

"எனக்கு உரிமை கிடையாதா? கிடையாதா?" என்று ஊளையிட்டுக் கத்தினான் அந்தத் தலைவன்.

மீண்டும் அவன் ரீபினின் தலையைக் குறிபார்த்துத் தன் கையை ஓங்கினான். ரீபின் குனிந்து கொடுத்ததால் அந்த அடி தவறிப் போய், அந்தப் பொலிஸ் தலைவனே நிலை தவறித்தடுமாறிப் போய்விட்டான். கூட்டத்தில் யாரோ கனைத்தார்கள். மீண்டும் ரீபினின் ஆக்ரோஷமான குரல் ஓங்கி ஒலித்தது:

"ஏ, பிசாசே! என்னை அடிக்க மட்டும் துணியாதே, ஆமாம் சொல்லி விட்டேன்!"

அந்தப் பொலிஸ் தலைவன் சுற்று முற்றும் பார்த்தான். ஜனங்கள் ஒன்றுகூடி இருண்ட வளையமாக நெருக்கமாய் நின்று கொண்டிருந்தார்கள்.

"நிகீதா! ஏ, நிகீதா!" என்று கத்தினான் அந்தத் தலைவன். கம்பளிக் கோட்டு அணிந்து குட்டையும் குண்டுமாயிருந்த ஒரு முஜீக் கூட்டத்திலிருந்து வெளிவந்தான். அவனது கலைந்து போன பெரிய தலை கவிழ்ந்து குனிந்திருந்தது.

"நிகீதா!" என்று தன் மீசையை நிதானமாகத் திருகிக் கொண்டே சொன்னான்

> **"அவர்கள் எங்களது இருப்பிடங்களையெல்லாம் குலைத்து, எல்லாத் தோழர்களையும் கொண்டுபோய் விட்டாலும்கூட அங்கெல்லாம் எங்களைப்பற்றிய நினைவு நிலைத்திருக்கும்..... ......அவர்களுக்குச் சாவுமணி அடிக்கும் நாள் நெருங்கிவிட்டது!"**
>
> **–ரீபின்**

அந்தப் பொலிஸ் தலைவன். "அவன் செவிட்டில் ஓங்கி, ஒரு சரியான குத்து விடு!"

அந்த முஜிக் ரீபினின் முன்னால் வந்து நின்று தலையை நிமிர்த்தினான்; உடனே ரீபின் அவன் முன் கடுகடுத்த வார்த்தைகளை வீசியபடி உரத்த உறுதி வாய்ந்த குரலில் சொன்னான்:

"ஜனங்களே! பார்த்தீர்களா? இந்த மிருகங்கள் நம் கைகளைக் கொண்டே நம் தொண்டையை நெரிப்பதை நன்றாகப் பாருங்கள்; சிந்தித்துப் பாருங்கள்!"

அந்த முஜீக் தன் கையை மெதுவாக உயர்த்தி ரீபினின் தலையில் லேசாக ஒரு குத்துவிட்டான்.

"ஏ, நாய்க்குப் பிறந்த பயலே! இப்படித்தான் அடிக்கிறதோ?" என்று அவனை நோக்கி அழுது வடிந்தான் அந்தத் தலைவன்.

"ஏய், நிகீதா!" என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது. "கடவுளை மறந்து காரியம் செய்யாதே!"

"நான் சொல்கிறேன், அவனை அடி!" என்று முஜீக்கின் பிடரியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டே கத்தினான் தலைவன். ஆனால் அந்த முஜீக்கோ தன் தலையைக் குனிந்தவாறே ஒரு புறமாக ஒதுங்கிச் சென்றான்.

"என்னால் முடிந்தவரை அடித்தாயிற்று" என்று முனகினான்.

"என்ன?"

அந்தப் பொலிஸ் தலைவனின் முகத்தில் ஒரு நடுக்கம் பரவிப் பாய்ந்தது. அவன் தரையை எட்டி உதைத்தான். ஏதேதோ திட்டிக்கொண்டு ரீபினை நோக்கிப் பாய்ந்தான். திடீரென ஓங்கியறையும் சத்தம் கேட்டது. ரீபின் கிறுகிறுத்துச் சுழன்றான், தன் கையை உயர்த்தினான். ஆனால் இரண்டாவதாக விழுந்த அறை அவனைக்



கீழே தள்ளி வீழ்த்தியது. அந்தப் பொலிஸ் அதிகாரி கீழே விழுந்த ரீபினின் நெஞ்சிலும் விலாவிலும் தலையிலும் உதைத்தான், மிதித்தான்.

கூட்டத்தினிடையே கோபக்குமுறல் முறமுறத்து வெளிப்பட்டது. ஜனங்கள் அந்த அதிகாரியை நோக்கிச்சூழ ஆரம்பித்தார்கள். ஆனால் அவனோ இதைக் கண்டு கொண்டான். பின்னால் துள்ளிப் பாய்ந்து, தன் வாளின் கைப்பிடியைப் பற்றிப் பிடித்துச் சுழற்றி வீசினான்:

"என்ன இது? கலவரம் உண்டாக்கவா பார்க்கிறீர்கள்? ஆ-ஹா-ஹா! அப்படியா சேதி?"

அவனது குரல் உடைந்து கரகரத்து நடுங்கியது. திராணியற்ற சிறு கூச்சலைத்தான் அவனால் வெளியிட முடிந்தது. திடீரென்று அவனது குரலோடு அவனது பலமும் பறந்தோடிப் போய்விட்டது. தலையைத் தோள் மீது தொங்க விட்டபடி அவன் தடுமாறி நிலைகுலைந்து கால்களாலேயே வழியை உணர்ந்து உயிரற்ற கண்களால் வெறித்துப் பார்த்தவாறே பின் வாங்கினான்.

"ரொம்ப நல்லது" என்று அவன் கரகரத்த குரலில் சத்தமிட்டான். "அவனைக் கொண்டு போங்கள்-நான் அவனை விட்டு விடுகிறேன், வாருங்கள். ஆனால், அயோக்கியப் பதர்களா! இவன் ஓர் அரசியல் குற்றவாளி என்பது உங்களுக்குத் தெரியாதா? இவன் ஜார் அரசனுக்கு எதிராக, மக்களைத் தூண்டி விடுபவன் என்பது உங்களுக்குத் தெரியாதா? இவனையா நீங்கள் காப்பாற்றப் போகிறீர்கள்? அப்படியானால் நீங்களும் கலகக்காரர்கள்தானா? அப்படித்தானே?"

தாய் கொஞ்சங்கூட அசையாமல் நின்றாள். அவளது கண்கள் கூட இமைக்கவில்லை. சிந்தித்துப் பார்க்கும் சக்தியையும் பலத்தையும் இழந்துபோய், பயமும் அனுதாபமும் பீடித்த மனத்தோடு, அவள் ஒரு கனவு நிலையில் நின்று கொண்டிருந்தாள். முறைப்பும் கோபமும் புண்பட்ட மக்களின் குரல்கள், கலைக்கப்பட்ட தேனீக்களின் மூர்க்க ரீங்காரத்தைப்போல், கும்மென்று அவள் காதுகளில் இரைந்தன. அந்த அதிகாரியின் குழறிய குரல் அவள் காதில் ஒலித்தது. அத்துடன் யாரோ குசுகுசுவெனப் பேசும் குரலும் சேர்ந்தது.

"அவன் குற்றவாளியென்றால், அவனை நீதி மன்றத்திற்குக் கொண்டுபோ.."

"எஜமான்! அவன் மீது கருணை கொள்ளுங்கள்.."

## 72

"இது தான் உண்மை. இந்த மாதிரி நடத்துவதற்கு எந்தச் சட்டமும் இடங்கொடுக் காது."

"இது என்ன நியாயமா? இப்படி எல்லோரும் அடிக்கத் தொடங்கி விட்டால், -அப்புறம் என்ன நடக்கும்?"

ஜனங்கள் இரு பிரிவினராகப் பிரிந்து நின்றார்கள். ஒரு சிலர் அந்த அதிகாரியைச் சுற்றி நின்று அவனோடு சேர்ந்து கத்திக் கொண்டும் இரங்கிக் கேட்டுக் கொண்டுமிருந்தனர். அந்தப் பிரிவினரில் சிறு பான்மை யோர் கீழே விழுந்து கிடக்கும் ரீபினின் பக்கமாக நின்று ஏதேதோ வர்மம் கூறினர். அவர்களில் சிலர் ரீபினைத் தரையிலிருந்து தூக்கி நிறுத்தினர். பொலிஸ்காரர்கள் அவனது கைகளைக் கட்ட முன்வந்த போது அவர்கள் கூச்சலிட்டார்கள்:

"ஏ, பிசாசுகளே! அவசரப் படாதீர்கள்!"

ரீபின் தனது முகத்திலும் தாடியிலும் படிந்திருந்த இரத்தத்தையும் புழுதியையும் துடைத்தான்; வாய் பேசாது சுற்று முற்றும் பார்த்தான். அவனது பார்வை தாயின் மீது விழுந்தது. அவள் நடுங்கியபடி, அவனை நோக்கித் தன்னையுமறியாமல் கையை ஆட்டிக் கொண்டே, முன் வரக் குனிந்தாள். ஆனால் அவன் சட்டென்று அவள் பார்வையினின்றும் கண்களைத் திருப்பிக் கொண்டான். சில நிமிஷ நேரம் கழித்து அவனது கண்கள் மீண்டும் அவள் பக்கம் திரும்பின. அவன் நிமிர்ந்து நின்று தலையை உயர்த்திப் பார்ப்பதாகவும் இரத்தக்கறை படிந்த அவனது கன்னங்கள் நடுங்குவதாகவும் அவளுக்குத் தோன்றியது.

'அவன் என்னைக் கண்டு கொண்டான்-உண்மையிலேயே என்னை அவன் அடையாளம் கண்டு கொண்டானா?'


அவள் அவனை நோக்கி உடம்பெல்லாம் நடுங்க, அடக்க முடியாத வருத்தம் நிறைந்த மகிழ்ச்சியோடு தலையை அசைத்தாள். மறுகணமே அந்த நீலக்கண் முஜீக் அருகே நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு கொண்டாள். அவனது பார்வை தாயின் உள்ளத்தில் ஆபத்துக்கான எச்சரிக்கை யுணர்வைக் கிளப்பிவிட்டது.

"நான் என்ன செய்கிறேன்? இப்படிச் செய்தால் என்னையும் அவர்கள் கொண்டு போய் விடுவார்கள்!"

அந்த முஜீக் ரீபினிடம் ஏதோ சொன்னான்; ரீபின் பதிலுக்கு ஏதோ கூறியவாறே தலையை அசைத்தான்.

*(தொடர்ந்து வரும்)*

# "ஆலோசனைகள்"



அஸ்வதி

அன்று இரவு முழுவதும் அவனுக்கு ஓயாது இருமிக் கொண்டே இருந்தது. இரவில் இருள் விலகி காலை வந்தது போல இருமலும் அதிகாலையில் நின்று விட்டது. இருபது நிமிடம் வரை நிம்மதியாக உறங்கினான். பல நாட்களாக விட்டு விட்டு இந்த வேதனை இன்று எப்படியும் ஒரு முடிவு எடுத்துவிட வேண்டும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் தகப்பனும் வீட்டோடு நின்றார். "அப்பா ராத்திரி முழுக்க நித்திரை இல்லை. இருமிக் கொண்டே இருந்தது. சரியான கஷ்டமாப் போச்சு. ஆனால் சளி நெஞ்சிலை இல்லை. தொண்டையிலை தான் ஏதோ பிழை. இண்டைக்கு கட்டாயம் ஆருக்காவது காட்டவேண்டும். இண்டைக்கும் என்னாலை முழிப்பு இருக்க ஏலாது."

"நான் காலைமை நித்திரையாலை எழும்பின உடனே கொம்மாக்குச் சொல்லிப்போட்டன். கட்டாயம் ஒரு நல்ல டொக்டரெட்டைக் காட்ட வேணும். நான் இப்ப மார்க்கட்டுக்குப் போயிட்டு வரேக்கை அந்தப் பிரைவேட் ஆசுப்பத்திரியிலை விசாரிச்சுக் கொண்டு வாறன். நீ குளிர்த் தண்ணியிலை குளியாதை.

அத்துடன் அவனுடைய பிரச்சனைக்கு ஒரு இடைக்காலத் தீர்வு கொடுக்கப்பட்டது.

'சந்தியிலை மருந்துக்கடை வைச்சிருக்கிற பொடியன் நல்ல பொடியன். அவனெட்டைக் கேட்டுப்பாப்பம்' என நினைத்துக் கொண்டார் அவர்.

மருந்துக்கடை பொடியன் கொடுத்த ஆலோசனையோடை அந்தத் தனியார் மருத்துவமனையை நெருங்கினார். வரவேற்புப் பகுதி என்று குறிக்கப்பட்டிருந்த இடத்தை நெருங்கினார். அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்தவள் நிறைகுடம், குத்துவிளக்கு வைத்திருக்கும் இடம் போலவே நிறைவாகவும் அழகாகவும் இருந்தாள். பொருத்தமானவள்.

"தங்கச்சி எனக்கு டொக்டர் ஆரத்தியைக் கொஞ்சம் பார்க்க வேணும்."

"என்ன விசயம்"

சொன்னார்.

"அவ 4 மணிக்குத்தான் வருவா. நீங்கள் இப்ப 250 ரூபா கட்டிப்போட்டுப் போனால் பின்னேரம் வந்து பார்க்கலாம்."

வழமையான தனியார் மருத்துவமனைச் சடங்குகள் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு அவர் கிளம்பினார். மாலையில் திரும்பி வந்தார்.

இலக்கங்கள் கூப்பிடப்பட்டன. இலக்கம் ஆறு கூப்பிட்டபோது இருவரும் உள்ளே போனார்கள்.

"ஆர் 'பேசன்ற்'? இருங்கோ என்ன பெயர்?"

"மாறன் சின்னத்தம்பி"

"வயது"

"பதினெட்டு"

விபரங்கள் சொன்னான் மாறன்.

டொக்டர் பரிசோதித்தார்.

"வாயை 'ஆ' என்று திறவுங்கோ தம்பி?"

பெயரும் வயதும் எழுதிய பேப்பரில் மருந்துகளை எழுதி இலக்கங்களை வட்டத்தினுள் சிறையிட்டாள்.

"பெரிய பிரச்சனை ஒன்றுமில்லை. தொண்டையிலை 'பங்கசு' பிடித்திருக்கு. இதிலை கொஞ்சம் 'அன்ரிபயாரிக்' மருந்துகள் எழுதியிருக்கிறன். ஒழுங்காகச் சாப்பிட்டால் இரண்டு கிழமையில மாறி விடும். மற்றது ஒரு மர்தத்துக்கெண்டாலும் கூலாக ஒன்றும் சாப்பிடவேண்டாம்."

மாறன் எல்லாவற்றிற்கும் தலையாட்டினான். தகப்பன் சுவரில் ஒட்டப்பட்டிருந்த நோய்கள்-குணங்குறிகள் பற்றிய விபரங்களை வாசித்துக் கொண்டிருந்தார்.

"தூசியிலையும் அதிகம் விளையாட வேண்டாம். எங்கை படிக்கிறியள் தம்பி?"

"இந்துக் கல்லூரி"

"நீங்கள் எங்கை வேலை செய்யிறியள்?"

"நான் ஒரு சப்பாத்துத் தொழிற்சாலையில் வேலை செய்யிறன்."

"உங்களைக் கண்டது நல்லாப் போச்சு" குனிந்து காலில் இருந்த செருப்பைக் கழற்றினார் டொக்டர்.

"இது வாங்கி இப்ப ஒரு மாதம் கூடவராது. ஆனால் இந்த 'ஹீல்' கொஞ்சம் கொஞ்சமாக உடைந்து கொண்டு வருகுது. இதுக்கு என்ன செய்யலாம்?"

தகப்பனின் நினைவில் தட்டியபொறி அவருக்குச் சிரிப்பை வரவழைத்தது. இருப்பினும் அடக்கிக் கொண்டு....

"உங்களுக்கு இது சம்பந்தமாக ஒரு ஆலோசனை வேணும்? என்ன?"

"சரி"

"என்னுடைய மகனுடைய வருத்தம் சம்பந்தமா நான் உங்களோடை ஆலோசிச்சதுக்கு நீங்கள் என்னெட்டை 250 ரூபா எடுத்துப்போட்டியள். நீங்கள் ஒரு புறொபெசனல். நானும் அப்படித்தான். சமூக அந்தஸ்து மட்டும் தான் வித்தியாசம். உங்கடை துறையிலை நீங்கள் அதிகமாகப் படிச்சிருந்தாலும் என்ரை தொழிலின்ரை அரிச்சுவடிகூட உங்களுக்குத் தெரியாது. நீங்கள் எனக்கு ஆலோசனை தர 250 ரூபா எடுத்தது போலை நான் உங்களுக்கு ஆலோசனை தர நீங்களும் 250 ரூபா தாறதெண்டால் நான் மேற்கொண்டு வாயைத் திறக்கலாம்."

ஆரத்தி சிரித்தார்.

சில கணத் தாமதத்தின்பின்,

"நேர்ஸ்...அடுத்த பேசன்ட்....."

அந்தப் 'புறொபெசனலும்' மகனும் அறையைவிட்டு வெளியேற ஆரம்பித்தனர்.

# மீண்டும் நீ?

ஷர்மிளா இஸ்மாயில்
-கண்டி-



பிஸியான நகர வாழ்க்கையில் சில அனுகூலங்கள்: அவரவர் பாட்டை அவரவர் கவனிக்கவே நேரம் சரி. பக்கத்திலுள்ளவர்களைப் பராக்குப் பார்த்து துருவித் தோண்டிக் கொண்டிருக்க போதிய அவகாசமோ, ஆர்வமோ இல்லை.

வாழ்க்கை அப்படித்தான் வேண்டும் எனக்கு. சந்தோசமாக இருந்தது. "ஒரு ஆத்திர அவசரத்திற்கோ நல்லது கெட்டதுக்கோ உதவிக்கு கூப்பிடக்கூட ஆளில்லைடி. யாரையும் நமக்கு அறிமுகமில்லை. அறிமுகமாகிக்கக் கூட அவகாசமில்லாத பரபரப்பான வாழ்க்கை. எனக்குன்னா கொஞ்சம்கூட பிடிக்கலை இது." அம்மா அலுத்துக் கொண்டாள்.

"ஆமாமா...ஒரு கோப்பைத் தேத்தண்ணியும் ஒரு வாய் வெற்றிலையுமாக கூடி உட்கார்ந்து ஊர் வம்பளக்காம பொழுதே போகலியா? நாக்கு துருப்பிடிச்சிடுமில்லே? பாவம் அண்ணா இந்த அம்மா!" அண்ணாவிடம் சொல்லிச் சிரித்தேன். நமுட்டுச் சிரிப்பு சிரித்தான் அண்ணா.

□□

யாரோ நீண்ட நேரமாக கேட்டைத் தட்டும் சத்தம். உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையிலிருந்தவள் 'சட்'டென எழுந்து ஜன்னலால் எட்டிப் பார்த்தேன். அறிமுகமற்ற முகம். கையிலொரு வாளியும் மறுகையில் தண்ணீர்க் கலனுமாய் ஒரு கம்பீர இளைஞன்.

'யார்?' மானசீகமாய்க் கேட்டபடி கேட்டருகே சென்றேன். நேரடியாக கண்களை ஊடறுத்துப் பார்த்தான். "நேற்று நீர்வெட்டு அறிவித்தல் கேட்கல்ல. அதால தண்ணீர் எடுத்து வைக்கல. குடிக்க சொட்டு நீரில்ல. ஒரு 'பக்கட்' தரமுடியுமா?" எவ்வித சுற்றி வளைப்பும் இல்லை. அறிமுகமற்றவர்களே, கொஞ்சம் இதமாகப் பேச வேண்டுமே என்ற எண்ணமேயில்லை. ஒரு இயந்திரத் தன்மையான குரல். பிசிறுகள் இல்லை.

யாரைப் பார்த்தாலும் சந்தேகம், இந்நாளில். இவன் யாரோ? எங்கிருந்து வந்தானோ? யோசித்தேன். தண்ணீர் கொடுக்கலாமா? நம்பி கேட்டை திறக்கலாமா? அம்மா மட்டும் வீட்டில். என் மனதை வாசித்தவன் போல "என்ன சந்தேகமா? அடையாள அட்டை தரட்டுமா? முன்னால தெரியுற அந்த வீடு தான். என்ன செய்ய? காலம் ரொம்ப கெட்டுப்போச்சு. எங்கேயும் எதிலேயும் சந்தேகம்." லேசான ஏளனச் சிரிப்பு அவன் முகத்தில். நான் என்ன சொல்ல?

பேசாமல் தண்ணீரை நிரப்பி நீட்டினேன். "மனிதாபிமானத்திற்கு நன்றிகள்." சொல்லிவிட்டு நடந்து சென்றான்.

தொடர்ந்து வந்த நாட்களில் நிறைய பேசச் சந்தர்ப்பங்கள் வாய்த்தன. வித்தியாசமானவனாகத்தான் தெரிந்தான். சாதாரண இளைஞர் வர்க்கத்தினரிடமிருந்து வேறுபட்டு....சினிமா, கிரிக்கெட்.... பெண்கள் என்பதான இரசனைகள் ஏதுமில்லாமல்! நிறையவே வியந்தேன். உலகத்து அறிவெல்லாம் கரைத்துக் குடித்து விட்டமாதிரி, எந்த விடயத்திலும் ஓர் அர்த்த ரீதியான அறிவுடன் அணுகலும், தெளிவான பேச்சும்...! பொறியியல் பீடத்தில் இறுதியாண்டு என்றான். "ஆஹா.... இலட்ச சீதனங்களோடு பணக்கார சம்பந்தங்கள் தேடிவருமே!" என்றேன் விளையாட்டாக... அவன் சிரிக்கவில்லை. "பணமா? யாருக்கு வேண்டும்?" கேட்டான்.

"வாழ்க்கை எப்போதுமே சிரிக்க வைக்கக்கூடியதில்லை. பலருக்கு கண்ணீரே வாழ்க்கையாகிடக்கூடும்." என்றான். புரியாமல் பார்த்தேன். பெருமூச்சு விட்டான். "ஷெல்லில் சிதறிப்போன அம்மாவும் அப்பாவும்; சந்தேகத்தின் பேரில் கைதாகி காணாமல் போன சகோதரர்களும்; கற்புப் பறிபோன கவலையில் கிணற்றில் பாய்ந்து செத்த ஒரே தங்கையும்; அகதிகளாய் முகாம்களில் வாடும் உறவுகளும்.... இதையெல்லாம் பார்த்துப் பார்த்தே சிதறிப் போன என் மனசும்.... நானும்...." பெருமூச்சு மீண்டும். சிலையாகி நின்றிருந்தேன். இத்தனை சோகங்களா?

"வாழ்க்கையில் நான் இழந்தது அதிகம். மனிதர்கள் என்னை அழவைத்தது தான் அதிகம். இனியும் நான் அழத் தயாரில்லை. பட்டது போதும். இனியாவது இருளாயிருந்த விடியல்களில் ஒளிவரட்டும். இழக்கப்பட்ட என் உரிமைகள், காணாமல் போன என் வாழ்க்கைச் சந்தோசங்கள் இவையெல்லாம் மீட்டெடுக்கப் படணும். மெதுவாக மெதுவாக நான் அதில் பங்கேற்பேன். போராடுவேன். பின் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகும். நான் மட்டுமல்ல; என்னைப் போல் எத்தனையெத்தனை அநியாயப்பட்டுப் போன மனிதங்கள் இங்கே. இனம், மதம்- இதைத் தாண்டி மனிதம் என்றொன்றிருப்பதை நிறையப் பேர் மறந்துட்டாங்க. குறுகிய மனதுகள். போராட்டத்தால் பெறப்படும் அந்த வாழ்க்கைச் சுதந்திரம் தான் பெறுமதி மிக்கது." ஏதோவோர் உத்வேகத்துடன் தொடர்ந்து பேசியவன் திடீரென நிறுத்தினான். அவன் லேசாகச் சிரிப்பதாய்ப் பட்டது எனக்கு.

"ம்ஹூம்.... இதையெல்லாம் உங்கக்கிட்ட சொல்லிக்கொண்டு..... வாழ்க்கையிலே எதையும் இழக்காத, இழப்பின் சோகம் புரியாதவங்களுக்கு இதெல்லாம் புரியாது...." முணுமுணுத்தான். ஏனோ எனக்குள் கோபம் வரவில்லை! அவன் போய்விட்டான். நீண்ட நாட்களாகக் காணக்கிடைக்கவில்லை.

சந்தேகத்தன் பேரில் கைது செய்து விட்டார்களாம் அவனை! அண்ணா வந்து சொன்னபோது இதயம் வெடித்துப் போனதாய் உணர்ந்தேன். "விட்டுடுவாங்களா... விசாரிச்சுட்டு....?" பதறியபடி கேட்டேன். அண்ணா பதிலே பேசவில்லை. சிலவேளைகளில் மௌனம்- சம்மதமில்லை பயங்கரமாயிருந்தது. "மனிதாபிமானத்திற்கு நன்றிகள்." என்றானே.....? அந்த மனிதாபிமானம் இனி அவனுக்கு எங்கேனும் கிட்டுமா?

விடை தெரியவில்லை.

# 'உடையார்'



கனகசபை
தேவகடாட்சம்

"க்கூ.....காய்...." என்ற சத்தம். தொலைக்காட்சிப் பெட்டியைப் பிளப்பது போல் இருந்தது. அதி உக்கிரமாய் நடந்து கொண்டிருந்த கிரிக்கெட் போட்டியில் சிறிதும் கவனம் கொள்ளாத 'உடையார்' சித்திரவேலர் மெதுவாக சாய்வு நாற்காலியை தூக்கிக் கொண்டு வெளிவிறாந்தையின் ஓரமாகப் போட்டுச் சாய்ந்தார்.

மனதிற்குள் வெறுப்பு நெருப்பாக இருந்தது. தன் மனைவி-அதுவும் வயோதிபத்தை முழுமையாக அனுபவித்துக் கொண்டிருப்பவள்! சொந்த மண்ணை விட்டு வேறெங்கும் வாழ மாட்டேன் என ஆரம்பத்தில் அடம் பிடித்தவள்! இப்போது.... கொழும்பில் வாழ்ந்து கொண்டு, கிரிக்கெட்டை விமர்சித்துக் கொண்டிருந்தவளை, சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறே.... தன் சின்னச் சுருட்டை இழுத்துக்கொண்டு நோட்டம் விட்டார் உடையார் சித்திரவேலர்! சிரிப்பு இதயத்தால் வெளிவந்தது. வெப்பத்துடன்... எரிந்து கொண்டிருந்த அந்தச் சுருட்டின் முனையை அவரது சின்ன விரல் தட்டி விட்டது. சாம்பரின் துகள்கள் காற்றில் விசாலித்துப் பறந்தன.... தனது கடந்த நினைவுகள் போன்று!

❄ ○ ✻

மல்லிகைத் தீவு..பழம் பெரும் விவசாய கிராமம்! இங்கு கௌரவ உத்தியோகங்களில் 'உடையார்' உத்தியோகமும் ஒன்று! சித்திரவேலரின் குடும்பம் தான் பரம்பரையாகப் பார்த்து வந்தது. கழுத்துச் சால்வையும், தலைப்பாகைக் கட்டும், காதுக் கடுக்கனும், கொண்டைக் கட்டும், சித்திர வேலரின் ஆஜானுபாகுவான தோற்றத்திற்கு மெருகூட்டியது. உடையார் சித்திரவேலர் நின்று நடத்தாத விசேடங்களே இல்லை.

நடந்தேறிய கலவரங்களில் மகுடம் வைத்தது 90ம் ஆண்டு. நெருக்கடியை தாங்கமுடியாமல் மூத்த மகன் வெளிநாடு தள்ளப்பட்டான். அடுத்தடுத்து நடந்த அனர்த்தங்களில் அகப்பட்டு இறந்தான் ஒரு மகன். கடைசி மகனோடு, உயிரை கையில் பிடித்துக் கொண்டிருந்த காலத்தில்தான் வெளிநாட்டு மகனிடம் இருந்து 'கட்டளை' வந்தது. சொந்த ஊரைவிட்டு கொழும்பில் வாழ்வதை எண்ண...உடையார் சித்திரவேலருக்கு உயிரை விடுவது போன்று இருந்தது. என்ன செய்வது? கடைசி மகன் கிருபாவை காப்பாற்றி ஆக வேண்டுமே!

ஒரே பிடியாக நின்று கொண்டான் கிருபா. "அப்பா! நீங்க இந்தக் காதுக் கடுக்கனையும், குடுமியையும் வெட்ட வேண்டும். அப்போதுதான் நான் கொழும்புக்கு வருவன். இல்லாட்டி, இங்கே கிடந்து.... எப்படி சாகிறோனோ......?" அவன் முடிக்கவில்லை. பாய்ந்து கிருபாவின் வாயை பொத்தினாள் தாய். "இஞ்சேருங்க! பயல் சொல்லிறபடி செய்யுங்களேன். கொண்டையையும் கடுக்கனும் இல்லாட்டி குடியா முழுகிப் போகும்?" மனைவியின் சொற்கள் அம்பென பாய்ந்தது அவருக்கு.

"அடியே! உங்களுக்கு எங்கடி தெரியப் போகுது இதுர மதிப்பு? என்ன செய்யிறது? காலம் அப்படிப் போயிற்று." என்றவாறு மெதுவாக நடந்தார். என்றுமே உடையாத 'உடையார்' சித்திரவேலர்.

கூச்சல் சற்று ஓய்ந்தது. கிரிக்கெட் போட்டி தாக சாந்திக்காக நிறுத்தப்பட்டது. வெளியே வந்து தன் மகன் கிருபாவை ஏறிட்டுப் பார்த்தார் உடையார். அவனது ஒற்றைக் காது கடுக்கனும், சிறு குடுமியும் அவரை பேசத் தூண்டியது. "தம்பி! வாறமுறை வாற காசிலே நான் கடுக்கன் செய்ய காசுதரவேணும்" என்றார்.

"என்னப்பா! இளமை திரும்புதோ? கிரிக்கெட் போட்டி பார்த்து உங்களுக்கும் கடுக்கன் ஆசை வந்திட்டோ?" என்றான் மகன் கிருபா.

முன்பின் யோசியாது வார்த்தைகளை பொரிந்து தள்ளினார் உடையார் சித்திரவேலர்.

"டேய்! அவனை இவனைப் பார்த்தாடா நான் கடுக்கன், கொண்டை போட்டது? நீ அப்படியிருக்கலாம். இது பரம்பரை சொத்துக்கள். என்னைப் பார்த்து கடுக்கன் நீ போட்டிருந்தா நான் ஏத்திருப்பேன். இத முதல்ல காட்டியது எங்கட பரம்பரையடா! எண்ட கொண்டையையும் கடுக்கனையும் களட்டச் சொல்லிப் போட்டு, நீ போட்டுக் கொண்டு எனக்கு முன்னால திரியுறா..... என்ன? நாளைக்கே நான் ஊருக்குப் போறன். நீங்க எப்புடி கிடந்தாலும் பரவாயில்ல. பச்சைத் தண்ணிய குடிச்சுத்தெண்டாலும் கௌரவமா வாழலாம்!"

உடையாத உள்ளத்துடன் எழுந்த சித்திரவேலர் உடையார் பெட்டி படுக்கைகளை கட்டத் தொடங்கினார்.

# அவள்

செல்வம்

உதட்டளவில் கூட, உண்மை பேச மாட்டான், மூர்த்தி. மனைவியிடமும் அப்படித்தான். யாருமே அவனை நம்ப மாட்டார்கள். அவனோடு நட்புக் கொள்ளப் பயப்படுவார்கள். ஊரில், யாருமே அவனுக்கு வேலை தருவதில்லை.

'நண்பனுடன் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்கிறேன்' என்று யார் கேட்டாலும் பதில் கூறுவான்; மனைவியிடமும்தான். தினமும் அவனுக்கென்று யாராவது அகப்பட்டு விடுவார்கள். எப்படியாவது பேசி, ஏமாற்றி, செலவுக்கு வாங்கிக் கொண்டு வந்து விடுவான்.

"என்னங்க வியாபாரத்தில லாபம்னு சொன்னீங்களே.. எனக்கு ஒரு சங்கிலி வாங்கிக் குடுங்க.." சிணுங்கினாள், ரேணுகா.

"என்ன ரேணுகா! லாபத்தை எடுத்துட்டா, பிறகு தொழில் எப்படி நடக்கும்?" சமாளித்தான் மூர்த்தி.

ஆனாலும் அவள் விடுவதாய் இல்லை. தொடர்ந்து முரண்டு பிடித்தாள். "சரி வாங்கிடலாம்" என்று சொல்லி வைத்தான்.

'எப்படி வாங்குவது? கோல்டு கவரிங்க வாங்கினா, கொஞ்ச நாள்ல சாயம் வெளுத்துப் போயிடும். அதை வாங்கணும்னாலும், இப்ப இருநூறு ரூபாய் வேணுமே.. பிக்பாக்கெட் அடிப்பது அவனுக்குக் கைவந்தகலை. ஆனால், இப்ப யாரு அவ்வளவு பணம் வெளியில் கொண்டு வர்றாங்க...?!'

ஒரு வேளை... இந்த விஷயத்தில் தன் பொய்கள் அம்பலமாகிவிடுமோ என்று அஞ்சினான், மூர்த்தி.

பக்கத்து ஊர்களுக்குக் காய்கறிகள் கொண்டு போய் வியாபாரம் செய்து வருவாள், ரேணுகா.

வெளியூரில் அவனுக்குக் கொஞ்சம் அறிமுகமான நண்பர் ஒருவர் இருந்தார்.



அவரைச் சந்திக்கலாம் என்று புறப்பட்டான்.

அவர் வீட்டிலேயே நிறைய ஆடுகள் வளர்ப்பார். 'ஆடுகள் நம் ஊரில் மலிவாக இருக்கிறது' என்று அட்வான்ஸ் முன்னூறு ரூபாய் வாங்கிக் கொண்டு சந்தோஷமாய்த் திரும்பினான்.

பஸ்ஸில் அவனுக்கு உட்கார இடம் கிடைக்கவில்லை. இரவு நேரப் பயணம். பஸ், இருளைக் கிழித்துக் கொண்டு விரைந்தது.

'வீட்டில் ரேணுகா ஒரு சங்கிலி கேட்டு அடம் பிடிக்கிறாளே.. பஸ்ஸில் ஒவ்வொரு பெண்ணின் கழுத்திலும் எத்தனை நகைகள்! பஸ் விபத்துக்குள்ளானால்.. ரேணுகா கேட்ட நகை கிடைக்கும். என்ன வழி?' யோசித்தான். பஸ் டிரைவர், அவன் நினைவுக்கு வந்தார்.

"அடடே... முத்துமணி.." என்று சிரித்தபடி டிரைவர் அருகே சென்றான் மூர்த்தி.

"யாரு.." சாலையில் இருந்து பார்வையை விலக்கி, அவனைப் பார்த்தார், டிரைவர்.

"என்னப்பா... என்னையே மறந்துட்டே? பட்டிமேடு பொன்னரோட மகன்தானே நீ?"

"இல்லையே.. என்பேரு கிருஷ்ணகுமார்.." என்றார், முகத்தைக் கடுப்பாக்கிக் கொண்டு.

"கிருஷ்ணகுமாரா? முத்துமணின்னு ஒருத்தன்.. எனக்குத் தெரிஞ்சவன். அவனும் உன்னை மாதிரியே இருப்பான் அதுதான்..."

'ஒட்டுநரின் கவனத்தைத் திசை திருப்பா தீர்கள்' என்று பஸ்ஸில் தொங்க விடப்பட்டிருந்த அறிவிப்பு வாசகத்தைப் புறக்கணித்தான், மூர்த்தி.

அவனது பேச்சு சாதுர்யம் டிரைவரின் கவனத்தைக் கவர்ந்தது.

வண்டி வேகமாக, அந்த வளைவில் திரும்பும் போது, டிரைவரின் கவனம் திசை திரும்ப.. கண் இமைக்கும் நேரத்தில், 'ஐயோ... அம்மா...' ஒரே அலறல்.

எல்லாரும் பலத்த காயத்தில் முனகிக் கொண்டிருக்க, சிலர் மூர்ச்சையாகிக் கிடந்தனர்.

மூர்த்தி எதிர்பார்த்தது தானே! நிலைமையை ஒரு வழியாகச் சமாளித்து, தலையில் வழிந்த இரத்தத்தையும் பொருட்படுத்தாமல் எழுந்தான்.

பக்கத்து இருக்கையில் இருந்த இரண்டு பெண்களின் கழுத்தில் உள்ள நகைகள், அவன் கைக்கு மாறின. சத்தமின்றி பின் வழியே கீழே இறங்கினான். கீழே, காய்கறிக் கூடையுடன் ஒரு பெண் பிணமாய்க் கிடந்தாள்! உற்றுப் பார்த்தான்.

"ஐயோ.." தலையில் அடித்தபடி அலறினான். ஆம்.. அந்தப் பெண், அவன் மனைவி ரேணுகாதான்.

# நிதர்சனம்

ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

பங்குனி உக்கிரம் பாடாய்ப்படுத்தியது. தகிக்கும் வெயிலிலும் கிற்றாண்ணா- அதுதான் ரியூட்டரி பாஷையில் குகன்சேர்... சிட்டாய்ப் பறந்தான் கல்முனை நோக்கி. பின்னால் பிரனீத் வேறு தொற்றிக் கொண்டிருந்தான் கொசு போல.

ஓடையும் வாவியும் வங்காள விரிகுடாவும் சூழ்ந்துகிடக்கிற இந்த மணல் திடலில் இப்படி உக்கிரமெண்டால்... சமுத்திரக் காற்றேயில்லாத இடங்களில்.....?? நினைவு தீய்த்தது.

"உன்னத்தான் தேடிட்டு வாறன்!" ராமானுஜன் பரபரப்பாய் வந்து சேர்ந்தான்.

"எதுக்குடா?"

"ஊரைப்பற்றியொரு கவித எழுதணும்."

"ப்சோ... நானாடா? தொலைஞ்சுதுபோ, ஊர்ல கலைப்பிரிவில தமிழ்ல ஏபி எண்டு தூள்கிளப்புற இலக்கிய எவரெஸ்ட்டெல்லாம் இருக்கிறப்போ.... போயும் போயும் என்னட்ட வந்து... சே உன் புத்திக்கு பழஞ் செருப்பால் சாத்தோணும் ஓடுடா... ஓடிப்பற."

"ஷ்.... பொத்துவாய்.... உடனே வேணும்.... மிச்சமாய் கதையாத." சரக்கென்று என் கையிலிருந்த புத்தகத்தைப் பறித்தான்.

'லீகல் சிஸ்டம் ஒவ் சிறீலங்கா.' பீஸ் பீஸாகப் பார்த்தது.

"இதென்ன அக்கிரமண்டா.... வன்முறைக் கலாசாரம்... புத்தகத்த தாடா பரதேசி, எழுதித் தொலைக்கன்"- சாதித்து விட்ட திருப்தி ராமு முகத்தில்.

"என்னடா எழுதணும்? "

"ஊரைப்பற்றித்தான்... எழுது எழுது. தென்னயப் புன்னைய, தாழையக், கீரைய வைச்சி எழுதித் துலைக்காத...."

"ம்..... சொல்லு ஊர் மகிமய."

"வீட்டுக்கொரு வாத்தியாரு, உள்ளதும் வந்ததுமா பதினைஞ்சு டொக்டர்மார்... அரசாங்...."

"நிறுத்துடா புலம்பல. இதவைச்சி என்ன எழுதணும்?"

"ம்.... சொல்றன் கேளு அடுத்த வியூவில- மூன்று பாடசாலை, பத்துக் கோயில்கள்.... வேற.... வேற"

"என்ன மாப்ளே ஆஸ்பத்திரி இல்லையா...?"

"ஏன் இல்ல பக்கத்தூரில இருக்கே அதுவும் தரமுயர்த்தப்பட்டு."

"ஏண்டா பரதேசி! அடுத்த ஊர்ல இருக்கிறது இந்த ஊருக்குச் சேர்த்தியாகுமா?"

"ஆகும்.... ஆகும், ரெண்டூருக்கும் பொது தானே! நமக்குள் எதுக்கு பிரிவின?"

"மடையா... ராவிருட்டில ஒரு வருத்தம் வாதையெண்டா அடுத்த ஊருக்கு ஓடேலு மாடா...? இடையில ஆனையிறவு மாதிரியொரு முகாம் கிடக்கிறது மண்டைல இல்லையா... தடைதாண்டிப் போகுமட்டும் வருத்தம் பொறுத்துக்குமா...?"

"நானிப்ப சொல்றன்ல... அங்க இருந்தா இங்க இருந்த மாதிரித்தான். ம்.... சப்ஜெக்ட் மாறு... விடு கதய.... எழுது கெதியா-"



"வங்கக் கடலாட அலையெழும் கிழக்கே
வாவிக்கரை நீளும் ஊரோரம் மேற்கே"

"ம்....ம்....க்குயிக் க்குயிக்," கிண்ணயக் கெழுத்திய கூனிய வைச்சி எழுதி மானத்த வாங்கப் போறாபோல கிடக்கு....எனக்கு வேணும்...இதுவும் வேணும் இன்னும் வேணும்."

"இதுதாண்டா இயற்கை வளம்.... என்னோட வியூவல் இதுகள் தாணடா தெரியுது பிரமிப்பாய். என்னடா வெக்கம் இயற்கைக் கொடையை சொல்றதுக்கு?"

'புன்னை மரங்கள் பூச்சொரிய
தென்னைகள் தெம்மாங்கு பாட
கிண்ணம் பழம் கூட சுவைக்கும்
கெழுத்தியும் நிறைவாக கிடைக்கும்'

"ம்..... எழுது... இன்னும் ரெண்டு அடி."

'வங்கக் காற்று வந்தாட்ட
வாவியின் மீன் கவிதைகள் பாட
கூனி நடனங்களாடும்....'

"ச்சேக்... முடி.... முடி போதும்டா சாமி."

"பொறுடா.... இன்னும் கொஞ்சம்.
'வீட்டுக்கொரு வாத்தியாரு-
கல்வியொளி காட்டுவாரு
அடுத்தவூரு ஆஸ்பத்திரி-
ஆபத்துக்குதவாது
பத்துக்கோயில் நிறைஞ்சிருக்கு-
விளையாட்டுக்குத் திடலிருக்காது
பக்கத்தூர் லைப்ரறி-
படிப்பதற்குதவாது."

"என்னடாப்பா பிச் மாறிப் போகுது? வெட்டு வெட்டு! கடைசி நாலு வரியையும் வெட்டுடாப்பா நெகட்டிவ்வா கிடக்கு சே-"

"நிறைவோட குறைவும் எழுதுறதானேடா தர்மம்?" ராமு ஓடிவிட்டான்.

நேரம் நழுவி இருள் கவிந்தது. இனி ஊர் அடங்க பூட்ஸ் ஒலிகள் மட்டுமே பூதாகாரமாய் ஒலிக்கும். மயான அமைதிக்குள் ஊர் புதையும். வீல் என்ற அலறல் செவிப்பறை தொட்டது. பட்பட்டென்று ராமானுஜன் வீட்டு மின்குமிழ்கள் எரிய ஆரம்பித்தன.

ராமுவின் தாய்க்கு பிரசவவலி கண்டதும் அயல் கூடியது. தெருநாய்கள் ஓலமிட ராமு தீப்பந்தம் பிடித்து வெளியில் ஓடினான். ஆட்டோ.... டாக்ஸி..... ஊஹூம் கரத்தைதான்வந்து சேர்ந்தது. பிரசவ அவஸ்தையோடு கரத்தை நகர்ந்தது. தடைமுகாம் அண்மித்து, தீப்பந்தம் காட்டிச் சைகை செய்து, உத்தரவு வரும்வரை துடியாய்த் துடித்து சோதனைச்சாவடியின் வேதனை தாண்டி அடுத்த ஊர் ஆஸ்பத்திரி அடையும் போது- பிரசவம் தவறிவிட்டிருந்தது.

கரத்தை பிரேதவாகனமாகி ஊர் மீண்ட போது ராமு தலையிலடித்துப் புலம்ப ஆரம்பித்தான். இன்று கூட என்னோடு எத்தனை வாக்குவாதப்பட்டான். "அடுத்தவூர்ல எவ்வளவு பெரிய ஆஸ்பத்திரியிருந்தும்... ஊர்ல ஒரு கிராமியவைத்திய சாலையாவது இல்லாமல் போனது எவ்வளவு துரதிஷ்டவசமானது." எனும் உண்மை சுட்டிருக்க வேண்டும். இனி அலறி என்ன? அழுதென்ன?



# இலக்கிய நயம்

## தருவது - ரசிகன்

# அவனுக்கு மருந்து

அரங்கம் நிரம்பிவழிந்தது. முத்தமிழில் ஒன்றான நாடகம்மீது பிரிய முள்ளவர்கள் பெரும் திரளாக கூடியிருந்தனர்.

ஒரு சிலர் தவிர அனைவருமே படைவீரர்கள்.

களம் சென்ற களைப்புடன், ஆனால் வெற்றியுடன் திரும்பி வந்தவர்கள் அவர்கள்.

களைப்பை விரட்ட களியாட்டங்கள் நடைபெற்றன. நாடகமும் அதிலே சேர்ந்து கொண்டது.

படைவீரர்களில் பாதிப்பேர் தங்கள் துணைவியருடன் வந்திருந்தனர். மீதிப் பேர் காதலியர்களுடன் வந்திருந்தனர்.

திரை விலகிற்று.

நாடகம் தொடங்கிற்று!

தளபதி சேரமானும் தன் துணைவி பூங்கோதையோடு வந்திருந்தான். இருவருக்கும் தனியாசனம் தரப்பட்டது. வேண்டாம் என்று புறக்கணித்து படைவீரர்களுடன் தரையில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தான் தளபதி.

நாடகம் இளம் காதலர்களுக்கு பிடித்தமான வகையில்தான் நயமாக உருவாக்கப் பட்டிருந்தது.

களம் சென்று திரும்புகிறான் காதலன். மார்பிலே வேல் பாய்ந்த காயம். காதலி கண்டுவிட்டாள். கலங்குகிறாள்.

"வலித்ததோ மிகவும் வலித்ததோ?" என்கிறாள்.

"முதலில் வலித்தது. பின்னர் இனித்தது?" என்கிறான்.

"இனித்ததா? எப்படி?"

"வேல் பட்ட மார்பில் உன் விழி பாயும். காயம் கண்டபின்னர் உன் இதழ் பாயும்! கனியிதழ் வருடி களிப்பேற்றும்! அந்த நினைப்புத்தான் எழுந்தது. நெஞ்சுக்குள் இனித்தது!" என்றான்.

நெருங்கினாள். மார்பில் குனிந்தாள். காயம் பட்ட மார்பில் கனியிதழ் தவழவிட்டாள். அவன் கூந்தல் கோதினான்.

கட்டுண்டனர். களிப்பில் மெய் மறந்திருந்தனர்.

"பிரிவின் வேதனை உறவில் இனிக்கும்! உறவின் பெறுமதி பிரிவில் தெரியும்! பிரிந்த பின் கூடுதலில் பேரின்பம் பிறக்கும்!" பாடல் ஒலித்தது.

"காத்திருந்து காத்திருந்து கண்களுக்கு வலித்தது. நாள் கணக்கிட்டு மாய்ந்ததில் விரல் தேய்ந்தது! தூங்காமல் விழித்திருந்து நினைத்ததில் நெஞ்சு கனத்தது! அணைந்திருந்த நினைப்பிலே ஏங்கியதில் உடல் சிறுத்தது!" பாடல் பிரிவின் துயரத்தை பறை சாற்றியது.

"கண்கள் இனி படபடக்கும்! விரல்கள் இனி துருதுருக்கும்! நெஞ்சுக்குள் பட்டாம்பூச்சி சிறகடிக்கும்! காமன்கணை பட்டதால் சிறுத்த உடல் செழித்துவிடும்!"

பாடல் பரிகாரமும் சொன்னது.

நாடகம் முடிந்தது. திரை விழுந்தது. நாடகம் கண்டவர் நெஞ்சில் அலை எழுந்தது. ஆசை அலை.

இல்லம் திரும்பிய தளபதி கதவுதிறந்து மூடமுன்னரே பூங்கோதையின் கன்னத்தைக் கிள்ளினான்.

"வெற்றிலைக் கொழுந்தை கிள்ளியது போல இருக்கிறது." என்றான்.

"அடிபோடுவது எதற்கென்று எங்களுக்குத் தெரியாதாக்கும்!" உள்ளே ஓடி விட்டாள்.

பின்னால் துரத்திப் போனான்.

"ஆடைமாற்றவேண்டும்!"

"நானும் ஆடைதான், என்னை அணிந்து கொள்!" என்றான்.

"என்ன அவசரம் இன்று! எதற்கும் ஒரு நேரம் உண்டு."

"நேரம் காலம் பார்த்தோ நெஞ்சில் நெருப்பெரியும்? வீடு பற்றி எரியும் போது கால நேரம் பார்த்தோ நெருப்பணைக்க முடியும்?"

"உங்களோடு பேசி வெல்ல முடியாதப்பா!"

அணைக்க அனுமதித்தாள். கைகளில் அவளை ஏந்திக்கொண்டான். கட்டிலில் பூவைப்போல போட்டு விட்டான். குனிந்து நெற்றியில் இதமாய் முத்தமிட்டான்.

அவன் கழுத்தை வளைத்து உதடுகளை தன் இதழ்களால் உண்ணத் தொடங்கினான்.

இதுவரை பிடிகொடாமல் நழுவி, அவன் ஆசைத்தீயை விசிறிவிட்டவள் இப்போது தன் பிடிக்குள் அவனை மூச்சுத் திணறவைத்தாள்.

'இதுதானே கேட்டாய்! இதற்காகத்தானே துடித்தாய்! உனக்குள் மட்டுமா நெருப்பு! எடுத்துக்கொள். எனக்கும் தா!' பெண் காட்டும் பிரியம் ஆணைக் கட்டிப் போட்டு விடுகிறது.

தளபதி அந்த நிலவை ஆடைகளில் இருந்து சிறைமீட்டான். விழிகளுக்கும் போதையேறியது.

"எல்லாமே எனக்குத்தானே!" என்றான்.

"நாளைக்கும் மீதி வையுங்கள்!" என்றாள் குறும்பாக.

"தினமும் கனி மலரும்! நாளைக்கும் பூ மலரும்! நாவினிக்கும் தேன் சொரியும்! காலமெல்லாம் களிப்பூறும்! கவலை இல்லை எனக்கு!" என்றான். மகிழ்ந்து அவனை இறுக்கிக் கொண்டாள்.

நிலாவை மூடியது மேகம்.

நிலா வசப்பட்டது. அவன் மனதுக்குள் வியப்பை வீசியது.

மேகம் விலகியது. நிலா வெட்கப் பட்டது.

"பூங்கோதை!" என்றான் போதை தெளியாத குரலில்.

"ம்..."

"பிரிவின் வேதனை உறவில் இனிக்கும் என்பது சரிதானே?"

அவள் பதில் சொல்லவில்லை. 'ஆம்' என்று சொன்னால், பிரிவை வரவேற்பதாகிவிடும்.

'இல்லை' என்று சொன்னால், அனுபவித்த சுகத்தை மறுப்பதாகி விடும்.

அவள் மௌனம் காக்க, அவனே பேசினான்.

"போரிலே கலந்தேன் என்றாலும் அத்தனை நாளும் நான் நோயிலேதான் இருந்தேன்!"

அப்போதுதான் பூங்கோதை பதறிப் போனாள்.

"என்ன.. நோயில் இருந்தீர்களா? எனக்கு ஏன் முதலிலே சொல்லவில்லை! இன்பத்தை மட்டும் பகிரத்தான் நான் வாய்த்தேனா?" சோகத்தோடு கோபமும் கலந்தது.

"நோய்க்குக் காரணமே நீதானே!" என்றான்.

"என்ன?"



"நோயாலே என்னை வருந்த வைத்தாய்! இப்போது மருந்தும் தந்தாய்! இப்போது தெரிகிறதோ என்ன நோய் என்னைத் துரத்தியது, தூங்கவிடாமல் வருத்தியது என்று?"

அவளுக்குப் புரிந்தது. புன்னகை விரிந்தது. கூடவே இரு கரங்களும் விரிந்து அவனை கோட்டைக்குள் இழுத்தது.

மறுபடியும் மருந்தா?! இனிப்பான மருந்தை மறுக்கவோ போகிறான்.

நமக்கென்ன, நாம் திருவள்ளுவர் என்ன சொல்கிறார் கேட்போம்.

**"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன் நோய்க்குத் தானே மருந்து"**

**நோய்களுக்கு மருந்து வேறு பொருட்களாக இருக்கின்றன. ஆனால் அணிகலன் அணிந்த இவளால் வளர்ந்த நோய்க்கு இவள்தான் மருந்துமாவாள்.**

அதிகாரம்-111. குறள். 1102.

## குறுக்கெழுத்துப் போட்டி இல–148

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | | 2 | | | ■ |
| 3 | | | | | ■ | 4 |
| ■ | | ■ | | ■ | 5 | |
| 6 | | | ■ | 7 | | |
| | | ■ | 8 | | ■ | |
| | ■ | ■ | | | ■ | |
| | ■ | 9 | | | | |

### இடமிருந்து வலம்

01. திங்களொரு முறை நிறைவெய்தித் தோன்றி எல்லோரையும் மகிழ்விக்கும்.
03. உடலில் ஏற்படும் பலதரப்பட்ட நோய்களுக்கு இதன் விதை தரும் எண்ணெய் ஓர் அருமருந்து.
06. எக்காரியத்தையும் இதில்லாமல் செய்து முடிக்க வேண்டும்.
07. குறை நிறை காண உதவும்.
09. கொழும்பிலுள்ள ஒரு வரலாற்றுப் பெருமைமிக்க இடத்திற்குரிய பெயரின் இறுதியில் இணைந்துள்ளது.

### மேலிருந்து கீழ்

01. இதனைக் காண முடியாததனால்தான் போர் தொடர்கிறது.
02. அடர்ந்த காட்டில் இது தெரியாமல் அலைந்தவர்களும் உண்டு.
04. சில மருமகள்களை, மாமிமார் இது பிடித்தவள் என்று திட்டுவார்கள்.
05. ஆதாமிடமிருந்து இதன் ஒரு பகுதியை எடுத்துத்தான் ஏவாளை இறைவன் படைத்தாராம்.
06. சங்ககாலப் பெண் புலவர் ஒருவரை இப்படி மரியாதையாக அழைப்பார்கள்.
07. இந்தியாவில் இருந்து வெளிவரும் ஒரு வார இதழ்.
08. கவின் கலைகளில் இதுவும் ஒன்று.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 20.04.1996 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-148
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-146ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தெ | ன் | ற | ல் | ■ | 2 வ | லை |
| லு | ■ | 3 அ | 4 கோ | ர | ம் | ■ |
| ங் | ■ | க | ப் | ■ | சா | 5 வி |
| 6 கு | றி | ப் | பு | ■ | வ | ய |
| ■ | ■ | பை | ■ | 7 கி | ளி | ப் |
| ■ | 8 ப | ■ | 9 கு | ரு | ■ | பு |
| 10 க | ல் | க | த் | தா | ■ | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 146இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. எம். தயானந்தன், மொரட்டுவ.
2. ஷாலினி புஷ்பநாதன், வவுனியா.
3. எம். மஹ்ரூப், கொழும்பு-12
4. திருமதி. ஹம்ஸியா ஜவ்பர், வெலிகந்த.
5. செல்வி.ஆர். ரதினி, வாழைச்சேனை.
6. என். திலக் வெங்கடேஷ், ஹல்தும்முல்லை.
7. எல். இர்பான், அக்கரைப்பற்று-01
8. எஸ். சந்திரகாந்தன், ஹட்டன்.
9. ஷதீலா மும்தாஜ் முஹாஜிதீன், ஹந்தஸ்ஸ.
10. திருமதி. ரி. பாக்கியலட்சுமி, மத்துகம.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# மறுபடி எழும் பாகிஸ்தான் அணி

# இலங்கை அணி தளர்வது ஏன்?



பாகிஸ்தான் அணிக்கு இம்ரான்கானுக்குப் பின்னர் சிறந்த கப்டன் ஒருவர் கிடைத்திருக்கிறார். அவர்தான் அமீர் சொகைல். அவரது தலைமையில் பாகிஸ்தான் அணி மறுபடி உயிர்த்தெழுந்துவிட்டது.

சிங்கர் கிண்ணத்தை பாகிஸ்தான் வசப்படுத்தியதற்கு அமீர் சொகைலின் அதிரடியான தலைமைதான் முதல் காரணம். பாகிஸ்தானின் வெற்றி, கப்டனின் வெற்றி.

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களை, பந்துவீச்சாளர்களை திடீர் திடீர் என்று மாற்றி திணறவைத்தார் அமீர் சொகைல்.

சனத் ஜெயசூரியா விளாசிக் கொண்டிருந்தபோது பாகிஸ்தான் அணி வாழ்க்கையே வெறுத்துப்போனது போல் காணப்பட்டது.

17 பந்துகளில் 50 ரன்களை குவித்து மஜிக் காட்டினார் ஜெயசூரியா.

பந்து வீச்சாளர்களை மாற்றிப் பார்த்தார் அமீர் சொகைல். ஜெயசூரியா அசரவில்லை. விளாசல் தொடர்ந்தது.

வாக்கார் யூனூஸ் வீசிய முதல் ஓவரில் ஜெயசூரியா விளாசியதால், அவருக்கு ஓய்வு கொடுத்திருந்தார் அமீர் சொகைல்.

பின்னர் மீண்டும் அவரை அழைத்து பந்துவீச வைத்தார். கணக்குத் தப்பவில்லை. வாக்கார் யூனூஸின் பந்தில் மாட்டினார் ஜெயசூரியா. 76 ரன்களோடு ஜெயசூரியா அவுட்டானதும் உற்சாகம் பீறிட்டது பாகிஸ்தான் அணிக்கு.

தொடர்ந்து உத்வேகமான பந்துவீச்சு. ஆவேசமான பந்து தடுப்பு.

ஒரு ஓவருக்கு மூன்று நான்கு ரன்கள் வீதம் அடித்தாலே போதும் என்ற நிலை இருந்தும், இலங்கை அணியை எழவிடவில்லை.

அரவிந்த டி சில்வா நிதானத்தை கைவிட்டு சிக்ஸர் அடிக்க பந்தை எதிர்நோக்கி முன்னே நகர்ந்தார். ஸ்டம்ப்பில் அவுட்டானார்.

உலக சாம்பியன் அணி மிகப் பரிதாபமாக திணறிக்கொண்டிருந்தது.

குமார தர்மசேனாவின் காலில் பட்டுப் போன பந்தை பிடித்து பாகிஸ்தான் அணி அப்பீல் செய்தது. நடுவர் சரியாகக் கவனிக்காமல் அவுட் கொடுத்தார். வர்ணனை செய்து கொண்டிருந்த சுனில் கவாஸ்கர் அவுட் கொடுக்கப்பட்டது தவறு என்று கருத்துச் சொன்னதை கேட்கக் கூடியதாக இருந்தது.

ஜெயசூரியா அவுட்டானதும் இலங்கை அணியின் துடிப்பு இறங்கத் தொடங்குவது போலவே சிங்கப்பூரில் நடைபெற்ற சகல போட்டிகளிலும் இலங்கை அணியின் துடுப்பாட்டம் அமைந்திருந்தது. இலங்கை அணியிடம் காணப்படும் வழக்கத்திற்கு மாறான திடீர் மாற்றம் புதிராக இருக்கிறது.

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் போட்டியிலும் ஜெயசூரியாவும் குமார தர்மசேனாவும் தான் திறமையாக ஆடினார்கள். ஏனையவர்கள் துடுப்பாட்டத்தில் சோபிக்கவில்லை. ஜெயசூரியாவின் சாதனை அமர்க்களத்தில் அதனை யாரும் கவனிக்கவில்லை.

இந்திய அணிக்கு எதிராக ஜெயசூரியா வழக்கமாக தாக்குப் பிடிப்பதில்லை. ஸ்ரீநாத்தின் பந்துக்கு இரையாகிவிடுகிறார்.

அன்றும் ஜெயசூரியா அவுட்டான பின்னர் இலங்கை அணி கோட்டைவிட்டது. மஹாநாம மட்டுமே ஒட்டிக்கொண்டு சமாளித்தார்.

இறுதிப் போட்டியிலும் தமது துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட தளர்வை இலங்கை அணி சீராக்கத் தவறியதுதான் சோகம்.

உலக சாம்பியன் அணிக்குரிய துடிப்போடு விளையாட இலங்கை அணி தவறிவிட்டது என்பது மட்டும் உண்மை.

வெற்றி-தோல்வி சகஜம்தான். போராடித் தோல்வியடைவது கௌரவம். துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை இலங்கை அணி போதியளவு போராடவில்லை.

உலகக் கிண்ணப் போட்டியில் ஆடியதால் அணி களைப்படைந்திருக்கிறது என்று கூறப்படலாம்.

இலங்கை அணியை வெற்றிகொண்ட இரு அணிகளுமே உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடியவை என்பது அந்தக் காரணத்தை பலவீனமாக்கிவிட்டது.

தவிர, சிங்கப்பூரில் சாதனை மேல் சாதனை படைத்த ஜெயசூரியாவும் உலகக் கிண்ண போட்டியில் விளையாடிய வீரர் தானே?

கோளாறு எங்கே? என்று இலங்கை அணி கண்டுபிடித்து தன்னைச் சீராக்கிக் கொள்ளவில்லையென்றால் கொடுத்த அடிகளையெல்லாம் திருப்பி வாங்கவேண்டியதாகிவிடும்.

# நெருக்கடியில் இம்ரானின் சீடர்



உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியாவிடம் பாகிஸ்தான் தோற்றது ஏன்? விசாரணைக் கமிஷன் போட்டிருக்கிறார் பாகிஸ்தான் பிரதமர்.

இந்திய தொழிலதிபர் ஒருவரிடம் இம்ரான் கானுடன் சென்று பணம் வாங்கிவிட்டார் வாசிம் அக்ரம் என்றும், அதனால்தான் இந்தியாவுக்கு எதிராக அவர் விளையாடவில்லை என்றும் குற்றச்சாட்டு கிளம்பியிருக்கிறது.

பெனாசிர் பூட்டோவுக்கு அரசியல் ரீதியாக இம்ரான்கான் பரம விரோதி. இம்ரான்கானின் சீடர் வாசிம் அக்ரம்.

இம்ரான்கான் பாகிஸ்தான் அரசியலில் எந்நேரமும் குதிக்கலாம் என்ற நிலை இருக்கிறது.

அப்படி அவர் அரசியலுக்கு வந்தால் பெனாசிர் பூட்டோவுக்கு ஆபத்து.

அதனால் இம்ரான்கானை அவுட்டாக்க வாசிம் அக்ரம் என்ற விக்கெட்டுக்கு, விசாரணைக் கமிஷன் என்ற பந்தை வீசியுள்ளார் பெனாசிர்.

இந்தியாவிடம் பாகிஸ்தான் தோற்றுப் போனதால் கொதித்துப் போன பாகிஸ்தான் இரசிகர்களிடம் தனது குற்றச்சாட்டு எடுபடும் என்று நினைத்தார் பெனாசிர்.

"நாட்டுக்காக விளையாடிய எனக்கு, இதுதான் பரிசா?" என்று வேதனையோடு கேட்கிறார் வாசிம் அக்ரம்.

இதற்கிடையே சிங்கப்பூரில் இந்தியாவை பாகிஸ்தான் வென்றுவிட்டது. பாகிஸ்தான் இரசிகர்களின் கோபம் ஓரளவு தணிந்துவிட்டது. அதேசமயம், வாசிம் அக்ரம் இருந்தால்தான் அணி வெற்றிபெறும் என்ற நிலையும் இல்லாமல் போய்விட்டது.

"வாசிம் அக்ரமின் எதிர்காலம் என்ன? மீண்டும் அணியில் இடம்பெற அரசியல் தலையீடு தடையாகுமா?" போன்ற கேள்விகள் எழுந்துள்ளன.

வாசிம் அக்ரமுக்கு அரசியலில் ஈடுபாடு கிடையாது. இம்ரான்கானை அவருக்குப் பிடிக்கும். அதனால் தனது எதிரியின் சீடனை பெனாசிருக்குப் பிடிக்கவில்லை.

# இராமாயணம் அங்கம் 28

## விமோசனமடைந்த விராதன்

இராமர், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் சித்திரகூடத்திலிருந்து அன்று அதிகாலையில் புறப்பட்டனர், கதிரவன் உதயமாகும் தருணத்தில் எங்கும் பனியும் குளிரும் படர்ந்திருந்தது. பறவையினங்கள் இனிமையாக இசைகூட்டி ஒலி செய்து ஆதவனை வரவேற்றன. முயல், மான், அணில் போன்ற சிறு பிராணிகளும் தாவித்தாவி ஓடி ஆடி மகிழ்ந்து திரிந்தன. எங்கும் பூத்துப் புதுமணம் பரப்பும் மலர்களும், அலர்ந்து, கதிரவனின் புத்தொளியைத் தொட்டுவிடும் துடிப்புடன் களிநடம் புரிந்தன.

இயற்கை அரசி எழிலாகக் கொலுவிருக்கும் அக்காட்சி மூவரையும் மகிழ்ச்சிக் கடலாட்டியது. ஆண்கள் இருவரையும் விட இந்த உதயகால அழகினால் அகமகிழ்ந்தவள் சீதாதான். மலர்ந்தும் மலராத பருவத்தின் விளிம்பில் அலர ஆயத்தமாகிக்கொண்டிருந்த அழகிய பல வர்ணமலர்களை ஓடி ஓடித் தேடி எடுத்தாள். தன்தலையில் சூடுவாள். வேறோர் மலரைக்கண்டதும் அதனைக் கொய்து தலையில் சூடும் போது ஏற்கனவே இடம் பிடித்திருந்த பூ வீசப்பட்டு விடும். இத்தகைய பேரின்பம் அரண்மனை வாசத்தில் எங்கே கிடைக்கப் போகிறது? என்று அவள் உள்ளத்தில் வினாக்களாக வெளியேறின. இத்தகைய பேரானந்தத்தைத் தனக்களித்த தன் கணவனை கடைக்கண்ணால் பார்த்து, பார்வையிலேயே நன்றி கூறினாள்.

களைப்பே தெரியாமல் நடந்த மூவரும் மதியம் அத்திரி முனிவரின் ஆசிரமத்தை அடைந்தனர். அவரும் அவருடைய தர்மபத்தினியான அனுசூயாவும் மூவரையும் வரவேற்று உணவு கொடுத்து உபசரித்தனர். அனுசூயா கணவனையே கண்கண்ட தெய்வமாக் கருதும் பதிவிரதை. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரையுமே குழந்தைகளாக்கித் தொட்டிலிலிட்டுத் தாலாட்டியதாகவும் ஒரு கதையுண்டு. அத்தகைய அனுசூயாதேவி சீதையை வரவேற்று வஸ்திரம், மஞ்சள், குங்குமம், பூ போன்ற மங்கலப் பொருட்களைக் கொடுத்தாள். "எத்தகைய துன்பத்திலும் இன்பத்திலும் கணவனைவிட்டுப் பிரியாதிருப்பதே பெரும் பாக்கியம்." என்று போதித்தார். ஆனால் சீதையோ, "என் கணவன் என்னை எக்குறையுமில்லாமல் காக்கும்போது எனக் கென்ன துன்பம்?" என்று பதிலிறுத்தார். முனிவரின் ஆசியைப் பெற்றுக் கொண்டு தெற்கே செல்ல சுலபமான வழியினையும் கேட்டறிந்து கொண்டு மூவரும் புறப்பட்டனர்.

### ஆரணிய காண்டம்

இராமபிரானின் பாதுகையைப் பெற்ற பரதன் அயோத்தி திரும்பியதும் சித்திரகூடத்தில் தொடர்ந்து வாசம் செய்வதைவிரும்பாத இராமர் தென் திசை நோக்கிப் புறப்பட்டு அத்திரி முனிவரின் ஆசிரமம் வந்து அவரிடம் ஆசிபெற்றுப் புறப்படும் வரையான கதை வால்மீகி இராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் இடம் பெறுகிறது. ஆனால் கம்பநாட்டாழ்வாரின் இராமாயணத்தில் அத்திரி முனிவரைத் தரிசிப்பது ஆரணிய காண்டத்தின் தொடக்கமாக அமைகிறது.

○ ❄ ●

இராமரும் சீதையும் இலக்குவனும் வடக்கேயிருந்து தென் திசைக் காடுகளுக்குள் பிரவேசிக்கும் போது நிலவள அமைப்பின் வித்தியாசங்களைக் கவனித்தனர். இயற்கை அமைப்பான வனவளம், பயிர்வளம், நீர் வளம் ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க மாறுபாடுகளை அவதானித்தனர்.

இப்பொழுது அவர்கள் பயணம் செய்த காடு மிகவும் அடர்த்தியாக இருந்தது. வன விலங்குகளும் வான்பறவைகளும் கூட வித்தியாசமாகப் பட்டன. யானை, புலி சிங்கம், சிறுத்தை, ஓநாய் போன்ற கொடிய விலங்குகளும் தென்பட்டன.


இதற்கிடையில் தெய்வீக மந்திர ஒலி எழும் சப்தம் காற்றுடன் தவழ்ந்து வருவதைக் கேட்டனர். அவ்வொலிவந்த திசையில் சென்று பார்த்தபோது, அங்கு பல நூற்றுக் கணக்கான முனிவர்கள் ஒன்றாக அமர்ந்து மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்தனர். முனிவர்கள் இம்மூவரையும் கண்டதும் ஓடோடி வந்து வரவேற்று உபசரித்தனர். இராமர் யார் என்பதனை எவ்வித விசாரணையுமின்றி அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

### விராத வதம்

இரண்டொரு நாட்கள் அம்முனிவர்களின் ஆசிரமத்தில் தங்கி அவர்களுடைய விருந்தோம்பலில் மகிழ்ந்திருந்துவிட்டு மூவரும் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தனர்.

சற்றுத் தூரம் சென்றதும் இனம் புரியாத துர்நாற்றம் மூவரின் சுவாசத்தையும் கெடுத்தது. இலக்குவனுடைய கணிப்பின்படி ஏதோ ஒரு பேராபத்து நேரப் போகிறது உறுதி செய்யப்பட்டது. இராமரும் இலக்குவனும் தங்கள் வில்லில் நாணேற்றி அம்புகளையும் செருகியவர்களாக சீதையை நடுவில் வரும்படி அரண்செய்து கொண்டு நகர்ந்தனர்.

எதிர்ப்பார்த்தது போலவே பயங்கர ஒலியினை எழுப்பிக் கொண்டு ஆகாயத்தைத் தொட்ட வண்ணம் ஓர் இராக்கத உருவம் தோன்றியது. "யாரடா மாநிடப் பதர்களே! என்னுடைய ஆதிக்கத்துக்குள்ளான இப் பகுதிக்குள் பயமின்றிப் புகுந்துவிட்ட உங்களை என் பசிக்கு இரையாக்கப் போகிறேன்," என்று அந்த இராக்கத உருவம் கர்ஜித்தது. "இயற்கையான இக்கானத்துக்கு



உரிமை கொண்டாடும் நீ யார் என்று முதலில் கூறடா?" என்று மறு வினாத்தொடுத்தான் இலக்குவன்.

"என்னிடமா வினாத் தொடுக்கிறாய்? ஜயன் என்ற அரக்கனுக்கும் சத்ருதை என்ற அரக்கிக்கும் மகனான நான்தான் விராதன். இங்கு திரியும் முனிவர்கள்தான் எனது சிறப்புணவு. நீங்களும் சடாமுடியும்-மரவுரியும் கொண்ட முனிவர்கள் போல் தோன்றுகிறீர்கள். இருப்பினும் சிறுவர்களைப் போலிருக்கிறீர்கள்? அது யார் அந்த அழகான சிறுமி? அவளை என்னிடம் ஒப்படைத்து விட்டுத் தப்பி ஓடிவிடுங்கள். அல்லது இருவரும் எனக்கு ஆகாரமாகிவிடுவீர்கள்."

இவ்வாறு கூறிய அரக்கன் விராதன் தனது ஒரு கையை நீட்டி சீதையைப் பிடித்துக் கொண்டான். இதனைக் கண்ணுற்ற இராமர் எதுவும் செய்வதறியாது திகைத்து நின்றார். அதுவரை அவருக்குக் கோபமே வந்ததில்லை. சீதையை அரக்கன் பிடித்ததும் திகைத்துச் செயலற்று நின்றார். ஆனால் இலக்குவனோ கடுங் கோபம்கொண்டு கொதித்தெழுந்தான். இராமரின் தடுமாற்றத்தைப் போக்கி நிலமையைத் தெளிவுபடுத்தினான். சுய உணர்வு பெற்ற இராமருக்கு அப்போதுதான் கோபம் உண்டாயிற்று. விராதன் மீது இருவரும் பாணங்களைத் தொடுத்தனர். வேதனைதாங்காமல் விராதன் அலறினான். சீதையையும் தரையில் இறக்கி விட்டு தரையில் சாய்ந்தான்; எனினும் உயிர் போகவில்லை.

### சாப விமோசனம்

திடீரென எழுந்தான். இராமரையும் இலக்குவனையும் இருகைகளாலும் தூக்கி எடுத்து தன் இருதோள்களிலும் வைத்துக் கொண்டான். அடர்ந்த கானகத்துள் நுலைந்தான். இதனைக் கண்ட சீதை கலக்கமுற்றாள். இந்தத்தருணத்தை இராமரும் இலக்குவனும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அவனுடைய தோள்களையும் தங்கள் வாளால் வெட்டினர். அடியற்ற மரம் போல் விராதன் மீண்டும் சாய்ந்தான். இராமர் தன்னுடைய வலது காலை அவனுடைய கழுத்தில் வைத்து அழுத்தினார். அப்பொழுது "ஐயனே! என் சாபத்தைப் போக்கடிக்க வந்த பெருமானே! தங்கள் பாதம் பட்டதும் என் சாபம் நீங்குகிறது. என்னைப் பிண்டமாக்கி ஒரு குழிவெட்டிப் புதையுங்கள். அப்போதுதான் எனக்கு சாபல்யம் ஏற்படும். உண்மையில் நான் ஒரு கந்தர்வன். ஒரு முனிவரின் சாபத்தால் அரக்கனாகப் பிறந்தேன். பிரம்மாவிடம் அழியா வரம் பெற்று அக்கிரமங்கள் பலவற்றைச் செய்தேன். தங்களால் என் சாபம் நீங்குகிறது. குழியில் புதைத்தால் என் ஆன்மா மீண்டும் கந்தர்வ லோகம் சென்றுவிடும்," என்று கூவினான்.

இலக்குவனும் ஒரு குழியை வெட்டி விராதனின் பிண்டத்தை அதில் போட்டு மூடினான். அப்போது ஒளி வடிவமாக ஓர் ஆண்உருவம் இராமரை வணங்கிவிட்டு விண்ணில் மறைந்தது.

### சரபங்கரின் முடிவு

இதனைத் தொடர்ந்து வேறு இடையூறுகள் எதுவுமின்றி மூவரும் சரபங்க மாமுனிவரின் ஆசிர மத்தைச் சென்றடைந்தனர். அம்முனிவரும் இராமரின் தரிசனத்துக்காகவே காத்திருந்தார். இராமரைக் கண்டதும் "உன் தரிசனத்துக்காகவே காத்திருக்கிறேன். நான் விண்ணகம் செல்வதற்கு முன்னரே உன்னைக்காண வேண்டும் என்ற அவாவுடன் இருந்தேன்; கண்டு விட்டேன் எனக்கு விடைகொடு ராமா," என்றார் இராமரின் அவதார மகிமை தெரிந்த முனிவர் அவர். இராமர் தனது அபயகரத்தைக் காட்டியதும் ஏற்கனவே கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த தீயினுள் சென்று மறைந்து கொண்டார். அவர் தீயுடன் ஐக்கியமாகு முன்னர் இராமலக்குவன் சீதை ஆகியோர் எவ்விடம்-எவ்வாறு செல்ல வேண்டும் என்பதனை விபரமாகக் கூறினார். தண்டகாரண்யத்தில் தவமியற்றும் சுசீட்சண ரிஷியிடம் போகுமாறு கூறினார்.

சுசீட்சணர் அழுக்கடைந்த ஆடையுடன் தியானத்தில் அமர்ந்திருந்தார். இராமர் அம்முனிவரை அணுகியதும் "இராமா! வந்து விட்டாயா? உன்னை எதிர்பார்த்திருந்தேன்; வந்து விட்டாய்." என்று கூறி அம்மூவரையும் வரவேற்று உபசரித்தார், "இராமா! உனது வனவாசகாலம் முடியும்வரை இந்த வனத்திலேயே தங்கலாம், இங்குள்ள முனிவர்கள் உங்கள் மூவரையும் எக்குறையுமின்றிக் காப்பார்கள். காய்கனிவர்க்கங்கள், கிழங்கு வகைகள் மற்றும் மாசற்ற நீர் நிலை கள் அத்தனையும்இங்ண்டு." இவ்வாறு முனிவர் கூறியதை இராமர் ஏற்றுக்கொண்டார். மேலும் அப்பிராந்தியத்தில் வாழ்ந்த முனிவர்களெல்லாம் தவசிரேட்டர்கள். பந்நெடுங்காலம் தவமிருந்து அனுபவங்களைப் பெற்றவர்கள், இத்தகைய ஞானிகளின் சத்தங்கத்தில் இருந்து அவர்களுடன் கருத்துக்களைப் பரிமாற விரும்பியமையினால் இராமர் பத்து ஆண்டுகள் அங்கேயே வாழ்ந்தார். சீதையும் இலக்குவனும் கூட காலம் போவதே தெரியாமல் உன்னதமான தவ வாழ்க்கையை ஏற்றிருந்தனர்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி : 26**

**சரியானவிடை:- அயோத்தி**

1. எல். கதிர்காமச் செல்வி.
குயில் வத்தை தாவி, றொசல்ல, ஹட்டன்.
2. பொ. சரச்சந்திரன்.
கிங்ஸ் புட்ஸ் லிமிட், 146 கட்டுவான வீதி, ஹோமாகம.
3. கி. சியாமளா.
45/6 லூர்த்துமாதாவீதி, சின்ன உப்போடை, மட்டக்களப்பு.
4. செல்வி. டி. வாசுகி.
64/47 மோதர வீதி, கொழும்பு-15.
5. எம்.எம். முஹம்மது ருமைஸ். பாநீஸ் மன்ஸில், புன்னக் குடா வீதி, ஏறாவூர்-03.

**போட்டி இல. 28** கேள்வி:- தன்னைக் குழிவெட்டிப் புதைக்கும்படி இராமனை வேண்டியவன் யார்?

ஏப்ரல்.13க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி – இல.28, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

## பயோடேட்டா



**பெயர்:-** யுத்தம்
**வயது:-** குரங்கிலிருந்து மனிதன் தோன்றிய காலத்திலிருந்து கணக்கிடவும்.
**தொழில்:-** அமைதியைக் கெடுப்பது
**உபதொழில்:-** அகதிகளை உருவாக்குவது
**பிடித்தமான உணவு:-** மனித உயிர்
**கொறித்துக் கொள்வது:-** அபிவிருத்திக்கான பணம்.
**பிடித்தமான பானம்:-** இரத்தம்
**பொழுது போக்கு:-** வெண்புறாவை விரட்டுவது
**ஓய்வு நாட்கள்:-** எப்போதாவது வந்து போகும் போர் நிறுத்த காலங்கள்
**காதலிப்பது:-** ஆயுதங்களை
**ரசிப்பது:-** ஆயுதங்கள் செய்யும் குறும்புகளான அழிவு லீலைகளை!
**கவலைக்குரியது:-** பெற்று வளர்த்தவர்கள் உரிமை கொண்டாட மறுப்பது.
**எதிரிகள்:-** மனிதாபிமானிகள்
**நண்பர்கள்:-** ஆட்சியாளர்கள்
அரசியல்வாதிகள்
ஆயுத வியாபாரிகள்
ஆயுதமேந்துவோர்
**எதிர்கால இலட்சியம்:-** மனிதர்கள் இல்லாத பூமி.

## காதில பூ கந்தசாமி

தமிழ் மக்கள் தங்கள் மௌனத்தைக் கலைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறியிருந்தார். உடனே நமது காதில பூ கந்தசாமி கற்பனைக் குதிரையில் ஏறிவிட்டார்.

## மௌனம் கலைந்தவர் ஊர்வலம் நடத்தினர்

(நமது நிருபர்)

தமிழ் மக்கள் தமது மௌனத்தை கலைக்கவேண்டும் என்று ஜனாதிபதி கூறியிருந்தது தெரிந்ததே.

அதனையடுத்து ஆயிரமாயிரம் தமிழ் மக்கள் ஜனாதிபதி மாளிகையை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

தமது மௌனம் கலைந்துவிட்டதின் அடையாளமாக ஊர்வலத்தினர் கோஷங்களையும் எழுப்பிச் சென்றனர்.

"வடக்கும்-கிழக்கும் ஒன்று, இணைந்த தீர்வே நன்று! நாடு பிரியவும் வேண்டாம். மாகாணப்பிரிப்பும் வேண்டாம்"

தமிழில் கோஷங்கள் ஒலிப்பதைக் கண்டு காவலர்கள் கடும் சந்தேகப் பார்வையை வீசினர். அதனைக் கண்ட ஊர்வலத்தினர் பின்வருமாறு கோஷம் எழுப்பினர்.

"நாமெல்லாம் ஒன்று; மொழி தமிழ் என்றால் புலியென்று பார்ப்பது எதற்கு?"

"அடையாள அட்டையை துருவி, எந்த இனம் என்று பார்ப்பது முறையோ?"

"ஒன்றே நாடு என்றால், வவுனியா தடையை விலக்கு!"

"அன்று-வடக்கு நேற்று-கிழக்கு. இன்று மலையகம். கைதுகள் ஒரே விதம்! அதனால் கசப்புக்கள் வளருது நிதம்!"

போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஊர்வலத்தினர் காவலர்களால் தடுக்கப்பட்டனர். ஜனாதிபதியை சந்தித்து பேச முடியாது என்று அதிகாரி கூறினார்.

"காணவேண்டும். காணவேண்டும். கண்டு நாங்கள் பேசவேண்டும்" என்று ஊர்வலத்தினர் கோஷமெழுப்பினர்.

"மௌனமாக கலைந்து செல்லுங்கள்" என்றார் அதிகாரி.

"மௌனத்தை கலையுங்கள் என்று ஜனாதிபதிதான் சொன்னார்" என்றனர் ஊர்வலத்தினர்.

இறுதியில் ஊர்வலத்தினர் கைது செய்யப்பட்டனர். உர்வலத்தில் புலிகளின் ஊடுருவல் இருக்கலாம் என்று கருதியே



கைது செய்யப்பட்டதாகவும், உடனடியாகவே சகலரையும் விடுதலை செய்து விட்டதாகவும் அதிகாரி தெரிவித்தார்.

"முன்னூறு பேர் வரை காணவில்லை என்று கூறப்படுகிறதே?" என்று நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

"சகலரையும் விடுவித்துவிட்டோம். முன்னூறு பேரை மட்டும் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்துள்ளோம்" என்று கூறினார் அதிகாரி.

இந்தியப்பத்திரிகையான 'இந்து' நிருபர் மாலினி ஜனாதிபதியை தொடர்புகொண்டு கேள்வி எழுப்பினார்..

"மௌனம் கலைந்து வந்த தமிழ் மக்களை கைது செய்தது ஏன்?" என்று கேட்டார்.

ஜனாதிபதி பதில் சொல்லவில்லை. மௌனமாக இருந்தார்.

அதனையடுத்து நேற்று வெளியான 'இந்து' பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**"தமிழ் மக்கள் மௌனம் கலைந்தது. ஊர்வலத்தினர் பொலிசாரால் கைது. இப்போது ஜனாதிபதி மௌனமாகி விட்டார்!"**

## ஜனாதிபதி மௌனத்தை கலைக்க வேண்டும்



கொழும்பிலிருந்து வெளியாகும் பிரபல சிங்கள தினசரி ஒன்றில் வெளியாகியுள்ள ஆசிரியர் தலையங்கம் கீழே தரப்படுகிறது.

"நேற்றுக் காலையில் கொழும்பில் தமிழர்கள் ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். நாட்டை பிரிக்கும் கோஷங்களை எழுப்பியிருக்கிறார்கள்.

தமிழர்கள் தமது மௌனத்தை கலைக்க வேண்டும் என்று கூறியதின் மூலமாக, ஊர்வலம் நடத்துமளவுக்கு துணிச்சலைக் கொடுத்தவர் ஜனாதிபதிதான்.

அதன்மூலமாக தலைநகரை புலிகளுக்கு ஆதரவான தமிழர்களுக்கு தாரை வார்த்து விட்டார்.

துட்டகைமுனு காலத்தில் இருந்து இன்றுவரை யாருமே ஜனாதிபதி செய்தது போன்ற செயலை செய்யவில்லை.

அரசியல் தீர்வு திட்டம் மூலமாக வடக்கு-கிழக்கை புலிகளிடம் ஒப்படைக்கும் காரியத்தையும், மௌனத்தை கலையுங்கள் என்று கூறி தலைநகரில் புலிகளுக்கு சார்பான தமிழர்களின் குரல் ஓங்கக் கூடிய காரியத்தையும் செய்துவிட்டார் ஜனாதிபதி.

நாட்டுப்பற்றுமிக்க பௌத்த மதகுருமார்கள் ஒன்றுகூடி கண்டிக்க முன்வர வேண்டும்.

அவர்களும் மௌனமாக இருந்தால் சிங்கள மக்களுக்காக யார் குரல் கொடுப்பது?

இக்கட்டத்தில், கொழும்பில் கூடி பிரிவினை கேட்ட ஊர்வலத்தினர் தொடர்பாக தனது கருத்தை ஜனாதிபதி தெரிவித்தே யாகவேண்டும்.

சுருங்கச் சொன்னால், ஜனாதிபதி தனது மௌனத்தை கலைக்க வேண்டும்." என்று கூறப்பட்டுள்ளது.

(யாவுமே கலப்படமில்லாத கற்பனை)


அருள் ஜுவலர்ஸ்
AROL JEWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


அப்துல்லா. எம். ஹசன். எகிப்து நாட்டவர். அவர்தான் டொல்பின் மீது சவாரி செய்கிறார். அன்புடன் அணைத்து முத்தமிடுகிறார்.

டொல்பின் மீனுடன் அப்துல்லாவுக்கு ஏற்பட்ட சந்திப்பு சுவையானது. செங்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தார் அப்துல்லா. அப்போது கடலின் மேற்பரப்பில் தோன்றி டொல்பின் வேடிக்கை காட்டி கடலுக்குள் மறைவதும், தலையை நீட்டி பார்ப்பதுமாக இருந்தது. உடனே 'உல்பீன்' என்று உரத்துக் கூவினார் அப்துல்லா. என்ன ஆச்சரியம், அவரது படகில் தாவி ஏறிவிட்டது டொல்பின். அன்றிலிருந்து டொல்பினும், அப்துலாவும் காதலர்களாகிவிட்டனர்.

அப்துல்லா தன்மீது சவாரிசெய்து சாகசம் பயில டொல்பின் தாராளமாக அனுமதிக்கிறது. கிட்டத்தட்ட ஒருவருட காலமாக இந்த அதிசய நட்பு தொடர்கிறது. செங்கடலில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு சென்று 'உல்பீன்' என்று குரல் கொடுத்தால் போதும், குரலை அடையாளம் தெரிந்து தாவிவந்துவிடும் டொல்பின்.

டொல்பின் சவாரியின்போது கடலுக்குள் எடுக்கப்பட்ட படம் தான் மேலே இருக்கிறது.

இது மனிதக்காதல் அல்ல. கடலையும் தாண்டி புதுமையானது.

மார்ச் 17, 1996- அவுஸ்திரேலிய கிரிக்கெட் கப்டன் மாட்டின் குரோவுக்கு மறக்கமுடியாத நாள்.

வழக்கமாக பதட்டமேயில்லாமல், மைதானத்தில் கைகளை மார்புக்கு குறுக்கே கட்டிக்கொண்டு நிற்பவருக்கு அன்று மட்டும் உச்சிமுதல் உள்ளங்கால் வரை டென்ஷன்.

இந்தியாவைத்தவிர ஏனைய அணிகள் தமக்கு ஒரு பொருட்டல்ல என்றுதான் அவுஸ்திரேலிய அணி தப்புக்கணக்குப் போட்டிருந்தது.

உலகக்கிண்ண அரையிறுதியாட்டத்தில் மேற்கிந்திய அணிக்கு கைக்கெட்டிய வெற்றியை வாய்க்கெட்டாமல் செய்ததில் மாட்டின் குரோவின் திட்டமிட்ட வியூகம் கைகொடுத்தது.

இலங்கைக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் மாட்டின் குரோவின் வியூகம் தகர்ந்தது.



அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11


# காதலுக்கு வேலியில்லை ஓ மீனே! அழகிய மீனே!






# போனதே – போனதே


உலகக் கிண்ணத்தை தவற விட்டதைவிட இலங்கைக்கு வரமறுத்து, அதே இலங்கை அணியிடம் தோல்வியை சந்தித்ததுதான் அவுஸ்திரேலிய அணிக்கு சோகம்.

எனினும்-உலகில் மிகச்சிறந்த கிரிக்கெட் கப்டன்களில் மாட்டின் குரோ முன்னணியில் இருக்கிறார்.

இக்கட்டான நேரத்தில் திட்டமிட்டு எதிரணிக்கு வலை விரிப்பதில் கில்லாடி. மாட்டின் குரோ தலைமையில் அவுஸ்திரேலிய அணி தோல்விகளைச் சந்திப்பது. மிக அரிதாகவே இருக்கும்.



# தருவது வியோடை



டொல்பினுடன் அப்துல்லா விளையாட்டுக் காட்டுவதை புகைப்படம் எடுக்க பணம் கொடுக்க வேண்டும். அதன் மூலமாக தனதுவருவாயையும் கவனித்துக் கொள்கிறார் மனிதர். ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்.


Optica
வீடியோ கசெட்ஸ்
(பிளாஸ்ரிக் கவர்)
&
ஸ்பூல்ஸ்
உயர்தரம்✓
E180,E120,E150 Etc.


RBW Industries (Pvt) Ltd.
☎ 503185,730757 Fax:733649


# –நகர்ந்தால்– தொலைந்தாய்!




1988இல், நியூசிலாந்துக்கெதிராக 62 பந்தில் 100 ரன்களை குவித்து சாதனை படைத்தவர் அஸாருதீன். அவரது சாதனையை 48 பந்துகளில் முறியடித்திருக்கிறார் ஜெயசூரியா.

ஒரு இன்னிங்ஸ்சில் 11 சிக்ஸர், ஒரு ஓவரில் 4 சிக்ஸர் உட்பட 30 ரன்கள் என்று ஒரே போட்டியில் மூன்று சாதனை. வியப்பில் கிரிக்கெட் ரசிகர்கள் உறைந்து போயினர்.

வந்தால் வா, வராவிட்டால் போ, அடித்தால் விளாசல், இல்லாவிட்டால் அவுட். தற்காப்பு ஆட்டத்தில் அக்கறையில்லை. ஆரம்பமே ஓங்கி அடிக்கும் தாக்குதல்தான். அதுதான் ஜெயசூரியா ஸ்டைல். சாதனை படைத்தும்கூட அலட்டிக்கொள்ளாததும் விசேஷ தகுதி.

இலங்கை அணிக்கு எதிர்காலத்தில் இவர் தலைமை தாங்குவார்.

# சூரய்யா – சூரியா



இயன் ஹீலி- அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி விக்கெட் கீப்பர். எதிரணி ஆட்டக்காரரின் பின்னால் நின்று வித்தையைக் காட்டிவிடுவார். துடுப்பாடுபவர் கிரீஸை விட்டு கொஞ்சம் நகர்ந்தால் அவரது விக்கெட்டை தூக்கிவிடுவார். சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் 200 விக்கெட்டுக்கள் சாய்த்த விக்கெட் கீப்பர் இவர்தான்.


ஷேன் வோர்ணின் பந்து வீச்சுக்கு மெருகூட்டும் ஆலோசகரும் இவர்தான் என்பது பலருக்கு தெரியாது. ஷேன் வோர்ண் இவர்மீது மகாபிரியம் வைத்திருக்கிறார். இயன் ஹீலிக்கு இப்போது 32 வயது.

அவுஸ்திரேலிய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் இவர்தான். கிரிக்கெட் தவிர, கூடைப்பந்து, ரகர், கால்பந்து போன்றவற்றிலும் திறமை இருக்கிறது.

இன்றுவரை உலகில் உள்ள ரயில் வண்டிகளில் அதிவேக ரயில் வண்டி இதுதான். ஃபிரான்ஸ் நாட்டின் அதிவேக ரயில் சேவையில் இது பயன்படுகிறது. இதன் பெயர் T.G.V. மணிக்கு 320.2 மைல் (515.3 கிலோ மீற்றர்) உச்சவேகத்தில் செல்லும். இது உலக சாதனையாக கின்னஸில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

காற்றை குத்திக் கிழித்துச் செல்லும் அமைப்பில் இது உருவாக்கப் பட்டுள்ளது. அசத்தல் வேகம்.

# கிளப்புது பாரு தூளு






இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்லாவ, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.